உ

श्रीगुरुभ्यो नमः


स्मृतिमुक्ताफलम्

ஸ்ம்ருதி முக்தாபலம்

श्रीवैद्यनाथदीक्षितविरचितम्

आशौचकाण्डः ஆசௌசகாண்டம்

चतुर्थो भागः நான்காவது பாகம்



வெளியிடுபவர்:

வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபை

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம்,

காஞ்சீபுரம்

உ

श्रीगुरुभ्यो नमः

स्मृतिमुक्ताफलम्

श्रीवैद्यनाथदीक्षितविरचितम्

चतुर्थो भागः

द्रविडानुवादयुतः

ஸ்ம்ருதிமுக்தாபலம்

ஸ்ரீ வைத்யநாததீக்ஷிதர் இயற்றியது

நான்காவது பாகம்

ஆசௌசகாண்டம்

தமிழுரையுடன்

தொகுத்தளிப்பவர் :

வைத்ய S.V. *ராதாகிருஷ்ண சாஸ்திரி, ஸ்ரீரங்கம்*

வெளியிடுவோர் :

வேததர்ம சாஸ்திர பரிபாலன ஸபை
(கும்பகோணம்) சார்பில் ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடம்
ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம், 1, சாலைத் தெரு,
காஞ்சீபுரம் - 631 502
கர - 2011

SMRITI MUKTAPHALAM - PART-IV

Asoucha Kandam with Tamil Translation

Khara - 2011 - II Edition

Edited by :

Vaidya S.V. Radhakrishna Sastri

Srirangam

Published on behalf of

Veda Dharma Sastra Paripalana Sabha

Regd. Office Kumbakonam

by **Sri Kanchi Kamkoti Peetam Srimatam Samsthanam**

1, Salai Street, Kancheepuram-631 502

Lasertypeset & Printed at :
V.K.N. ENTERPRISES
164. R..H. Road, Mylapore, Chennai-4, **98402 17036**

Phone : 044-2722115 e:mail:skmkanci@md3.vsnl.net.in
Fax : 044-27224305, 37290060

Sri Chandramouleeswaraya Namaha:
Sri Sankara Bhagavazdpadacharya
Paramaparagatha Moolamnaya Sarvagnapeeta:
His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL
Srimatam Samasthanam
No.1, Salai Street, KANCHEEPURAM - 631 502.

मङ्क्त्वा सत्स्मृतिसागरे सुगहने लब्ध्वा वरं मौक्तिकं
श्रुत्यम्बागलभूषणं समतनोत् श्रीवैद्यनाथो महान् ।
भूयस्तद्द्रविडानुवादकनकैस्तन्वन् स्रजं सुन्दरीं
राधाकृष्णसुधीस्सदा विजयतां श्रीचन्द्रमौलीक्षणात् ॥

अक्षैर्मा दीव्येति आम्नायामृताम्बुधिबिन्दुभिः निखिलस्मृतिनिचयेन च प्रभुसम्मिततया, इतिहासपुराणबृन्दमाक्षिकधारया सुहृत्सम्मिततया, काव्यरसानुभूतीक्षुसारवर्षैः कान्तासम्मिततया च प्रतिपादितः धर्मकलापः सूक्ष्मगतिको विलसति । धर्म एव विशिनष्टि समाजं समजात् । मनीषिमनोगोचरस्य तस्य धर्मस्यावगतये परमकारुणिका ऋषयः स्मृतिग्रन्थान् विलिख्य महदुपकारमतानिषुः । धर्मकलापापकलनकलापटौ कलौ मानवानां बोधनाय वैद्यनाथदीक्षिताख्यो विद्वदग्रेगण्यः स्मृतिसागारं निर्मथ्य

पीयूषमाचिन्वन् स्मृतिमुक्ताफलाख्यं ग्रन्थमरीरचत् । सोऽयं ग्रन्थः वर्णाश्रमधर्मकाण्डः, आह्निककाण्डः, आशौचकाण्डः, श्राद्धकाण्डः, तिथिनिर्णयकाण्डः तथा प्रायश्चित्तकाण्डश्चेति काण्डषट्केन निखिलमपि धर्मं प्रतिपादयति । यं वै रक्षसि धर्मं त्वं धृत्या च नियमेन च । स वै राघवशार्दूल धर्मस्त्वामभिरक्षत्विति श्रीमद्रामायणवचनेन धर्मो रक्षति रक्षित इति सुष्ठु अवगम्यते । लोकानां धारणाद्धर्म इति सार्थाभिधां बिभ्रतो धर्मस्य सेवनं लोकव्यवस्थायाः स्थिरीकरणमिति न संशीतिः । सोऽपि धर्मः अनेन ग्रन्थरत्नेन सुष्ठ्ववगम्यते । तस्यैतस्य ग्रन्थस्य वर्णाश्रमधर्मकाण्डादिः भागशः **वैद्यश्री शिवे. राधाकृष्णशास्त्रिभिः** द्रविडानुवादेन सह परिष्कृत्य वेदधर्मशास्त्रपरिपालनसभाद्वारा प्रकाश्यते इति ज्ञात्वा भृशं मोदामहे । सोऽयं यत्नः श्रीमहात्रिपुरसुन्दर्यम्बा-समेत श्रीचन्द्रमौलीश्वरकृपया सफलो भवत्विति ग्रन्थ-सम्पादकः एवमेव ग्रन्थरत्नानि प्रकाशयन्नैहिकामुष्मिकश्रेयो-विलासैः समेधतामिति प्रकाशने साहाय्यकर्तारश्च समस्त-मङ्गलानि अवाप्नुयुः पठितारश्च धर्मसेवनेन निखिलश्रेयांस्यधिगच्छन्त्विति चाशास्महे ।

शङ्करसंवत्सरः २५२०

काञ्चीपुरम्

नारायणस्मृतिः ।

ஆசௌச காண்டம் - முன்னுரை

கண்டர மாணிக்கத்தைச் சார்ந்த அந்தணர் ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் என்ற பேரறிஞர். மூவர்ணத்தினரின் நடைமுறை ஒழுங்கு பற்றி வழிகாட்டுகிற ஸ்ம்ருதி - நிபந்தங்கள் என்ற நூல்களைத் தேடிப் பெற்று, விஷய வாரியாகத் தொகுத்தார். மூவர்ணத்தினரிலும் அந்தணரின் வாழ்க்கை முறையை முக்கிய நோக்கில் கொண்டு அவர் தொகுத்த நூல் ஸ்மிருதிமுக்தாபலம் என்பது. வைத்யநாத தீக்ஷிதீயமென்றே அந்த நூல் அந்தணர் குடும்பங்களில் வழி காட்டி நூலாக முக்கிய இடம் பெற்றது. அந்த ஆறு பகுதிகள் எனப்படும் காண்டங்களில் வர்ணாச்ரம தர்ம காண்டமும், ஆஹ்நிக காண்டமும் வெளி வந்துள்ளன. மூன்றாவதான ஆசௌச காண்டம் இதோ.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய பூஜ்யஸ்ரீ சந்திர சேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சரணர்கள் ஆசாரிய நிலைக்கேற்ற முக்யப் பணியாக வேத தர்மபரிபாலனத்தை ஏற்றனர். அன்று வித்வத் குடும்பங்களுக்கும் அரியதாக இருந்த ஸ்மிருதி முக்தாபலத்தின் ஆறு பாகங்களையும் தமிழ் அனுவாதத்துடன் தாம் உருவாக்கிய வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபையின் மூலம் வெளியிட்டனர். ஸ்மிருதி முக்தாபலத்தின் தனிச் சிறப்பு இது. பல மூல-ஸ்மிருதி நூல்களில் காணப்பட்ட தர்ம சாஸ்திரக் கருத்துக்களை தீவிரமான ஆராய்ச்சி மனப்பான்மையுடன் தொகுக்கும் போது, அவற்றில் கால-தேச-வர்த்தமானங்களை ஒட்டி கருத்து வேறுபாடு காணும் போது, அவற்றில் தன் அறிவுக்கேற்ப ஒன்றை கண்டித்தோ புறக்கணித்தோ விளக்காமல் அவை அவற்றை அப்படியே தொகுத்து அவர் தம் தமக்கேற்ற வழிமுறையை அருகிலுள்ள சிஷ்டர்களான பெரியோர்கள் காட்டியபடி பின்பற்றுவதையே சிறந்த வழி

என நம்மையே நிர்ணயத்திற்கு வரச் சொல்கிறார். தன் கருத்தில் இதுவே சிறந்தது, உரியது என எதையும் வற்புறுத்துவதாகக் காணோம்.

அவர் தொகுத்துத் தந்துள்ள வேறுபட்ட பல கருத்துகளைக் காணும் போது, நம் முன்னோர் ஒவ்வொன்றையும் கசடறத் தீவிரமாக ஆராய்ந்து ஆழ்ந்த தர்ம நம்பிக்கையுடன் தம் நடைமுறையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருப்பதை உணர முடிகிறது.

முன்னூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அந்தணர் குடும்பங்களின் நடைமுறையை உணர்ந்து ஸ்மிருதிமுக்தாபலத்தின் கருத்துகளைத் தமிழக அந்தணமக்கள் உணரும்படி பண்டித மண்டன ஸ்ரீ நாராயண சாஸ்திரி அவர்களின் தமிழாக்கம் அன்றைய அந்தணர் நடைமுறைமொழிப் பாணியில் துலங்குகிறது. இன்றைய நடைமுறை தமிழுக்கும் அதற்குமிடையே இடைவெளி உள்ளதை வைதிக ஸம்ப்ரதாய வல்லுனரது உதவியுடன் தெளியத் தெரிந்து கொள்ளலாம்.

ஸ்மிருதி முக்தாபலத்தின் கருத்துத் தொகுப்பு இன்று அவசியத் தேவை. இன்றைய வழக்குமொழியில் அதை மாற்றாமல் அப்படியே வெளியிடுவது, அந்த ஸமயாசாரத்தை அப்படியே புரிந்துகொள்ள உதவ இயலாததாக ஆகலாம். ஆனாலும் அப்படியே வெளியிடப்படுகிறது. இதனைச் சுருக்கி வழிகாட்டி நூல் அமைத்துத் தருவது இன்றைய வைதிகப் பேரறிஞர்களின் முக்கியக் கடமை. அன்றிருந்ததை அப்படி சிதைவின்றி இன்றையத் தலைமுறையினரிடம் ஒப்படைப்பதே வேத தர்மபரிபாலன ஸபையின் முக்கிய நோக்கம்.

பிரகிருதி என்ற மூலப் பொருள் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்கள் மூலம் உலகைச் சீராக வாழச் செய்கிறது. தெளிவும், ஆர்வமும், ஓய்வும் இந்த முக்குணங்களின் அரிய பண்புகள். ரஜஸும் தமஸும் குண நிலையை இழந்து தோஷ நிலை அடையும் போது, போட்டி,



Sri Chandrasekharendra Saraswati
Sankaracharya of Kanchi Kamakoti Peetam

பொருமை, அறியாமை, தவருக உணர்வது, உண்மை நிலே உணர இயலாத அறிவு மூட்டம், என்று கேடுகள் இடம் பெற்று வாழ்வு சீர் குலேகிறது. இந்நிலே ஏற்படாமல் தடுக்க பண்பாட்டு ஒழுங்குமுறைகளில் சௌசம் முக்கிய இடம் பெறுகிறது. செயற்கையாகத் தூய்மையைக் கடைபிடித்துப் பழகி அதனேயே இயல்பாக - பிரகிருதியாகப் பெற ஆஹ்நிக காண்டம் வழி காட்டியது. இந்த சௌசம் எனும் தூய்மை, அஹிம்ஸை, ஸத்யம், கோபமின்மை, புலனடக்கம், மனவடக்கம், இதற்கேற்ற வாஸநா - ஸம்ஸ்காரங்கள் இவற்றை அமைத்துச் சித்த சுத்தி, அஹங்காரம் மறைய வழி என்று வளர்ந்து ஆத்ம சுத்தி என்ற மேலான சௌசம் கிட்டுகிற ஆஹ்நிக காண்டத்தின் குறிக்கோள் இந்த சௌசத்தைப் பெறுவதே.

சௌசம் இருவகை, வெளிப்படைத் தூய்மை, உள்ளத் தூய்மை என मृज्जलकृतं बाह्यं, आभ्यन्तरं च मनोबुद्ध्योर्नैर्मल्यम् - मायारागादि कालुष्याभावः என பகவத்பாதாசார்யாள் கீதாபாஷ்யத்தில் விளக்குகிருர். சிஷ்டாசாரம் என்ற ஒழுங்கான நடைமுறை - நல்லொழுக்கம் இந்த இரு சௌசங்களுக்கும் உதவும். இந்த சௌசமுறை தடைபடுவது ஆசௌச நிலேயால். அதனே ஆசௌச காண்டம் விளக்குகிறது. ஆசௌசம் - முற்றிலும் தூய்மையின்மை - தன்னேமட்டும் அது கெடுப்பதில்லே. ஸபிண்டர், ஸமாநோதகர், ஸம்பந்தமுடையவர் என அனேவரின் தூய்மையையும் கெடுக்கின்ற சூழ்நிலேயை உருவாக்குகிறது. தூய்மைக் குரிய சடங்குகளே முறைப்படி செய்யமுடியாமல் தடை செய்து பாபமாசைத் துடைக்க இயலாதபடி செய்கிறது. நீராடல் முதலிய தூயச் செயல்களால் உடன் அதனே நீக்கமுடிவதில்லே. அது குறிப்பிட்ட காலவரைவரை அகலுவதில்லே. ஜபம் ஹோமம் வந்தனம் முதலிய நற்பணிகளேப் புரியத் தடையான அசுத்த சூழ்நிலேயை உருவாக்கி மனிதனே அவைகளேச் செய்யத் தகுதியற்றவனுக்குகிறது. தன்

ஜனனத்திலிருந்து மரணம்வரை, தன்னைச் சார்ந்தவரைப் பல நிலைகளில் அசுசியாக்குகிறது. அதேபோல் தன் குலத்தில் ஒரு ஜீவன் தோன்ற முற்பட்டதிலிருந்து அதன் மரணம்வரை அது இந்த ஆசௌசத்தைப் பல அளவுகளில் அனுபவிக்கச் செய்கிறது.

ஜனனமடைந்தவனே மரிக்கிறான். மரித்தவனே மறுபடி ஜனிக்கிறான். புநரபி ஜநநம் புநரபி மரணம் புநரபி ஜநநீ ஜடரே சயனம். இந்த ஸம்ஸாரம் எனும் ஜனன மரணத் தொடர் எளிதில் கடக்க இயலாதது - பஹுதுஸ்தாரம் என்று நினைவுபடுத்துகிறார் ஸ்ரீ பகவத்பாதர். உயிர் நீங்குகிறது. என்ன நேர்கிறது? அன்ன -பிராண - மனோ - விஜ்ஞான ஆனந்தமய கோசங்களால் உருவானவன் அவனும் இவனும் நானும். பிராணமய கோசம் பிரிய முற்பட அன்னமய கோசமாயிருந்த பிருதிவீ முதலிய ஐந்து பூதங்களின் கூட்டு கலைந்து அதது தன் இயல்பு நிலைக்கு திரும்ப 'இயற்கை எய்தினார் - பஞ்சதாமவாப - இறந்தார் - காலமானார் என பூதங்கள் உருவிழக்க, ஜீவன் செயல்பட இயலாத நிலையில். காலம் இன்னதெனக் குறிப்பிடாத காலமாக ஆனார்.

ஜீவனின் அங்கமாயிருந்த பஞ்சபூதங்கள் (இந்திரியம் - மனம் -உடல்) புத்தி, வாஸநா - ஸம்ஸ்கார உருவான சித்தமும் அஹங்காரமும் ஸூக்ஷ்ம நிலையில் அவனது அனுபவித்தது போகப் பாக்கியுள்ள வினையை அனுபவிக்கக் கருவறை தேடி விதி காட்டிய வழியில் வானில் மேகத்தில் கலந்து மழை நீராகி வயலிலுள்ள உணவுப் பொருளான தான்யம் முதலியவற்றில் புகுந்து உணவாகி, தனக்கென விதி தந்தையாக அமைத்து தந்தவனின் வயிற்றில் புகுந்து 49 நாட்கள் தங்கி அவனது வீர்ய அணுவாகி மலமும் மூத்திரமும் கழியுமிடத்தினருகே முதிர்ச்சி பெற்று நீச உறுப்பின் வழியே வெளியாகி, தாயின் நீச உறுப்பின் வழியே அவளுட் புகுந்து கழிவுப் பொருள் தங்குமிடத்தினருகே உள்ள கருவறையில் முன்னரே தனக்கெனக் சுரந்து காத்திருக்கும் தாயின் சோணித

அணுவுடன் கலந்து குழைந்து க்ரமமாக ஒன்பது மாதங்களில் வளர்ச்சி பெற்று விதிப்படி ஆணுகவோ பெண்ணுகவோ வெளியேறுகிருன்.

ஒன்பது மாதங்களாகப் பெற்ற தாயின் தொடர்பின் அடையாளமாக இருந்த தொப்புள் கொடி நறுக்கப்பட்டுத் தனித்துவிடப்படுகிருன். தந்தையின் அங்கமாக 49 நாட்களும் தாயின் அங்கமாக ஒன்பது மாதங்களும் இருந்து உருப் பெற்ற அது இன்று தனி ஜீவன் ஜாதன் எனப்படுகிருன். தந்தை தாயின் மீது உடன் பற்ற இருந்த ஆசௌசம் அவன் பிறந்ததைத் தன்னைச் சார்ந்தவனுக ஆக்கிக்கொள்ள தந்தை செய்கிற ஜாதகர்மம் என்ற ஸம்ஸ்காரத்தைச் செய்யும்வரை ஒதுங்கி நின்று அது செய்து முடிந்ததும் அது அவரைப் பற்றுகிறது. அன்றிலிருந்து அவருக்கு பத்து நாட்கள் ஆசௌசம் என்ற ஆஹ்நிக கருமங்களைச் செய்ய முடியாத தடையும் தூய்மையின்மையும் அவரைப் பற்றி கொள்கின்றன. தான் கருவறையிலிருந்தவரை தனக்கு இன்றியமையாத உணவும் ஊட்டமும் தந்த சத்துப் பொருள் உடன் தூய்மையல்லாதது என முற்றிலுலும் அகற்றப் பெறுகிறது.

கருத்தரித்ததும் 2-3 மாதங்களில் கலைந்தாலும் பின் 7 மாதத்திற்குள் சிதைந்தாலும் 7-8 மாதங்களுக்குப்பின் ப்ரஸவமேற்பட்டாலும் சிசு மரித்துப் பிறந்தாலும் பிறந்து மரித்தாலும் பெற்ருேருக்கு ஆசௌசம் என ஜனன மரணா சௌசங்கள் தொடர்கின்றன. வாழ்வின் இறுதியில் மரணத்தைத் தொடர்ந்தும் ஆசௌசம். பெண் ரஜஸ்வலையானுல் அவளுக்கு மட்டும் மூன்றுநாள் ஆசௌசம்.

கன்யகாதானமாகப் பெற்று ஸஹதர்மசாரிணியாக, இல்லத்தரசியாக ஏற்ற மனைவி வாழ்நாள் முழுவதும் தர்ம சரணத்திற்கு இடத்திலும் வலத்திலுமமர்ந்து துணை புரிந்து அர்த்தாங்கியானவள் ரஜஸ்வலையானுல் சண்டாள ஸ்த்ரீபோல் தீண்டாதவளாக ஒதுக்கப்பட்டவளாகிருள்.

நான்காம் நாள் நீராடியதும் அக்னிஹோத்ராக்னியை உபசரிப்பவளாகிறாள். ப்ரஸவாசௌசத்திலும் தம்பதியிருவருக்கும் பத்துநாளாசௌசம் பொதுவானாலும் இவளுக்குத் தனி அறைவாஸம். 10 நாட்களுக்குப் பிறகும் ஆண் குழந்தையானால் 20 நாட்களுக்கும் பெண் குழந்தையானால் 30 நாட்களுக்கும் பிறகே வீட்டினுள் பாண்டம் தொடச் சுத்தி.

பெண்ணிற்கு இந்த நிலை ஏற்படக் காரணம் புராணத்தில் உள்ளது. அதிதியின் மகன் த்வஷ்டாவிற்கு விருத்ரன் மகன். சூழ்நிலை காரணமாக அஸுரனானான். அவனை இந்திரன் ததீசியின் முதுகெலும்பைப் பெற்று ஆயுதமாக்கிக் கொன்றான். இந்திரனை பிரும்ம ஹத்திபாபம் ஆட்கொண்டது. அதனைப் பங்கிட்டு மூன்றில் ஒருபங்கைப் பெண்களுக்கு வரன் தந்து பாபத்தை அவர்கள்மீது சுமத்தினான். பிள்ளைப்பேறு எளிதில் பெறப் பெண்களுக்கு உதவிய பாபம் மாதத் தீட்டாக அவர்களைப் பற்றிக்கொண்டது.

கருத்தரித்தது நிச்சயமானதும் உரிய தவணையில் பும்ஸவனமும் ஸீமந்தமும் கருவிலுள்ள சிசுவிற்கு ஸம்ஸ்காரமாக அமைகின்றன. ஸம்ஸ்காரம் என - ஸம்யக் - காரம் நன்றாக அமையச் செய்வது - தக்கபடி பண்படுத்துவது என்ற பொருள் கொண்டது. பிறந்த கணத்தில் தொப்புள்கொடி நீக்கம் நிகழும் போதே ஜாதகர்மமும் பத்து நாட்களுக்குப்பின் நாமகரணம், பின் அன்ன பிராசனம், சௌளம்,, அக்ஷராரம்பம் உபநயனம் என ஸம்ஸ்காரங்களால் தூய்மையும் சீரமைப்பும் தகுதி வளர்ச்சியும் பண்பாடும் பெற்ற சிறுவன் (சிறுமி) பின் கௌமாரத்தில் வித்யாப்யாஸம், விவாஹம், எனத் தொடங்கிப் பண்படுத்தப்படுகிறான். வாழ்வின் இறுதியில் ஸர்வபிராயச்சித்தம் செய்து கொண்டு மரணத்தினுட்படுகிறான். பின் புத்ராதிகளால் ஈமக்கடன் என்ற அந்திம ஸம்ஸ்காரம் செய்யப்பட்டு வஸு-ருத்ர-ஆதித்ய ஸ்வரூபர்களாக இது காறும்

நலமருளிய பித்ருக்களுடன் ஸபிண்டனுகச் சேர்க்கப்பட்டு தன் புத்ரன் - புத்ரிகளுக்கு வஸுவாகி தன் தந்தையை ருத்ரராக்கி தன் பிதாமஹரை ஆதித்யராக்கி நாந்தீ முக பித்ருக்களில் ஒருவராக பித்ரு லோகத்திலிருந்து அருள்புரிகிருன். வேறு வடிவில் தன் வினை தீர்க்க ஸூக்ஷ்ம பூதங்கள் முதலானவற்றுடன் தந்தையைத் தேடி அலைந்து மறு பிறப்பிற்கு வழி கோலுகிருன். இவ்வனைத்திற்கும் மரணத்தைத் தொடர்ந்து புத்ரன் முதலானேரால் செய்யப்படுகிற அந்திம ஸம்ஸ்காரங்களும் ஆண்டு தோறும் செய்கிற ச்ராத்தாதிகளும் அவனுக்கு உதவுகின்றன. தான் தன் புத்ராதிகளை ஸம்ஸ்காரங்களால் பண்படுத்தியது போல், தானும் தன் புதல்வர் முதலியவர்களால் ஸம்ஸ்கரிக்கப்பட்டு பித்ரு லோகத்திலும் மறுபிறவியிலும் பண்படுத்தப்படுகிருன். அதை ஆசௌச காண்டத்தைத் தொடர்ந்து வரும் சிராத்த காண்டம் விளக்குகிறது.

வாழ்வின் அனைத்து கோணங்களிலும் உற்ருரும் உறவினரும் நண்பர்களும் ஊராரும் பல நிலைகளில் இந்த ஆசௌசப் பண்பாட்டால் கூடுவதும் பின் பிரிவதுமாக்க் கூடி வாழ்கிற பண்பை அனுபவிப்பார்கள்.

ஆஹ்நிக - ஆசௌச காண்டங்களில் காட்டப்படுகிற வழி இவ்வாறு - அழுக்கு - விழுப்பு > நீராடல், மந்திரத்தால் சுத்தி மடி - சௌசம் என்பது ஆஹ்நிக காண்டம் காட்டுகிற படிகள். ஆசௌசம் - தீட்டு - விலக்கு > சுத்திப் பணிகள் - ஸம்ஸ்காரங்கள் - கடமைகள் - காலவரை > நீராடல், காலவரைவரை விலக்கு, நீத்தார் கடமை, நீராடல், சுற்றுப்புறத் தூய்மை > ஆசௌச நீக்கம் தூய்மை என்பவை ஆசௌச காண்டம் காட்டுகிறபடிகள்.

ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் சிறந்த பணியான வேத தர்ம சாஸ்திர - அநுஷ்டான பரிபாலனத் தொண்டில் மேலும் பேரார்வம் கொண்டு வழி காட்டுகிற ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ

சரணர்களும் ஸ்ரீ சங்கர விஜயேந்திர ஸரஸ்வதீ ஸ்ரீ சரணர்களும் வேததர்ம சாஸ்திர பரிபாலன ஸபையின் பணியாக ஸ்மிருதி முக்தாபலத்தைப் பூர்ணமாக மறுபடி வெளியிட அருள்புரிகிருர்கள். அப்பணியில் இவனுக்கும் பங்கு கிட்டியது இவனது பெரியோர்கள் செய்த புண்ய பரிபாகம். இதை இவன் சக்திக்கேற்ப முயன்று சித்திபெற அந்த பூஜ்ய ஸ்ரீ சரணர்களின் அருளே வழிகாட்டுகிறது. அவர்களது திருவடிகளில் இதனை ஸமர்ப்பித்து இப்பணியில் உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீரங்கம்
கர - சித்திரை வைத்ய **S.V. ராதாகிருஷ்ண சாஸ்திரீ**
20.4.11

आशौचकाण्डः - विषयानुक्रमणिका

ஆசௌசகாண்டம் - பொருளடக்கம்

பக்கம் எண்



ओं नमः परमात्मने ।

वैद्यनाथदीक्षित विरचिते स्मृतिमुक्ताफले

चतुर्थो भागः

आशौचकाण्डः

—*—

आशौचप्रकरणम्

तत्र शङ्खः-दानं प्रतिग्रहो होमः स्वाध्यायः पितृकर्म च । प्रेतपिण्डक्रियावर्जमाशौचे विनिवर्तयेत् इति ।। आशौचशब्दार्थः स्मृतिचन्द्रिकायामभिहितः । सपिण्डादिजनने मरणे वा सति यदप्रायत्यं दानादि कर्मस्वयोग्यतापादकं पापविशेषात्मकं वा तदाशौचशब्देन बोध्यते इति । तथा भट्टाचार्यैः - पापक्षयोऽपि वा शुद्धिः कर्मयोग्यत्वमेव वा इति शुद्धिपदार्थं ब्रुवद्भिस्तद्विपरीतस्य जननमरणनिमित्त पापविशेषस्य दानादि कर्मानुष्ठानायोग्यत्वस्य वा मतभेदेनाशौच-शब्दाभिधेयत्वं ज्ञापितम् ।

ஸ்ரீ குருப்யோ நம:

வைத்யநாத தீக்ஷிதரால் இயற்றப்பட்ட ஸ்ம்ருதிமுக்தாபலத்தில்

ஆசௌச காண்டம்

ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர், ஸ்ம்ருதி முக்தாபல க்ரந்தத்தில் 1. வர்ணாச்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிக காண்டம் இவைகளை நிரூபித்த பிறகு, ஆசௌச காண்டத்தை ஆரம்பிக்கின்றார். முன் நிரூபிக்கப்பட்ட ஆஹ்னிக கர்மங்களுக்குச் சில காலத்தில் விலக்கு ஏற்படுமாதலால், ஆசௌசமும் ஒரு நிமித்தமாதலால் அதை நிரூபிக்கின்றார்.

ஆசௌச ப்ரகரணம்

சங்கர்:- தானம், ப்ரதிக்ரஹம், ஹோமம், அத்யயநம், பித்ரு கார்யம் இவைகளை ஆசௌச காலத்தில் நிவர்த்திக்க வேண்டும். ப்ரேதனை உத்தேசித்துச் செய்யும் பிண்டதான க்ரியையைத் தவிர்த்து.

ஆசௌச சப்தார்த்தம் - ஆசௌச சப்தத்தின் பொருள் ஸ்ம்ருதி சந்த்ரிகையில் சொல்லப்பட்டுள்ளது:- ஸபிண்டர் முதலியவரின் பிறப்பாவது, இறப்பாவது நேர்ந்தால் எந்த அசுத்தி, தானம் முதலிய கர்மங்களில் யோக்யதையில்லாத் தன்மையைச் செய்வதாயுள்ளதோ, அல்லது பாபவிசேஷ ரூபமாயுள்ளதோ அது ஆசௌச சப்தத்தால் சொல்லப்படுகிறது. அவ்விதமே, **பட்டாசார்யர்** அவர்கள் ''சுத்தி என்பது பாபக்ஷயம், அல்லது கர்மங்களில் யோக்யனாகும் தன்மை'' என்று சுத்தி பதத்திற்குப் பொருளைச் சொல்வதால், சுத்திக்கு விபரீதமாகியது, ஜநந மரண நிமித்தமான பாபவிசேஷம். அல்லது கர்மானுஷ்டானத்தில் யோக்யதையில்லாமை, என்று மத பேதத்தால் ஆசௌச சப்தத்திற்குப் பொருள் தெரிவிக்கின்றார்.

विज्ञानेश्वरोऽपि— आशौचशब्देन कालस्नानापनोद्यः पिण्डोदक दानविधेरध्ययनादिपर्युदासस्य च निमित्तभूतः पुरुषगतः कश्चनातिशयः प्रतिपाद्यते इति ।। कालापनोद्यं - अन्तः शव- निमित्तग्रामाद्याशौचम् । स्नानापनोद्यम् - ज्ञायमानसम्बन्धबन्धु- मरणाद्यघम् । कालस्नानाभ्यामपनोद्यम् - सपिण्डादिजननमरणा- शौचमित्यर्थः । सङ्ग्रहेऽपि - निमित्तं पिण्डदानादेः पुरुषस्थम- शुद्धिकृत् । कालस्नानापनोद्यं यत्तदाशौचमितीर्यते इति । तच्चाशौचं द्विविधम् । कर्मानधिकारलक्षणम्, अस्पृश्यत्वलक्षणं च, आशौचे वर्जयेत् कर्म नित्यनैमित्तिकादिकम् । आशौचिनस्तथा स्पर्शं स्पृष्ट्वा स्नानेन शुद्ध्यति इति स्मृतेः ।

விஜ்ஞாநேச்வரரும்:- *'ஆசௌச சப்தத்தால் காலத்தாலும், ஸ்நாநத்தாலும் நிவர்த்திக்கத் தகுந்ததும், பிண்டோதக தானவிதிக்கும், அத்யயநம் முதலியதின் நிஷேதத்திற்கும் நிமித்தமாயுள்ளதும், புருஷனிடமுள்ளது மான ஒரு அதிசயம் விளக்கப்படுகிறது' என்றார். காலத்தால் நிவர்த்திக்கக் கூடியது - சவம் க்ராமத்திற்குள்ளிருப்பதால் ஏற்படும் க்ராமாசௌசம் முதலியது. ஸ்நாநத்தால் நிவர்த்திக்கத்தக்கது - ஸம்பந்தம் தெரிந்துள்ள பந்துவின் மரணம் முதலியதாலுண்டாகும் ஆசௌசம். காலம் ஸ்நாநம் இரண்டினாலும் நிவர்த்திக்கக் கூடியது - ஸபிண்டன் முதலியவரின் ஜநந மரண நிமித்தாசௌசம், என்று பொருள்.* **ஸங்க்ரஹத்திலும்**:- *பிண்டதானம் முதலியதற்குக் காரணமாகியதும், புருஷனிடமிருப்பதும், அசுத்தியைச் செய்வதும், கால ஸ்நானங்களால் நிவர்த்திக்கத் தக்கயுதாமுள்ளதெதுவோ, அது ஆசௌசமெனப்படுகிறது. அந்த ஆசௌசம் இரண்டு விதமாயுள்ளது. 'கர்மாநதிகார லக்ஷணம்' என்றும், 'அஸ்ப்ருச்யத்வ லக்ஷணம்' என்றும். 'ஆசௌசத்தில் நித்யம் நைமித்திகம் முதலிய கர்மத்தை வர்ஜிக்கவும்' என்றும், 'ஆசௌசியைத் தொடக்கூடாது, தொட்டால்*

தொட்டவன் ஸ்நாநத்தால் சுத்தனுகிருன்' என்றும் ஸ்ம்ருதி இருப்பதால்.

आशौचे सन्ध्योपासनादि ।

तथा च कर्माधिकारपरिपन्थित्वादाशौचस्य सन्ध्याद्युपासनस्यापि निवृत्तिप्राप्तावपवादमाह पराशरः - उपासने च विप्राणामशुचिः पुनरेव सः । ब्रह्मचारी गृहे येषां भूयते च हुताशनः । संपर्कं चेन्न कुर्वन्ति न तेषां सूतकं भवेत् इति । उपासनं - सन्ध्यावन्दनम् । तस्मिन् प्रसक्ते तात्कालिकी शुद्धिर्भवति । विप्रग्रहणं क्षत्रियादीनामप्युपलक्षणम् । ब्रह्मचारी उपकुर्वाणो नैष्ठिकश्च । येषां गृहे अग्निहोत्रमनुष्ठीयते, तेषामग्निहोत्रानुष्ठानकाले नास्त्याशौचम् । यदि ते आशौचिभिः संसर्गं न कुर्युरित्यर्थः ।

ஆசௌசத்தில் ஸந்த்யோபாஸநம் முதலியது

அவ்விதமிருப்பதால், ஆசௌசம் கர்மாதிகாரத்திற்கு விரோதியாகியதால், ஸந்த்யோபாஸநம் முதலியதற்கும் நிவ்ருத்தி ப்ராப்தமாகும்போது, சிலவிடத்தில் அபவாதத்தைச் சொல்லுகிருர், பராசரர்:- ''விப்ரர்களுக்கு ஸந்த்யாவந்தநத்தில் ஆசௌசமில்லை. பிறகு அவன் அசுத்தனே. ப்ரம்ஹசாரியும் சுத்தன். எவர்களின் க்ருஹத்தில் அக்னிஹோத்ரம் அனுஷ்டிக்கப்படுகிறதோ அவர்களுக்கும் அக்னிஹோத்ரானுஷ்டான காலத்தில் ஆசௌசமில்லை. அவர்கள் ஆசௌசிகளுடன் ஸம்பர்க்கம் செய்யாமலிருந்தால்'' என்று. இங்கு 'விப்ரபதம்' க்ஷத்ரியாதிகளுக்கும் உபலக்ஷணம். ப்ரம்ஹசாரீ = உபகுர்வாணனும், நைஷ்டிகனும்

अत्र मरीचिः — सूतके कर्मणां त्यागः सन्ध्यादीनां विधीयते इति । कात्यायनश्च — सूतके प्रेतके च सन्ध्योपासनादि नित्यकर्माणि स्वाध्यायदानप्रतिग्रहांश्च वर्जयेत् इति ।

स्मृत्यन्तरेऽपि — राष्ट्रक्षोभे नृपाक्षिप्ते रोगार्ते शावसूतके । सन्ध्यावन्दनविच्छित्तिर्न दोषाय कदाचन इति । विष्णुपुराणेऽपि– सर्वकालमुपस्थानं सन्ध्ययोः पार्थिवेष्यते । अन्यत्र सूतकाशौच-विभ्रमातुरभीतितः इति । जाबालिः - सन्ध्या पञ्चमहायज्ञा नैत्यकं स्मृतिकर्म च । तन्मध्ये हापयेदेतदाशौचान्ते पुनः क्रिया इति । नैत्यकं - नित्यश्राद्धम् । स्मृतिकर्म - स्मृत्युक्तं कर्म देवपूजादिकम् । तन्मध्ये - आशौचमध्ये, हापयेत् - त्यजेदित्यर्थः ।

மரீசி:- *ஆசௌசத்தில் ஸந்த்யை முதலிய கர்மங்களுக்கு த்யாகம் விதிக்கப்படுகிறது.* **காத்யாயனரும்** *:- ஸூதகத்திலும், மரணாசௌசத்திலும், ஸந்த்யாவந்தனம் முதலிய நித்யகர்மங்களையும், அத்யயநம், தானம், ப்ரதிக்ரஹம் இவைகளையும் விடவேண்டும்.* **மற்றொரு ஸ்ம்ருதியிலும்:**- *தேசக்ஷோபத்திலும், ராஜாஜ்ஞையிலும், ரோகபீடையிலும், சாவாசௌசத்திலும், ஜநநாசௌசத்திலும் ஸந்த்யா வந்தனத்தை விடுவது ஒருகாலும் தோஷாவஹமாகாது.* **விஷ்ணு புராணத்திலும்:**- *அரசனே! ஸந்த்யாவந்தனம் எக்காலங்களிலும் விதிக்கப்படுகிறது. ஜநநாசௌசம், மரணாசௌசம், சித்தப்ரமம், ரோகம், பயம் இவைகளுண்டாகிய காலத்தைத் தவிர்த்து.* **ஜாபாலி:**- *ஸந்த்யோபாஸநம், பஞ்சமஹா யஜ்ஞங்கள், நித்யச்ராத்தம், தேவபூஜை முதலிய ஸ்ம்ருத்யுக்த கர்மம் இவைகளை ஆசௌச மத்யத்தில் விடவேண்டும். ஆசௌசத்தின் முடிவில் மறுபடி செய்ய வேண்டும்.*

आशौचे सन्ध्याकर्मनिषेधप्रतिपादकानि मरीच्यादि वचनानि वाचनिकमन्त्रप्रयोगनिषेधाभिप्रायाणि । यदाह पुलस्त्यः - सन्ध्यामिष्टिं चरुं होमं यावज्जीवं समाचरेत् । न त्यजेत् सूतके वाऽपि त्यजन् गच्छेदधो द्विजः । सूतके मृतके चैव सन्ध्याकर्म समाचरेत् । मनसोच्चारयेन्मन्त्रान् प्राणायामादृते द्विजः इति । प्राणायामव्यतिरिक्त मन्त्रान्मनसोच्चारयेत् । प्राणायाममन्त्रांस्तु

मनसाऽपि नोच्चारयेत्। अमन्त्रकमेव प्राणायामं कुर्यादिति यावत्। सूतके मृतके कुर्यात् प्राणायाममन्त्रकम् । मनसोच्चारयेन्मन्त्रान् मार्जनादिषु कर्मसु इति स्मरणात्।

ஆசௌசத்தில் ஸந்த்யாகர்மத்தை நிஷேதிக்கின்ற மரீசி முதலியவர்களின் வசனங்கள் வாக்கினால் மந்த்ரோச்சாரணத்தை நிஷேதிப்பதில் தாத்பர்ய முள்ளவைகளாம். ஏனெனில், **புலஸ்த்யர்:-** ஸந்த்யாவந்தனம், இஷ்டி, சரு, ஹோமம், இவைகளை உயிருள்ள வரையில் செய்யவும். ஆசௌசகாலத்திலும் விடக்கூடாது. விடும் ப்ராம்ஹணன் பதிதனாவான். ஸூதகத்திலும், ம்ருதகத்திலும் ஸந்த்யோபாஸநம் செய்ய வேண்டும். மந்த்ரங்களை மனதால் உச்சரிக்க வேண்டும். ப்ராணாயாமத்தைத் தவிர்த்து. ப்ராணாயாம மந்த்ரங்களைத் தவிர்த்த மந்த்ரங்களை மனதால் உச்சரிக்க வேண்டும். ப்ராணாயாம மந்த்ரங்களையோ மனதினாலும் உச்சரிக்கக் கூடாது. மந்த்ரமில்லாமலே ப்ராணாயாமத்தைச் செய்ய வேண்டுமென்பது பொருள். "ஸூதக ம்ருதகங்களில் ப்ராணாயாமத்தை மந்த்ரமில்லாமல் செய்ய வேண்டும். மார்ஜநாதி கர்மங்களில் மந்த்ரங்களை மனதால் உச்சரிக்க வேண்டும்." என்று ஸ்ம்ருதி இருப்பதால்.

मनसोच्चारयेन्मन्त्रानित्येतदञ्जलिप्रक्षेपव्यतिरिक्तविषयम् । यदाह पैठीनसिः - सूतके सावित्र्याऽञ्जलिं प्रक्षिप्य प्रदक्षिणीकृत्य सूर्यं ध्यायन्नमस्कुर्यात् इति । सन्ध्याविधावुक्तसावित्रीमन्त्रस्येह पुनर्वचनं मनसोच्चारणनिवृत्त्यर्थं, तेन सावित्रीमन्त्रस्योच्चारणं वाचा कर्तव्यं इति चन्द्रिकायाम् । व्यासोऽपि–प्रक्षिपेत् सूतके त्वर्घ्यं गायत्रीं तु समुच्चरन् । दत्वा प्रदक्षिणं कुर्यात् सूर्यं ध्यायेत् द्विजोत्तमः । दशकृत्वस्तु गायत्रीं मनसैवाशुचिः स्मरेत् इति । आश्वलायनः - आपन्नश्चाशुचिः काले तिष्ठन्नपि जपेद्दश इति।



शवस्पृष्टिं च इति श्रुतेः । न च होम इति सामान्योक्तिबला दग्निहोत्रौपासनादिकमपि निवर्तनीयमिति वाच्यम् । यत आह याज्ञवल्क्यः – वैतानौपासनाः कार्याः क्रियाश्च श्रुतिचोदिताः इति । वैतानाः - गार्हपत्याद्यग्निसाध्याः, यावज्जीवमग्निहोत्रं जुहोति, यावज्जीवं दर्शपूर्णमासाभ्यां यजेत इत्यादि श्रुतिचोदिताः, तथैकाग्निसाध्याः औपासन होमाः कार्याः । अग्निहोत्रादिकं स्वयं कुर्यात् । औपासनादिहोममसगोत्रेण कारयेदित्यर्थः । तथा च गोभिलः– अग्निहोत्रे तु होमार्थं शुद्धिस्तात्कालिकी स्मृता । पञ्चयज्ञान्न कुर्वीत अशुद्धः पुनरेव सः इति ।

ஆபஸ்தம்பரும்:- *'அசுத்தனாயிருப்பவன் தேவதைகளை உச்சரிக்கக் கூடாது' என்றார். த்யானத்தில் தோஷமில்லை. 'மனத்திற்கு அசுத்தி என்பதில்லை. ரஜஸ்வலை, ப்ரஸவித்தவள், சவத்தை ஸ்பர்சித்தவன் இவர்களைத் தவிர்த்து' என்று ச்ருதியிருப்பதால். 'ஹோமம் என்று ஸாமான்யமாய் சொல்லியிருக்கும் பலத்தால் அக்னிஹோத்ரம் ஒளபாஸநம் முதலியதும் நிவர்த்திக்கத்தக்கது' என்று சொல்லக் கூடாது. ஏனெனில்,* **யாஜ்ஞவல்க்யர்**:- *கார்ஹபத்யம் முதலிய அக்னிகளால் ஸாத்யங்களாயும், 'உயிருள்ளவரை அக்னிஹோத்ரம் செய்ய வேண்டும், தர்சபூர்ணமாஸங்களைச் செய்ய வேண்டும், என்பது முதலிய ச்ருதிகளால் விதிக்கப்பட்டவைகளுமான க்ரியைகளும், ஒளபாஸநாக்னிஸாத்யமான க்ரியைகளும் செய்யப்பட வேண்டும்' என்றார். அக்னிஹோத்ரம் முதலியதைத் தானே செய்ய வேண்டும். ஒளபாஸந ஹோமம் முதலியதை ஸகோத்ரனல்லாதவனைக் கொண்டு செய்விக்க வேண்டுமென்பது பொருள். அவ்விதமே,* **கோபிலர்**:- *''அக்னிஹோத்ரத்தில் மட்டில் ஹோமத்திற்காக அக்காலம் மட்டில் சுத்தி சொல்லப்பட்டுள்ளது. பஞ்சமஹாயஜ்ஞங்களைச் செய்யக் கூடாது. அவன் மறுபடி*

அசுத்தனே'' என்றார்.

वैयाघ्रपादः – स्मार्तकर्मपरित्यागो राहोरन्यत्र सूतके । श्रौतकर्मणि तं कालं स्नातः शुद्धिमवाप्नुयात् इति । शङ्खः – अग्निहोत्रार्थं स्नानोपस्पर्शनात्तं कालं शौचम् इति । कण्वः - अग्निहोत्रहवं कुर्यादन्याभावे स्वयं द्विजः । कुर्यात् स्नात्वाऽऽर्द्रवासास्तु तस्मात् कालादृतेऽशुचिः इति ।

வையாக்ரபாதர்:- *ராஹு ஸூதகம் தவிர்த்த மற்ற ஸூதகத்தில் ஸ்மார்த்த கர்மங்களை விடவேண்டும். ஆனால், ச்ரௌத கர்மத்தில் மட்டில் அக்காலத்தில் ஸ்நானம் செய்து சுத்தனாகிறான்.* **சங்கர்:-** *அக்னிஹோத்ரத்திற்காக, அக்காலம் முழுவதிலும் ஸ்நானாசமனங்களால் சுத்தி.* **கண்வர்:-** *ப்ராம்ஹணன் மற்றொருவனில்லாவிடில் தானே அக்னிஹோத்ர ஹோமத்தைச் செய்யவும். ஸ்நானம் செய்து ஈரவஸ்த்ரமுடையவனாய்ச் செய்யவும். அக்காலம் தவிர மற்றக் காலத்தில் அவன் அசுத்தன்.*

मनुः—दर्शं च पूर्णमासं च कर्म वैतानिकं च यत् । सूतकेऽपि त्यजेन्मोहात् प्रायश्चित्तीयते हि सः इति । अत्र चन्द्रिकायाम् – श्रौतानामप्यग्निहोत्रादीनां प्रथमारम्भात् प्रागाशौचे त्याग एव, प्रतिप्रसवविधीनां प्रथमारम्भोत्तरकालानुष्ठेयाग्निहोत्रादिविषयत्वात्, इति । दर्शपूर्णमासयोरनुष्ठानप्रतिपादनमघागमात् प्रागारब्धविषयम्, तथैव शिष्टाचारादिति केचित् । जातूकर्णिः – सूतके तु समुत्पन्ने स्मार्तं कर्म कथं भवेत् । पिण्डयज्ञं चरुं होमं असगोत्रेण कारयेत् इति । पिण्डयज्ञः – पिण्डपितृयज्ञः । चरुः - पार्वणस्थालीपाकः । होमः – औपासनहोमः । एतानघागमात्प्राक् होमार्थं संकल्पितैर्द्रव्यैः, तदभावे अघरहित श्रोत्रियगृहादाहृतैः आशौचरहितेन कारयेदित्यर्थः । बृहस्पतिरपि - सूतके मृतके चैव

अशक्तौ श्राद्धभोजने । प्रवासादिनिमित्तेषु हावयेन्न तु हापयेत् इति । न हापयेत् - न त्यजेदित्यर्थः ।

மனு:- தர்சம், பூர்ணமாஸம், ச்ரௌதாக்னி ஸாத்ய மான கர்மம், இவைகளை ஸூதகத்திலும் அறியாமையால் விட்டவன் ப்ராயச்சித்தத்திற்கு அர்ஹனுகிறான். இங்கு, **சந்த்ரிகையில்:**- "ச்ரௌதங்களாயினும், அக்னி ஹோத்ரம் முதலியவைகளுக்கு முதலாரம்பத்திற்கு முன் ஆசௌசம் ஸம்பவித்தால் த்யாகம்தான் (செய்யக் கூடாது). ஆசௌசத்திலும் செய்யலாமென்ற விதி வசனங்கள் முதலாரம்பத்திற்குப் பிறகு செய்யப்படும் அக்னிஹோத்ர ஹோமம் முதலியதைப் பற்றியதால்" என்றுள்ளது. "தர்சபூர்ண மாஸங்களை அனுஷ்டிக்கலா மென்றது ஆசௌசம் வருவதற்கு முன் ஆரம்பிக்கப் பட்டவைகளின் விஷயத்தைப் பற்றியது. அவ்விதமே சிஷ்டாசாரமிருப்பதால்" என்கின்றனர் சிலர். **ஜாதுகர்ணி:**- ஆசௌசம் உண்டானுல் ஸ்மார்த்த கர்மம் எப்படிச் செய்யப்பட வேண்டும்? (எனில்) பிண்ட யஜ்ஞம், சரு, ஹோமம் இவைகளை ஸகோத்ரனல்லாத ஒருவனுல் செய்விக்கவும். பிண்டயஜ்ஞம் = பிண்டபித்ருயஜ்ஞம். சரு = பார்வணஸ்தாலீ பாகம். ஹோமம் = ஔபாஸந ஹோமம். இவைகளை ஆசௌசம் வருவதற்கு முன்பே ஹோமத்திற்காக ஸங்கல்பிக்கப் பட்ட த்ரவ்யங்களால். அவை ஸம்பவிக்காவிடில் ஆசௌசமில்லாத ச்ரோத்ரிய க்ருஹத்தினின்றும் கொண்டுவரப்பட்ட த்ரவ்யங்களால் ஆசௌசமில்லாத ஒருவனுல் செய்விக்க வேண்டுமென்பது பொருள். **ப்ருஹஸ்பதியும்:**- ஜநநாசௌசம், மரணுசௌசம், சக்தியின்மை, ச்ராத்த போஜநம், அயலூர் செல்வது முதலிய நிமித்தங்களில் பிறரால் ஹோமம் செய்விக்க வேண்டும். விடக்கூடாது.

जाबालिः—वैतानाग्नौ स्वयं कुर्यात् कर्मत्यागो न विद्यते । शालाग्नौ केवलो होमः कार्य एवान्यगोत्रजैः इति । स्मृतिरत्ने –

सूतके होमवत्कर्म तदन्येनैव कारयेत् । अग्निहोत्रं स्वयं कुर्यात् स्नात्वैव नियमोदितम् इति । अनेनैवाभिप्रायेण पैठीनसिरपि — नित्यानि तु निवर्तेरन् वैतानवर्जं शालाग्नौ चैके इति ।

ஜாபாலி:- ச்ரௌதாக்னியில் தானுகவே ஹோமம் செய்ய வேண்டும். ஹோமத்தை விடக்கூடாது. ஔபாஸநாக்னியில் ஹோமத்தை மட்டில் அந்ய கோத்ரிகளாலேயே செய்விக்க வேண்டும். ஸ்ம்ருதி ரத்னத்தில்:- ஆசௌசத்தில் ஹோமமுள்ள கர்மத்தை அன்யனுலேயே செய்விக்க வேண்டும். அக்னிஹோத்ர ஹோமத்தை ஸ்நானம் செய்து நியமத்துடன் தானுகவே செய்யவும். இவ்விதம் அபிப்ராயத்துடனேயே, பைடீநஸியும்:- "நித்ய கர்மங்களெலாம் நிவ்ருத்திக்கும்; அக்னிஹோத்ர ஹோமம் தவிர்த்து. சாலாக்னி விஷயத்திலும் என்று சிலர்" என்றுர்.

संवर्तः—पञ्चयज्ञविधानं तु न कुर्यान्मृतिजन्मनोः । हावयेदन्यगोत्रेण नित्यहोममतन्द्रितः इति । स्मृतिरत्ने — नित्यं नैमित्तिकं कुर्यात् काम्यकर्म न किञ्चन । आधानं पुनराधानं पशुः सौत्रामणी तथा । चातुर्मास्यानि सोमश्च तथैवाग्रयणक्रिया । अकाम्यत्वेऽपि नैतेषां सूतकादावनुष्ठितिः इति ।

ஸம்வர்த்தர்:- ஜநநமரணு சௌசங்களில் பஞ்ச மஹாயஜ்ஞாநுஷ்டாநத்தைச் செய்யக் கூடாது. நித்ய ஹோமத்தை மட்டில் சோம்பலின்றி அன்யகோத்ரியால் செய்விக்கவும். ஸ்ம்ருதி ரத்னத்தில்:- நித்ய நைமித்திக கர்மங்களைச் செய்யலாம். காம்ய கர்மம் ஒன்றையும் செய்யக் கூடாது. ஆதாநம், புநராதாநம், பசு, ஸௌத்ராமணீ, சாதுர்மாஸ்யம், ஸோமம், ஆக்ரயணம் இவைகள் காம்யங்கள் அல்லாதவையாயினும், இவைகளை ஆசௌசம் முதலியதில் அனுஷ்டிக்கக் கூடாது.

सङ्ग्रहे—शावे च सूतकेऽघाख्य कर्मणां त्याग इष्यते । द्रव्याण्यपि प्रदुष्यन्ति स्वाध्यायश्च निवर्तते । अस्पृष्टानां च भाण्डानां दशाहे शुद्धिरिष्यते । द्रव्याणां चापि संस्पर्शे विना मांसं समुत्सृजेत् । सान्ध्यं कर्माग्निहोत्रं च प्रेतकर्माणि चाप्लुतः । कुर्यादन्येन होमं तु कारयेन्नान्यदाचरेत् इति ।

ஸங்க்ரஹத்திலும்:- *அகமெனப்படும் ஜநந மரணாசௌசங்களில் கர்மங்களுக்கு த்யாகம் விதிக்கப்படுகிறது. திரவ்யங்களும் துஷ்டங்களாகின்றன. அத்யயனமும் நிஷேதிக்கப்படுகிறது. தொடப்படாத பாண்டங்களுக்கும் பத்து நாளைக்குப் பிறகு சுத்தி எனப்படுகிறது. ஆசௌச காலத்தில் தொடப்பட்ட த்ரவ்யங்களை த்யஜிக்க வேண்டும், மாம்ஸத்தைத் தவிர்த்து. ஸந்த்யாகர்ம, அக்னிஹோத்ரம், ப்ரேத கார்யங்கள் இவைகளை மட்டும் ஸ்நாநம் செய்து செய்யவும். ஔபாஸந ஹோமத்தை அன்யனால் செய்விக்கவும். மற்ற ஒரு கர்மத்தையும் செய்யக் கூடாது.*

स्मृत्यर्थसारेऽपि—जाताशौचे मृताशौचे त्रेताग्निसाध्याग्निहोत्रदर्शपूर्णमासाद्या नित्यनैमित्तिकाः क्रियाः कार्याः, औपासनाग्निसाध्यास्तु सायंप्रातर्होमपार्वण स्थालीपाकाद्या नित्यनैमित्तिकाः हावनीयाः । सर्वथा न त्यक्तव्याः । यजमानः स्नात्वा आचम्य उद्देशत्यागं कुर्यात् । सर्वं काम्यं वर्ज्यम् । दानप्रतिग्रहपञ्चमहायज्ञ नित्यश्राद्धस्वाध्यायादीनां स्मार्तानां त्याग एव । नित्यस्नानशौचाचमनभोजननियमान् अस्पृश्यस्पर्शस्नानं च कुर्यादेव । तथा च कण्वः – शौचमाचमनं स्नानं नियमं भोजनादिषु । अस्पृश्यस्पर्शनं स्नानं कुर्यादाशौचवान् द्विजः इति । सूतकान्नभोजने सकुल्यानां न दोषः । अन्येषां दातृभोक्त्रोरन्यतरेण ज्ञाते दोषः । उभाभ्यामपरिज्ञाते न दोषः ।

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்திலும்:- ஜநநாசௌசத்திலும், மரணு சௌசத்திலும், ச்ரௌதாக்னி ஸாத்யங்களான அக்னிஹோத்ரம் தர்சபூர்ண மாஸங்கள் முதலிய நித்ய நைமித்திக கர்மங்களைச் செய்ய வேண்டும். ஔபாஸநாக்னி ஸாத்யங்களான நித்ய நைமித்திக கர்மங்களை அன்யனுல் செய்விக்க வேண்டும். எவ்விதத்தாலும் விடக்கூடாது. யஜமாநன் ஸ்நாநம் செய்து உத்தேச த்யாகம் செய்யவும். காம்யகர்மமெதுவும் செய்யத்தகாதது. தானம், ப்ரதிக்ரஹம், பஞ்ச மஹாயஜ்ஞங்கள், நித்ய ச்ராத்தம் அத்யயநம் முதலிய ஸ்மார்த்த கர்மங்களை த்யஜிக்க வேண்டியதே. நித்யஸ்நாநம், சௌசம், ஆசமநம், போஜந நியமம், தீண்டக் கூடாதவர்களின் ஸ்பர்ச நிமித்த ஸ்நாநம், இவைகளைச் செய்யவே வேண்டும். அவ்விதமே **கண்வர்:-** 'சௌசம், ஆசமநம், ஸ்நாநம், போஜநாதிகளிலுள்ள நியமம், தொடக்கூடாதவைகளின் ஸ்பர்சத்தில் விதிக்கப்படும் ஸ்நானம் இவைகளை ப்ராம்ஹணன் ஆசௌசியாயினும் அனுஷ்டிக்க வேண்டும்' என்ருர்'' என்றுள்ளது. ஆசௌசாந்ந போஜனத்தில் ஜ்ஞாதிகளுக்குத் தோஷமில்லை. மற்றவர்களுக்கு, அன்னதாதா, அன்னபோக்தா இவரிருவருக்குள் ஒருவனுல் ஆசௌசமறியப்பட்டிருந்தாலும் போக்தாவுக்குத் தோஷமுண்டு. இருவராலும் அறியப்படாமலிருந்தால் தோஷமில்லை.

तथा च षट्त्रिंशन्मते — उभाभ्यामपरिज्ञातमाशौचं नैव दोषकृत् । एकेनापि परिज्ञाते भोक्तुर्दोषमुपावहेत् इति । द्रव्याणि स्वामिसम्बन्धात्तदघे त्वशुचीनि वै । स्वामिशुद्ध्यैव शुद्ध्यन्ति वारिणा प्रोक्षितान्यपि इति स्मृत्या स्वामिसम्बन्धद्वारा दुष्टत्वेन सर्वद्रव्याणां प्रतिग्रहनिषेधे प्राप्ते केषुचित् द्रव्येष्वनुग्रहमाह— मरीचिः – लवणे मधुमांसे च पुष्पमूलफलेषु च । शाककाष्ठतृणेष्वप्सु दधिसर्पिःपयस्सु च । तिलौषधाजिने चैव पकाऽपक्के स्वयंग्रहः ।

पण्येषु चैव सर्वेषु नाशौचं मृतसूतके इति ॥ पक्वं भक्ष्यजातमपूपादि। अपक्वं तण्डुलादि। पक्वान्ने दोषस्मरणात्।

ஷட்த்ரிம்சன்மதத்தில்:- இருவராலும் அறியப்படாவிடில் ஆசௌசம் தோஷத்தைச் செய்யாததேயாகும். ஒருவனால் அறியப்பட்டிருந்தாலும் புஜித்தவனுக்குத் தோஷத்தைச் செய்யும். "த்ரவ்யங்கள், யஜமானனுக்கு ஆசௌசமிருக்கும் போது அவனது ஸம்பந்தத்தால் அசுத்தங்களாகின்றன. அவை ஜலத்தால் ப்ரோக்ஷிக்கப்பட்டாலும் யஜமானனின் சுத்திகாலத்தாலேயே சுத்தங்களாகின்றன" என்று ஸ்மிருதியால், ஸ்வாமி ஸம்பந்தத்தின் வழியில் தோஷமிருப்பதால் எல்லா த்ரவ்யங்களையுமே ப்ரதிக்ரஹிக்கக் கூடாதென்று நிஷேதம் ப்ராப்தமாகிய பொழுது, சில த்ரவ்யங்களின் விஷயத்தில் அனுக்ரஹத்தைச் சொல்லுகிறார், **மரீசி:-** உப்பு, தேன், மாம்ஸம், புஷ்பம், மூலம், (கிழங்கு) பழம், சாகம், விறகு, புல், ஜலம், தயிர், நெய், பால், எள், மருந்து, தோல் இவைகளையும் பக்வமாகிய அப்பம் முதலியது, பக்வமாகாத அரிசி முதலியது இவைகளையும் தானே எடுத்துக் கொள்ளலாம். பண்டங்களெல்லாவற்றிலுமே ஜநநமரண சௌசங்களில் ஆசௌசம் கிடையாது. பக்வான்னத்தை க்ரஹிக்கக் கூடாது. தோஷம் சொல்லப்பட்டிருப்பதால்.

तथा चाङ्गिराः – अन्नसत्रप्रवृत्तानामाममन्नमगर्हितम् । भुक्त्वा पक्वान्नमेतेषां त्रिरात्रं तु पयः पिबेत्। नाद्याच्छूद्रस्य पक्वान्नं विद्वानाशौचिनोऽपि च । आददीताममेवास्मादवृत्तावैकरात्रिकम् इति । अन्नसत्ररतादेवामं ग्राह्यम् । आपदि तु अन्यस्मादप्याशौचिनः दिनमात्र पर्याप्त तण्डुलादि ग्राह्यम्। पक्वान्नं तु सर्वथा न ग्राह्यमित्यर्थः ।

அங்கிரஸ்:- ''அன்ன ஸத்ரம் வைத்து நடத்துபவரின் ஆமமான அன்னம் நிஷித்தமல்ல. ஆசௌசிகளின் பக்வாந்நத்தைப் புஜித்தால் மூன்றுநாள் முழுவதும் பாலை மட்டும் பருகி உபவாஸமிருக்க வேண்டும். ஆசௌசி, சூத்ரன் இவர்களின் பக்வாந்நத்தைப் புஜிக்கலாகாது. கிடைக்காவிடில், இவரிடமிருந்து ஒரு ராத்ரிக்குப் போதுமான ஆமத்தையே க்ரஹிக்கவேண்டும்'' என்றார். அந்த ஸத்ரம் நடத்துபவனிடமிருந்தே ஆமத்தை க்ரஹிக்கவும். ஆபத்திலோ மற்ற ஆசௌசியினிடமிருந்து ஒரு தின மாத்ரத்திற்குப் போதுமான அரிசி முதலியதை க்ரஹிக்கலாம். எவ்விதத்தாலும் பக்வாந்நத்தை க்ரஹிக்கக் கூடாதென்று பொருள்.

अपक्वतण्डुलादिवत् पक्वापूपाद्यपि अन्नसत्ररतादेव ग्राह्यमित्युक्तं सङ्ग्रहे - भक्ष्यजातं तथा पक्वमपक्वं तण्डुलादिकम् । अन्नसत्ररतस्यैव ग्राह्यमित्यङ्गिरा मुनिः इति । तत्रैव - दधि क्षीरं घृतं शाकं पटु पुष्पं तिलौषधम् । काष्ठं मूलं फलं मांसं मधु कूपाम्बु चाजिनम् । पण्यान्यघेऽपि गृह्णीयात् स्वयं तु स्वाम्यनुज्ञया इति । पटु - लवणम् । अङ्गिराः– यत्तु क्षेत्रगतं धान्यं कूपवापीषु यज्जलम् । अभोज्यादपि तद्भोज्यं यच्च गोष्ठगतं पयः । आमं मांसं मधु घृतं दधि क्षीरमथौषधम् । गुडं तक्रं तथोदश्वित् भोज्यान्येतानि नित्यशः । तदहर्मात्रिवृत्त्यर्थं मामं ग्राह्यं सदाऽऽपदि । आमं पूयति संस्कारैः सम्यक् तेभ्यः प्रतीप्सितम् । तस्मादामं ग्रहीतव्यमन्नं सूतमृतान्तरे इति ।

பக்வமல்லாத தண்டுலம் முதலியதைப் போல், பக்வமான அபூபம் முதலியதையும் அன்ன ஸத்ரம் நடத்துபவனிடமிருந்து தான் க்ரஹிக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. ஸங்க்ரஹத்தில்:- பக்வமான பக்ஷ்யங்கள், அபக்வமான அரிசி முதலியவை இவைகளை அன்ன ஸத்ரம் நடத்துபவனுடையதையே க்ரஹிக்கலாம்

என்றூர் அங்கிரஸ் முனி, என்று. ஸங்க்ரஹத்திலேயே:- தயிர், பால், நெய், சாகம், உப்பு, புஷ்பம், எள், மருந்து, விறகு, கிழங்கு, பழம், மாம்ஸம், தேன், கிணற்றின் ஜலம், தோல், விற்கக் கூடிய வஸ்துக்கள் இவைகளை ஆசௌசத்திலும் யஜமானனின் உத்தரவினுல் தானுகவே எடுத்துக் கொள்ளலாம். அங்கிரஸ்:- வயலிலிருக்கும் தான்யமும், கிணறு, நடைவாபீ இவைகளிலுள்ள ஜலமும், மாட்டுக் கொட்டிலிலுள்ள பாலும், அபோஜ்யான்னனிடமிருந்து கிடைத்தாலும் போஜ்யமே யாகும். ஆமமாம்ஸம், தேன், நெய், தயிர், பால், மருந்து, வெல்லம், தக்ரம், உதச்வித் இவைகள் எப்பொழுதும் போஜ்யங்களேயாம். ஆபத்காலத்தில் அந்தத் தினத்திற்கு மட்டில் போதுமான ஆமத்தை க்ரஹிக்கலாம். அபோஜ்யான்னரிடமிருந்து க்ரஹிக்கப் பட்ட ஆமமும் நன்றாய் ஸம்ஸ்காரங்கள் செய்தால் சுத்தமாகிறது. ஆகையால் ஜநந மரணு சௌசங்களிலும் ஆமத்தை க்ரஹிக்கலாம். தக்ரம் = கால் பாகம் ஜலம் கலந்துள்ள மோர். உதச்வித் = அரை பாகம் ஜலம் கலந்துள்ள மோர். தக்ஷர்:- ஸ்வஸ்தனுயிருக்கும் போதுதான், சொல்லப்பட்டுள்ள இந்த ஆசௌச மெல்லாம். ஆபத்தை அடைந்துள்ள எவனுக்கும், ஆசௌசத்திலும் ஆசௌசமில்லை.

याज्ञवल्क्यः—आपद्गतः प्रगृह्णन् यो भुञ्जानो वा यतस्ततः । न लिप्येतैनसा विप्रो ज्वलनार्कसमो हि सः इति ।। विज्ञानेश्वरीये – सूतके मृतके चापि दुर्भिक्षे भिक्षितं द्विजैः । उपप्लवे च देशस्य तेषामल्पेन निष्कृतिः इति । चन्द्रिकायाम् – दाने विशिष्ट आर्तस्य व्याधिना शुद्धतोच्यते । अनिच्छतोऽपि यो वस्तु दातुं हेमादि वाञ्छति इति । ब्राह्मे— अकालमृत्योः शान्त्यर्थं महादाने च रोगिणाम् इति । आशौचं न विद्यत इत्यनुवर्तते । सङ्ग्रहे – न देयं न प्रतिग्राह्यमघे देयं सदाऽऽपदि इति ।

யாக்ஞவல்க்யர்:- *ஆபத்தை அடைந்த ப்ராம்ஹணன், எவனிடமிருந்து அன்னத்தைப் புஜித்தாலும், பாபத்தால் ஸம்பந்தப்படமாட்டான். அவன், அக்னி, ஸூர்யன், இவர்களுக்குச் சமனல்லவா?* **விக்ஞானேச்வரீயத்தில்:-** *ஜநநா சௌசத்திலும் மரண சௌசத்திலும் துர்பிக்ஷம், தேசோபத்ரவம் இக்காலங்களில் பிக்ஷைவாங்கினால் ப்ராம்ஹணர்களுக்கு ஸ்வல்பமான ப்ராயச்சித்தம் சுத்திகரம்.* **சந்த்ரிகையில்:-** *வ்யாதியினால் பீடிக்கப்பட்டவன் விசேஷமான ஸ்வர்ணாதி தானத்தைச் செய்ய விரும்பினால் தானகாலத்தில் அவனுக்கு அவச்யம் சுத்தி ஏற்படுகிறது.* **ப்ராம்ஹத்தில்:-** *ரோகமுள்ளவர்கள் அகால ம்ருத்யுவைத் தடுப்பதற்காகச் செய்யும் மஹாதாநத்திலும் ஆசௌசமில்லை.* **ஸங்க்ரஹத்தில்:-** *ஆசௌசகாலத்தில் தானமும் கூடாது. ப்ரதிக்ரஹமும் கூடாது. ஆபத்காலமாயிருந்தால் ஆசௌசத்திலும் தானம் செய்யலாம்.*

पुत्रजन्मनि दानाभ्यनुज्ञा ।

पुत्रजन्मनि दानमाह पराशरः — खले यज्ञे विवाहे च सङ्क्रान्तौ ग्रहणे मृतौ । पुत्रे जाते व्यतीपाते दत्तं भवति चाक्षयम् । शर्वर्यां दानमस्तीति नान्यत्र तु विधीयते इति । वृद्धमनुरपि — जाते कुमारे तदहः कामं कुर्यात् प्रतिग्रहम् । हिरण्यधान्यगोवासस्तिलान्न गुडसर्पिषाम् इति ॥ गौतमोऽपि — प्राङ्नाभिवर्धनात् पुण्यं तदहरित्येके इति । आशौचदीपिकायाम् – दाने सुतोदये शुद्धिर्द्विनाड्यौ पितृसन्निधौ । अहोरात्रं तु दूरस्थे पितर्यल्पं गते त्वहः इति । एतच्च जातकर्मप्रकरणे सविस्तरं प्रतिपादितम् ।

புத்ரன் பிறந்தால் தானம் செய்ய அனுக்ஞை

புத்ரன் பிறந்தால் தானத்தைச் சொல்லுகிறார், **பராசரர்:-** *களத்திலும், யாகத்திலும், விவாஹத்திலும்,*

ஸங்க்ரமணத்திலும், க்ரஹணத்திலும், ம்ருதியிலும், புத்ர ஜநநத்திலும், வ்யதீபாதத்திலும் கொடுக்கப்பட்டது குறைவற்றதாகும். இக்காலங்களிலும் ராத்ரியிலும் தானம் செய்யலாம். மற்ற விஷயங்களில் ராத்ரியில் தானம் விதிக்கப்படவில்லை. **வ்ருத்தமனுவும்**:- பிள்ளை பிறந்தால், அந்தத்தினத்தில் அந்த ஜாதாசௌசியினிடமிருந்து, ஸ்வர்ணம், தான்யம், பசு, வஸ்த்ரம், எள், அன்னம், வெல்லம், நெய் இவைகளை ப்ரதிக்ரஹிக்கலாம். **கௌதமரும்**:- கொப்பூழ்க் கொடியைச் சேதிப்பதற்கு முன் உள்ள காலம் புண்யகாலமாகியது. அந்தத் தினம் முழுவதும் புண்யம் என்று சிலர். **ஆசௌசதீபிகையில்**:- பிள்ளை பிறந்தால் தானம் செய்யும் விஷயத்தில், பிதா ஸந்நிதியிலிருந்தால் இரண்டு நாழிகை வரை சுத்தி, அவன் தூரத்திலிருந்தால் ஒருநாள் முழுவதும் சுத்தி, ஸ்வல்பதூரத்திலிருந்தால் ஒருபகல் முழுவதும் சுத்தி, இவ்விஷயம் ஜாதகர்ம ப்ரகரணத்தில் விரிவாய்ச் சொல்லப்பட்டுள்ளது.

अनेकविधाशौचम्।

अनेकविधमाशौचमाह दक्षः—सद्यः शौचं तथैकाहस्त्र्यहश्चतुरहस्तथा। षड्दशद्वादशाहाश्च पक्षो मासस्तथैव च। मरणान्तं तथा चान्यत् पक्षाश्च दश सूतके इति। दश पक्षा इत्युपलक्षणम्, गर्भस्रावे मासतुल्या निशाः शुद्धेस्तु कारणम् इत्यादिना पञ्चाहादिपक्षाणामपि स्मरणात्।

அநேக விதமான ஆசௌசம்

அநேகவிதமான ஆசௌசத்தைச் சொல்லுகிறார், **தக்ஷர்**:- ஸத்யச் சௌசம், ஏகாஹம், (ஒருநாள்), மூன்று நாள், நான்குநாள், ஆறு நாள், பன்னிரண்டு நாள், ஒரு பக்ஷம், ஒரு மாதம், மரணாந்தம் என்று ஆசௌசம் பத்து விதமாகும். பத்து பக்ஷங்கள் என்றது உபலக்ஷணம். கர்ப்பஸ்ராவத்தில் மாதத்திற்குச் சமான ஸங்க்யையுள்ள

தினங்கள் ஆசௌசம் என்பது முதலிய வசனங்களால் ஐந்து நாள் ஆஶௌசம் முதலிய பக்ஷங்களும் விதிக்கப்பட்டு இருப்பதால்.

सद्यः शौचम्।

तत्र सद्यः शौचमाह याज्ञवल्क्यः—ऋत्विजां दीक्षितानां च याज्ञिकं कर्म कुर्वताम्। सत्त्रिव्रति ब्रह्मचारि दातृब्रह्मविदां तथा। दाने विवाहे यज्ञे च सङ्ग्रामे देशविप्लवे। आपद्यपि च कष्टायां सद्यः शौचं विधीयते इति। सद्यः शौचं नाम स्नानान्तमघम्, सद्यश्शौचे तु तावत् स्यादाशौचं संस्थितस्य तु। यावत् स्नानं न कुर्वन्ति सचेलं बान्धवा बहिः इति अङ्गिरःस्मरणात्। अत्र ऋत्विक्छब्दो मनुना विवृतः — अग्न्याधेयं पाकयज्ञ मग्निष्टोमादिकान् मखान्। यः करोति वृतो यस्य स तस्यर्त्विगिहोच्यते। वृतो वरणेन संस्कृत इत्यर्थः। स च वरणजन्यसंस्कारोऽग्न्याधेयादौ वरणप्रभृतिप्रयोग-परिसमाप्ति पर्यन्त मनुवर्तते इति। तदनुवृत्तिपर्यन्तमृत्विजां दीर्घकालाशौचमध्येऽपि सद्यः शौचं विधीयते इति सम्बन्धः। दीक्षणीयादिना संस्कृताः दीक्षिताः, तेषाम्, याज्ञिकं - यज्ञे भवं कर्म कुर्वतां सद्यः शौचम्।

ஸத்ய: சௌசம் *:— ஸத்ய: சௌசத்தைச் சொல்லுகிறார்,* **யாஜ்ஞவல்க்யர்:-** *யஜ்ஞார்ஹமான கர்மத்தைச் செய்யும் ருத்விக்குகள், தீக்ஷிதர்கள், அன்னஸத்ரப்ரவ்ருத்தர்கள், வ்ரதானுஷ்டாநம் செய்பவர்கள். ப்ரம்ஹசாரிகள், தானம் செய்பவர்கள் ப்ரம்ஹவித்துக்கள் இவர்களுக்கும், அவசியம் செய்ய வேண்டிய தானத்திலும், விவாஹத்திலும், யாகத்திலும், யுத்தத்திலும், தேசோபத்ரவத்திலும், கஷ்டமான ஆபத்திலும் ஸத்ய: சௌசம் விதிக்கப்படுகிறது. இதில் ஸத்யச் சௌசம் என்பது ஸ்நாநம் வரையில் ஆசௌசம்*

என்பதாம். 'ஸத்ய:சௌசவிஷயத்தில் இறந்தவன் விஷயமாய்ப் பந்துக்கள் வெளியில் சென்று ஸ்நாநம் செய்யாதவரையில் ஆசௌசம் உண்டு என்று அங்கிரஸின் வசநம். இங்கு ருத்விக் சப்தத்தை மனு விவரித்திருக்கிறார். அக்நியாதாநம் பாகயஜ்ஞம், அக்னிஷ்டோமாதியாகங்கள் இவைகளை எவன் வரிக்கப்பட்டவனாய் எவனுக்குச் செய்கின்றானோ அவன் அவனுக்கு ருத்விக் என்று இங்கு சொல்லப்படுகிறான்.' வரிக்கப்பட்டவன் - வரணத்தால் ஸம்ஸ்கரிக்கப்பட்டவன் என்று பொருள். அந்த வரணஜன்ய ஸம்ஸ்காரம் அக்ந்யாதாநம் முதலியதில், வரணம் முதல் ப்ரயோகம் பூர்த்தி அடையும் வரையில் ருத்விக்குகளுக்குத் தீர்க்ககாலமான ஆசௌசத்தின் நடுவிலும் ஸத்ய: சௌசம் விதிக்கப்படுகிறது என்று ஸம்பந்தம். தீக்ஷணீயா முதலியதால் ஸம்ஸ்கரிக்கப் பட்டவர்கள் தீக்ஷிதர்கள். யஜ்ஞார்ஹமான கர்மம் செய்யுமவர்களுக்கு ஸத்ய: சௌசம்.

अत्र विज्ञानेश्वरः—दीक्षितस्य वैतानौपासनाः कार्या इत्यनेन सिद्धेऽपि पुनर्वचनं सद्यः स्नानविशुद्ध्यर्थम् इति । सत्रिव्रति दातृशब्दानामर्थाः सङ्ग्रहकारेण दर्शिताः — सत्री गृहीतनियमो यज्ञे दाने च दीक्षितः । चान्द्रायणाद्यनुष्ठाता व्रती तु ब्रह्मचार्यपि । श्राद्धे गृहीतसंकल्पो व्रती भोक्ता च कीर्तितः । दाता नित्यान्नदाता च वानप्रस्थश्च कीर्तितः इति । दाने - सन्ततान्नदाने गृहीतनियमः कृतसङ्कल्पः, यज्ञे च दीक्षितः सत्रीत्यनेनोक्तः, ब्रह्मवित् यतिः, दाने - पूर्वसङ्कल्पितद्रव्यदाने, विवाहे - कृतकौतुकबन्धने, सद्यः शौचमित्यर्थः । अङ्गिराः — जनने मरणे चैव त्रिष्वाशौचं न विद्यते । यज्ञे विवाहकाले च देवयागे तथैव च । ऋत्विजां यजमानानां परिकर्मादि कुर्वताम् इति । यज्ञः - सोमयागादिर्वैदिकः, देवयागो मातृकादि देवत्यो लौकिको यागः ।

விக்ஞானேச்வரர்:- 'தீக்ஷிதனுக்கு அக்னிஹோத்ர ஔபாஸந ஹோமங்கள் செய்யப்பட வேண்டுமென்று முன் வசனத்திலேயே ஸித்தித்திருந்தும், மறுபடி சொல்லியது ஸத்ய:ஸ்நாநத்தால் சுத்திக்காக என்று'. 'ஸத்ரீ, வ்ரதீ, தாதா' என்ற சப்தங்களுக்குப் பொருள்கள் ஸங்க்ரஹகாரரால் காண்பிவிக்கப்பட்டுள்ளன. 'நியமங்களை க்ரஹித்தவனாய் யக்ஞத்திலும் தானத்திலும் தீக்ஷையுடையவன் ஸத்ரீ எனப்படுவான் சாந்த்ராயணம் முதலியதை அனுஷ்டிப்பவனும், ப்ரம்ஹசாரியும் வ்ரதீ எனப்படுகிறான். ச்ராத்தத்தில் ஸங்கல்பம் செய்து கொண்டவனும் போக்தாவும் வ்ரதீ எனப்படுகிறான். நித்யான்னதாநம் செய்கிறவனும் வாநப்ரஸ்தனும் தாதா எனப்படுகிறான்' என்று. நித்யான்ன தானத்தில் ஸங்கல்பம் செய்து கொண்டவனும், யஜ்ஞத்தில் தீக்ஷை யடைந்தவனும் ஸத்ரீ என்பதால் சொல்லப்படுகிறான். ப்ரம்ஹவித் - யதி. தானத்தில் - முன்னமே ஸங்கல்பிக்கப் பட்ட த்ரவ்யங்களைக் கொடுப்பதிலும். விவாஹத்தில் - ப்ரதிஸரபந்தம் செய்யப்பட்ட விவாஹத்திலும் ஸத்யச் சௌசமென்று பொருள். அங்கிரஸ்:- ஜநநமரண சௌசம் நேர்ந்தால் மேல் சொல்லப்படும் மூன்று காலங்களிலும் ஆசௌசமில்லை. 'யஜ்ஞம், விவாஹம் தேவயாகம்' என்ற மூன்றிலும். யாககார்யம் முதலியதைச் செய்பவர்களான ருத்விக்களுக்கும், யஜமானர்களுக்கும் ஆசௌசமில்லை. இங்கு 'யஜ்ஞம்' என்றது ஸோமயாகம் முதலிய வைதிகயாகம். 'தேவயாகம்' என்றது மாத்ருகா முதலிய தேவதைகளை உத்தேசித்த லௌகிக யாகம்.

बृहस्पतिः — नैष्ठिकानां वनस्थानां यतीनां ब्रह्मचारिणाम्। नाशौचं सूतके प्रोक्तं शावे वाऽपि तथैव च इति । अत्र चन्द्रिकायाम् - यद्यपि नाशौचमिति सामान्यशब्दात् सद्यःशौचस्याप्यपवादः प्रतिभाति, तथाऽपि स्मृत्यन्तराविरोधार्थं तद्व्यतिरिक्तस्याशौचस्यापवाद इत्यवगन्तव्यम् इति । पैठीनसिः-विवाहदुर्गयज्ञेषु

यात्रायां तीर्थकर्मणि । न तत्र सूतकं तद्वत् कर्म यज्ञादि कारयेत् इति ।

ப்ரஹஸ்பதி:- நைஷ்டிக ப்ரம்மசாரிகளுக்கும், வானப்ரஸ்தர்களுக்கும், யதிகளுக்கும், ப்ரம்ஹசாரிகளுக்கும், ஜநநமரண விஷயமான ஆசௌசம் கிடையாது. இங்கு **சந்த்ரிகையில்:-** ''ஆசௌசமில்லை'' என்று பொதுவான சப்தமிருப்பதால், ஸத்ய: சௌசத்துக்கும் விலக்கு ஏற்படும் போல் தோன்றுகிறது; ஆயினும், மற்ற ஸ்ம்ருதிகளின் விரோதமில்லாமைக்காக, ஸத்ய: சௌசத்தைத் தவிர்த்து மற்றவைகளுக்குத் தான் விலக்கு என்று அறியவேண்டும் என்று உள்ளது. **பைடீநஸி:-** விவாஹம், கஷ்டமான ஸ்தலம், யக்ஞம், யாத்ரை, தீர்த்த கர்மம் இவைகளில் ஆசௌசமில்லை. யக்ஞாதி கர்மங்களைச் செய்யலாம்.

श्राद्धादिमध्ये कर्तृभोक्त्रादीना मघसम्भवे ।

चन्द्रिकायाम् :- अथ देवप्रतिष्ठायां गणयागादि कर्मणि । श्राद्धादौ पितृयज्ञे च कन्यादाने च नो भवेत् । विवाहे कन्यकायाश्च लाजहोमादिकर्मणि इति । विज्ञानेश्वरीये— नित्यमन्नप्रदस्यापि कृच्छ्रचान्द्रायणादिषु । निर्वृत्ते कृच्छ्रहोमादौ ब्राह्मणादिषु भोजने ॥ गृहीतनियमस्यापि न स्यादन्यस्य कस्यचित् इति । षडशीतौ — सूतकात् प्राक् समारब्धमनेकाहं तु यद्व्रतम् । कायिकं तत्र कुर्वीत न तु दानार्चनव्रतम् । सूतकानन्तरे त्वह्नि तत्कर्तव्यमतन्द्रितैः इति । विष्णु :— न देवप्रतिष्ठोत्सवविवाहेषु न देशविभ्रमे, नापद्यपि च कष्टायां आशौचं न व्रतिनां व्रते, न सत्रिणां सत्रे इति । दक्षः - राजर्त्विग्दीक्षितानां च बाले देशान्तरे तथा । व्रतिनां सत्रिणां चैव सद्यः शौचं विधीयत इति । चन्द्रिकायाम् — नरेन्द्र सत्रिव्रतिनां विवाहोपप्लवादिषु । सद्यः शौचं समाख्यातं कान्तारापदि संयति

इति । सङ्ग्रहेऽपि — कृच्छ्रदेवोत्सवश्राद्धदानहोमतपोऽध्वरे । प्रारब्धे तत्प्रवृत्तानां सद्यः शौचमघागमे इति । अत्र स्नानं शावविषयम्, न तु प्रसवविषयम् । तत्र पितृ व्यतिरिक्तानां स्नानस्याविधानात् ।

ச்ராத்தம் முதலியதின் நடுவில் கர்த்தா, போக்தா, முதலியவர்களுக்கு ஆசௌசம் ஸம்பவித்தால்

சந்த்ரிகையில்:- தேவ ப்ரதிஷ்டையிலும், கணயாகம் முதலிய கர்மத்திலும், ச்ராத்தம் முதலியதிலும், பித்ரு யஜ்ஞத்திலும் கன்யா தானத்திலும், விவாஹத்திலும் லாஜஹோமம் முதலிய கர்மத்தில் ஆசௌசமில்லை. **விஜ்ஞானேச்வரீயத்தில்:-** நித்யான்னதானம் செய்பவனுக்கும், க்ருச்ரம், சாந்த்ராயணம் இவைகளை அனுஷ்டிப்பதிலும் க்ருச்ரம், ஹோமம் முதலியது முடிந்தும் ப்ராம்ஹணர் முதலியவர்களின் போஜனத்திலும், ஏதாவதொரு நியமத்தை க்ரஹித்துள்ள மற்றவனுக்கும் ஆசௌசமில்லை. **ஷடசீதியில்:-** அநேக நாட்களில் முடியக்கூடிய வ்ரதத்தை ஆசௌசத்திற்கு முன் ஆரம்பித்திருந்தால் அந்த வ்ரதத்தில் ஆசௌசம் நேர்ந்தால் சரீரத்தால் செய்யக் கூடிய உபவாஸம் முதலியதை மட்டில் அப்போது செய்யலாம். தானம் அர்ச்சன ரூபமான வ்ரதத்தைச் செய்யக் கூடாது. ஆசௌசத்திற்கு மறுநாளில் அதைச் செய்யவும் சோம்பலின்றி. **விஷ்ணு:-** தேவப்ரதிஷ்டை, உத்ஸவம், விவாஹம், தேசக்ஷோபம், கஷ்டமான ஆபத்து, இவைகளிலும், தேச க்ஷோபத்திலும் கஷ்டமான ஆபத்திலும் வ்ரதமனுஷ்டிப்பவருக்கு வ்ரதத்திலும், ஸத்ர (யாக) மனுஷ்டிப்பவருக்கு அதிலும் ஆசௌசமில்லை. **தக்ஷர்:-** ராஜா, ருத்விக், தீக்ஷிதன் இவர்களுக்கும் பால விஷயத்திலும், தேசாந்தரத்திலும், வ்ரதமனுஷ்டிப்ப வருக்கும், ஸத்ர(யாக)த்திலும் ஸத்ய:சௌசம் விதிக்கப்படுகிறது. **சந்த்ரிகையில்:-** அரசன், ஸ்த்ரீ, வ்ரதீ

இவர்கட்கும், விவாஹத்திலும், தேசக்ஷோபம் முதலியவைகளிலும், காட்டிலும், ஆபத்திலும், யுத்தத்திலும், ஸத்யச் சௌசம் விதிக்கப்பட்டுள்ளது. **ஸங்க்ரஹத்திலும்:**- க்ருச்ரம், தேவோத்ஸவம், ச்ராத்தம், தானம், ஹோமம், தபஸ், யாகம் இவைகளை ஆரம்பித்த பிறகு ஆசௌசம் ஸம்பவித்தால் அக்கார்யங்களில் ப்ரவ்ருத்தித்தவர்கட்கு ஸத்யச் சௌசம். இங்கு ஸ்நாநம் சொல்லியது, சாவாசௌச விஷயம், ஜநநா சௌச விஷயமல்ல. ஜநநா சௌசத்தில் பிதாவைத் தவிர்த்த மற்றவர்க்கு ஸ்நாநம் விதிக்கப்படாததால்.

अत्र प्रारम्भशब्दार्थः स्मृत्यर्थसारे दर्शितः— आरम्भो वरणं यज्ञे सङ्कल्पो व्रतसत्रयोः । नान्दीमुखं विवाहादौ श्राद्धे पाकपरिक्रिया । निमन्त्रितेषु विप्रेषु प्रारब्धे श्राद्धकर्मणि । पाकारम्भात् परं कर्तॄन् दातॄन् भोक्तॄंश्च न स्पृशेत् इति । श्राद्धे पाकपरिक्रियेत्येतत् कुतपकालसङ्कल्पात् परमारब्धपाकक्रिया-विषयम् । तत्पूर्वं सिद्धपाकविषयेऽपि यमः-पाकोपकल्पनादूर्ध्वं सूतके मृतकेऽपि वा । कारयेच्छ्राद्धमन्येन पक्वान्नं परिवेषयेत् इति । कारयेत् - कुर्यादित्यर्थः ।

இங்கு ஆரம்ப சப்தத்திற்கு அர்த்தம் சொல்லப்பட்டுள்ளது, **ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:**- 'யாகத்திலும் ஆரம்பமென்பது ருத்விக்குகளின் வரணம். வ்ரதத்திலும், ஸத்ரத்திலும் ஸங்கல்பம் ஆரம்பமெனப்படும். விவாஹம் முதலியதில் நாந்தீ ச்ராத்தம் ஆரம்பமெனப்படும். ச்ராத்தத்தில் ஆரம்பமென்பது பாகத்தின் ஆரம்பமாம். ச்ராத்தத்திற்காக ப்ராம்ஹணர்களை வரித்து, ச்ராத்தத்தையுமாரம்பித்து, பாகமும் ஆரம்பிக்கப் பட்டால் பிறகு ஆசௌசம் கர்த்தாக்கள், தாதாக்கள், போக்தாக்கள், இவர்களைப் பற்றுவதில்லை'' என்று. 'ச்ராத்தே பாகபரிக்ரியா' என்பது, குதப காலத்திலும் ஸங்கல்பத்திற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட

பாகக்ரியையைப் பற்றியது. அதற்கு முன் ஸித்தமான பாகத்தின் விஷயத்திலும், யமன்:- பாகம் செய்த பிறகு, ஸூதகமாவது, ம்ருதகமாவது நேர்ந்தால், ச்ராத்தத்தைச் செய்யவும். இதரனைக் கொண்டு அன்னத்தைப் பரிமாற வேண்டும்.

अत्र केचिदाहुः — सङ्कल्पात् पूर्वमघागमे प्राक् कॢप्तार्थैः सङ्कल्पविधिना श्राद्धमन्यैः कारयेत् इति । एतत् स्मृतिचन्द्रिकादिविरोधादुपेक्ष्यम् । यत्तु ऋत्विगादिर्यदा कुर्याद्धोमं श्राद्धक्रियां क्वचित् । उपवीत्येव कुर्वीत कर्तुः स्यादपसव्यकम् इति, तत्पिण्डपितृयज्ञहोमविषयम्, स्त्रीबालादिकर्तृक श्राद्धक्रियाविषयं च । अध्वर्युपवीती दक्षिणं जान्वाच्य मेक्षण उपस्तीर्य इत्यापस्तम्बादिस्मरणात् । अत आशौचे अन्येन श्राद्धं न कारयितव्यम् ।

இங்கு சிலர் இவ்விதம் சொல்லுகிறார்கள். அதாவது -''ஸங்கல்பத்திற்குமுன் ஆசௌசம் நேர்ந்தால், முன் தயாரிக்கப்பட்ட வஸ்துக்களால், ஸங்கல்ப விதியாய் ச்ராத்தத்தை அன்யர்களைக் கொண்டு செய்விக்கவும்'' என்பது. இது ஸ்ம்ருதி சந்த்ரிகாதி க்ரந்த விருத்தமானதால் உபேக்ஷிக்கத்தக்கது. ஆனால் - ''எப்பொழுதாவது ருத்விக் முதலியவன் ஹோமத்தையாவது, ச்ராத்தத்தையாவது செய்தால் உபவீதியாகவே செய்யவும். ''அபஸவ்யம் கர்த்தாவுக்கு'' என்று வசனமிருக்கின்றதே எனில், அது பிண்ட பித்ரு யக்ஞ ஹோமத்தைப் பற்றியது, ஸ்த்ரீ, பாலன் முதலியவர் கர்த்தாவாக உள்ள ச்ராத்தத்தைப் பற்றியதுமாம். ''அத்வர்யு உபவீதியாய் வலது ஜானுவைத் தணித்து மேக்ஷணத்திலுபஸ்தரித்து-''என்று ஆபஸ்தம்பர் முதலியவர் சொல்லியிருப்பதால். ஆகையால் ஆசௌசத்தில் அன்யனால் ச்ராத்தத்தைச் செய்விக்கக் கூடாது.

ब्राह्मे तावद्गृहीतदीक्षस्य त्रैविद्यस्य महामखे । स्नानं त्ववभृथे यावत् तावत्तस्य न विद्यते । गृहीतमधुपर्कस्य यजमानस्य चर्त्विजाम् । पश्चात् पतितमाशौचं न भवेदिति निश्चयः । कुर्वतां याज्ञिकं कर्म याजकानां तथैव च । निमन्त्रितेषु विप्रेषु प्रारब्धे श्राद्धकर्मणि । निमन्त्रितस्य विप्रस्य स्वाध्यायनिरतस्य च । देहे पितृषु तिष्ठत्सु नाशौचं विद्यते क्वचित् ।

ப்ராம்ஹத்தில்:- *பெரிய யாகத்தில் தீக்ஷையை யடைந்த த்ரைவித்யனுக்கு அவப்ருதம் முடியும் வரையில் ஸ்நானம் கிடையாது. மதுபர்க்கம் க்ரஹித்தவனுக்கும், யஜமானனுக்கும், ருத்விக்களுக்கும், பிறகு வந்த ஆசௌசம் இல்லை என்பது நிச்சயம். யக்ஞார்ஹ கர்மத்தைச் செய்பவர்களுக்கும், யாஜகர்களுக்கும், ப்ராம்ஹணர்களை வரித்து, ச்ராத்தம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு, வரிக்கப்பட்ட ச்ரோத்ரிய ப்ராம்ஹணனுக்கு, சரீரத்தில் பித்ருக்களிருக்கும் பொழுது ஆசௌசம் ஒருகாலுமில்லை.*

अत्र चन्द्रिकायाम्— दीक्षितस्य यज्ञसङ्कल्पानन्तरमृत्विजां मधुपर्कग्रहणानन्तरमागतमाशौचं न विद्यते, सम्भृतसम्भारस्य तु पूर्वक्षणेऽपि नाशौचम्, यज्ञार्थं बहुसम्भारसंभृतस्यापि नो भवेदिति स्मृतेः इति । अयमर्थः - यज्ञार्थं संभृतसम्भारस्य कल्पितसमस्त-यज्ञसाधनपदार्थस्याकृतयागसङ्कल्पस्यापि आशौचापगमादूर्ध्वं वसन्तान्तर्गतकर्मकालासम्भवे तस्मिन् वत्सरे करिष्यमाण यज्ञातिक्रमविषये यज्ञसङ्कल्पात् पूर्वक्षणे शुद्धिर्भवतीति ।

சந்த்ரிகையில்:- *தீக்ஷிதனுக்கு யக்ஞஸங்கல்பத் திற்குப் பிறகும், ருத்விக்குகளுக்கு மதுபர்க்கம் க்ரஹித்த பிறகும் வந்த ஆசௌசம் கிடையாது. ஸம்பாரங்களை முழுவதும் சேர்த்துள்ளவனுக்கோ பூர்வக்ஷணத்திலும் ஆசௌசமில்லை. 'யக்ஞத்திற்காக அநேக ஸம்பாரங்களைச்*

சேர்ந்துள்ளவனுக்கும் ஆசௌசமில்லை' என்று ஸ்ம்ருதியிருப்பதால். இங்கு இது பொருள் - "யக்ஞத்திற்காக ஸம்பாரங்களைச் சேகரித்துள்ளவனுக்குயாகஸங்கல்பம் செய்யாவிடினும், ஆசௌசம் முடிந்த பிறகு வஸந்த ருதுவிற்குட்பட்ட கர்ம காலம் ஸம்பவிக்காவிடில், அவ் வருஷத்தில் செய்யப் போகிற யாகம் அதிக்ரமிக்கும் விஷயத்தில் யாக ஸங்கல்பத்திற்கு முன் க்ஷணத்திலும் சுத்தி உண்டாகிறது" என்று.

यज्ञग्रहणं प्रतिष्ठादेरुपलक्षणार्थम् । अत एव विष्णुः — देवता- प्रतिष्ठाविवाहयोः पुनः संभृतयोः इति । एतदुक्तं भवति । यावति काले संभृतबहु संभारधारणं कर्तुं शक्यते, तावत्कालमध्ये प्रतिष्ठा-विवाहाङ्गभूतकालान्तरं यत्र न लभ्यते, तद्विषये सङ्कल्पात् प्रागपि तत्कर्तुराशौचं न भवतीति ।

இங்கு 'யக்ஞம்' என்றது ப்ரதிஷ்டை முதலியவற்றுக்கும் உபலக்ஷணம், ஆகையாற்றான், விஷ்ணு:- 'ஸம்பாரங்களெலாம் தயாரித்துள்ள தேவதாப்ரதிஷ்டை, விவாஹம் இவைகளில் ஆசௌசமில்லை' என்றார். இதனால் இவ்விதம் சொல்லியதாய் ஆகிறது - "சேர்க்கப்பட்ட ஸம்பாரங்கள் வீணுகாமல் வைத்துக் கொள்ள காலம் எவ்வளவோ அக்காலத்திற்குள், ப்ரதிஷ்டை, விவாஹம் இவைகளுக்கு அங்கமாகிய வேறுகாலம் எப்பொழுது கிடைக்காதோ அவ்விஷயத்தில் ஸங்கல்பத்திற்கு முன்பும் அவைகளைச் செய்யும் கர்த்தாவுக்கு ஆசௌசம் இல்லை" என்று.

க்ரியையைச் செய்யவேண்டும். ஷட்த்ரிம்சந்மதத்தில்:- மனிதர்களுக்குத் துர்மரணமேற்பட்டால் ஒரு வர்ஷத்திற்குப் பிறகு ஸம்ஸ்காரத்தைச் செய்ய வேண்டும். இது பொதுவான விதியாகும், விசேஷ விதியும் சொல்லப்படுகிறது. ப்ராம்ஹணர்களுக்கு மூன்று மாதங்களுக்குப் பிறகும், க்ஷத்ரியர்களுக்கு ஆறு மாதங்களுக்குப் பிறகும், வைச்யர்களுக்கு ஒரு வர்ஷத்திற்குப் பிறகும், சூத்ரர்களுக்கு இரண்டு வர்ஷங்களுக்குப் பிறகும் செய்யலாம். ப்ராயச்சித்தமும் செய்யப்படவேண்டும் என்று. ஸுமதி:- ப்ராம்ஹணர்களுக்கு ஒன்ற மாதத்திற்குப் பிறகும், க்ஷத்ரியர்களுக்கு மூன்று மாதங்களுக்குப் பிறகும். (செய்யவேண்டும்)

अत्र विषयभेदेन कालव्यवस्थामाह सुमन्तुः – अग्नि विद्युत्पयः पातचण्डाल ब्राह्मणैर्हताः । एकद्वित्रिचतुःपञ्चषडब्दैः शुद्धिमाप्नुयुः इति ।। एतत् पूर्वोक्त प्रायश्चित्ताकरणविषयम् । तत्कृतौ तु सद्य एव । तथा चापरार्के – दुर्मृतौ सद्य एव स्यात्संस्कारो हि द्विजन्मनाम् । लब्ध्वा कृच्छ्राणि विप्रेभ्य इति वेदविदां मतम् इति ।। सद्यस्संस्कारप्रकारमाह हारीतः – ब्राह्मणेन वधे प्राप्ते चण्डालस्य करेण वा । आत्मना शस्त्रनिर्घाते शूद्रवद्दाहयेद्द्विजम् ।। भस्मास्थीनि गृहीत्वा तु विप्राणामनुशासनात् । क्षीरप्रक्षालनं कृत्वा तदस्थि प्रेतवद्दहेत् । पुनर्विधानमन्त्रेण यथा विधि समाचरेत् । एवमेव विधिं कुर्यान्मरणे गर्हिते तथा इति ।

இங்கு விஷயபேதத்துடன் கால வ்யவஸ்தையைச் சொல்லுகிறார். ஸுமந்து:- 'அக்நி, மின்னல், ஜலம், மலை முதலியதிலிருந்து விழுதல், சண்டாளன், ப்ராம்ஹணன் என்ற நிமித்தங்களால் துர்ம்ருதியை அடைந்தவர்கள் முறையே, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு அப்த க்ருச்ரங்களால் (அப்தம்-30-க்ருச்ரங்கள்) சுத்தியை யடைவார்கள்' என்று இது முன் சொல்லிய ப்ராயச்சித்தம்

செய்யாத விஷயத்தைப்பற்றியது. ப்ராயச்சித்தம் செய்தால் உடனே செய்யலாம். அவ்விதமே, அபரார்க்கத்தில்:- த்விஜாதிகளுக்குத் துர்ம்ருதியில் ப்ராம்ஹணர்களிட மிருந்து க்ருச்ரங்களைப் பெற்று, உடனேயே ஸம்ஸ்காரத்தைச் செய்யலாம் என்பது வேதமறிந்தவரின் கொள்கை. உடனே செய்யப்படும் ஸம்ஸ்காரத்தின் ப்ரகாரத்தைச் சொல்லுகிறார். ஹாரீதர்:- ப்ராம்ஹணன், ப்ராம்ஹணனால் கொல்லப்பட்டாலும், சண்டாளன் கையால் வதைக்கப்பட்டாலும், தானாகவே ஆயுதத்தால் வதம் செய்து கொண்டாலும் அவனைச் சூத்ரனைப்போல் தஹிக்கச்செய்யவும். பிறகு சாம்பல், அஸ்திகள் இவைகளை எடுத்து ப்ராம்ஹணர்களின் அனுஜ்ஞையால் பாலால் அலம்பி, அந்த அஸ்தியை ப்ரேதத்தைப் போல் தஹிக்கவும். புநர்தஹநமந்த்ரத்தால் விதிப்படி செய்யவேண்டும். குறையுள்ள மரணங்களெல்லா வற்றிலும் இவ்விதமே செய்யவேண்டும்,

चेतोवद्भिर्हतानां सद्यः संस्कारं प्रतिषिध्य अचेतोभिर्हतानां नियमेन सद्यः संस्कारमाह कात्यायनः – चेतोवद्भिर्हते सद्यः संस्कारो नोपपद्यते । अन्यत्र सद्य एव स्यात् संस्कारो द्विजशासनात् इति । कवषोऽपि – मनुष्यवर्जं विप्राणां गर्हिते मरणे सति । सद्य एव क्रिया कार्या विप्राणामनुशासनात् इति ।

சேதனர்களால் (ப்ராணிகளால்) கொல்லப்பட்டவர்களுக்கு உடனே ஸம்ஸ்காரத்தை நிஷேதித்து, அசேதனங்களால் கொல்லப்பட்டவர்களுக்கு ஸத்யஸ்ஸம்ஸ்காரத்தை அவச்யம் செய்யவேண்டும் என்கிறார் காத்யாயனர்- 'ப்ராணிகளால் கொல்லப் பட்டவர்களுக்கு உடனே ஸம்ஸ்காரம் விதிக்கப் படுவதில்லை. மற்ற விஷயத்தில்- (அசேதனங்களால் கொல்லப்பட்டவர் விஷயத்தில்) ப்ராம்ஹணர்களின் அனுஜ்ஞையால் உடனேயே ஸம்ஸ்காரம் விதிக்கப் படுகிறது. கவஷரும்:- ப்ராம்ஹணர்களுக்கு

மனுஷ்யனைத் தவிர்த்த மற்றவைகளால் துர்மரணம் ஏற்பட்டால் ப்ராம்ஹணர்களின் உத்தரவினால் உடனே க்ரியையைச் செய்யவேண்டும்.

देशान्तरमृतसपिण्डस्य आशौचकालादूर्ध्वं मरणश्रवणे ।

देशान्तरगतस्य सपिण्डस्य स्वाशौचकालादूर्ध्वं मरणश्रवणे तत्सपिण्डानां सद्यः शौचं विदधाति पराशरः – देशान्तरमृतः कश्चित् सगोत्रः श्रूयते यदि । न त्रिरात्रमहोरात्रं सद्यः स्नात्वा शुचिर्भवेत् इति ।। सगोत्रः-सपिण्डः ।। असन्निहितदेशस्थसपिण्डमरणेऽपि वत्सरादूर्ध्वं सद्यः शौचमुक्तं दीपिकायाम्– पुरुषाणां सपिण्डानां वर्षात् प्राक्तु मृते सति । वर्षादुपर्यवगते स्नानमाचमनं भवेत् इति ।। बालमरणे विशेषः स्मर्यते – अपर्याप्तेऽब्दे बालस्य मरणे समुपस्थिते । न स्नानमाचरेत् श्रुत्वा पर्याप्ते तत्समाचरेत् इति ।।

தேசாந்தரத்தில் மரித்த ஸபிண்டனின் மரணத்தை ஆசௌச காலத்திற்குப் பிறகு கேட்டால்.

தேசாந்தரத்திலுள்ள ஸபிண்டனின் மரணத்தைத் தனது ஆசௌச காலத்திற்குப் பிறகு கேட்டால் ஸபிண்டர்களுக்கு ஸத்யஃசௌசத்தை விதிக்கின்றார் பராசரர்:- ஸபிண்டன் தேசாந்தரத்தில் மரித்ததாய்க் கேட்டால் த்ரிராத்ராசௌமில்லை, அஹோராத்ராசௌசமும் இல்லை. உடனே ஸ்நானம் செய்து சுத்தனாகிறான் ஸமீபமாயில்லாத தேசத்திலுள்ள ஸபிண்டனின் மரணத்திலும் வர்ஷத்திற்குப் பிறகு ஸத்ய:சௌசம் சொல்லப்பட்டுள்ளது, தீபிகையில்:- ஸபிண்டனின் மரணம் வர்ஷத்திற்கு முன் அறியப்பட்டாலும், பிறகு அறியப்பட்டாலும் ஸ்நானம் ஆசமனம் இவை விதிக்கப்படுகின்றன. பால மரணத்தில் விசேஷம் சொல்லப்படுகின்றது. ஒரு வருஷத்திற் குட்பட்ட பாலனின் மரணத்தைக் கேட்டால், ஸ்நானம்

செய்ய வேண்டியதில்லை. ஒரு வர்ஷம் பூர்த்தியான பாலனின் மரணத்தின் ச்ரவணத்தில் ஸ்நாநத்தைச் செய்யவேண்டும்.

गर्भस्रावादिनिमित्ताशौचम् ।

मातुर्गर्भस्रावादि निमित्तमाशौचमाह पराशरः – यदि गर्भो विपद्येत स्रवते चापि योषितः । यावन्मासं स्थितो गर्भो दिनं तावत् तु सूतकम् इति ॥ यदि गर्भस्रावपातौ स्याताम्, तदा यावत्सु मासेषु गर्भः स्थितः तावन्माससंख्यासमदिनं मातुः सूत्याशौचमित्यर्थः । इदं चतुर्थमासप्रभृति आसप्तमात् । अर्वाक्तु त्रिरात्रम् ॥ स्रावपातौ विविनक्ति स एव – आचतुर्थाद्भवेत् स्रावः पातः पञ्चमषष्ठयोः । अत ऊर्ध्वं प्रसूतिः स्यात् दशाहं सूतकं भवेत् इति ॥ सप्तममासप्रभृति मातुः प्रसवनिमित्तमाशौचं दशाहं भवेदित्यर्थः । याज्ञवल्क्यः – गर्भस्रावे मासतुल्या निशाः शुद्धेस्तु कारणम् इति । मासतुल्या निशा इति चतुर्थमासमारभ्य आसप्तमाद्वेदितव्यम् ।

கர்ப்பஸ்ராவம் முதலிய நிமித்தத்தால் ஆசௌசம்.

மாதாவுக்குக் கர்ப்பஸ்ராவம் முதலியதால் உண்டாகும் ஆசௌசத்தைச் சொல்கிறார், **பராசரர்:-** *"ஸ்த்ரீயின் கர்ப்பம் விழுந்தாலும், ஸ்ரவித்தாலும் அந்தக் கர்ப்பம் எவ்வளவு மாதமிருந்ததோ அவ்வளவு நாள் மாதாவுக்கு ஜநநாசௌசம்" இது நாலாவது மாதம் முதல் ஏழாவது வரையில். அதற்கு முன்பானால் மூன்று நாள். ஸ்ராவம், பாதம் இவைகளை விவரிக்கின்றார்* **பராசரரே:-** *நாலாவது மாதம் முடியும் வரையில் உண்டாகும் கர்ப்ப நாசம் 'ஸ்ராவம்' எனப்படும், ஐந்தாவது, ஆறுவது மாதங்களில் 'பாத' மெனப்படும் ஏழாவது மாதம் 'ப்ரஸவம்' எனப்படும். அதில் மாதாவுக்குப் பத்துநாள் ஆசௌசம்.* **யாக்ஞவல்க்யர்:-** *கர்ப்பஸ்ராவத்தில் மாதங்களுக்குச்*

சமமான தினங்கள் சுத்திக்குக் காரணம். இங்கு நாலாவது மாதம் முதற்கொண்டு ஏழாவது மாதம் வரையில் என்று அறியவேண்டும்.

मनुरपि— रात्रिभिर्मासतुल्याभिर्गर्भस्रावे विशुध्यति इति ।। स्रवतिर्यद्यपि द्रवद्रव्यकर्तृके परिस्यन्दे प्रयुज्यते, तथाऽप्यत्र द्रवाद्रवसाधारणरूपेऽधः पतने वर्तते ।। चतुर्थमासादर्वाक्तु यथावर्णमाशौचमाह मरीचिः – गर्भस्रुत्यां यथामासमचिरे तूत्तमे त्र्यहम् । राजन्ये तु चतूरात्रं वैश्ये पञ्चाहमेव च ।।अष्टाहेन तु शूद्रस्य शुद्धिरेषा प्रकीर्तिता इति ।। अयमर्थः – अचिरे - चतुर्थमासा-दर्वाचीने काले गर्भस्रुत्यां यथामासं नाशौचम्, किन्तु उत्तमे - ब्राह्मण वर्णे त्रयो दिवसा मातुः शुद्धिहेतवः । क्षत्रियवर्णे चतूरात्रं मातुः शुद्धिकरणम् । वैश्यवर्णे पञ्चाहो मातुः शुद्धिहेतुः । शूद्रवर्णस्याष्टाहेन शुद्धिः इति ।

மனுவும்:- கர்ப்பஸ்ராவத்தில் மாதங்களுக்குச் சமமான தினங்களால் சுத்தி, 'ஸ்ராவம்' என்ற பதத்திற்கு, த்ரவமான த்ரவ்யம் கரைவதென்பதில்தான் ப்ரயோகமிருக்கிறது. ஆனாலும், இங்கு த்ரவ வஸ்து, த்ரவமில்லாத வஸ்து இரண்டுக்கும் ஸாதாரணமான 'கீழே விழுதல்' என்பதில் 'ஸ்ராவம்' என்பது ப்ரயோகிக்கப்படுகிறது. நாலாவது மாதத்திற்கு முன்போவெனில் ப்ராம்ஹணாதி வர்ணங்களுக்கு வெவ்வேறாக ஆசௌசத்தைச் சொல்லுகிறார் **மரீசி:-** நாலாவது மாதத்திற்கு முன்பு ஏற்படும் ஸ்ராவத்தில் மாதக்கணக்கின்படி ஆசௌசமென்பதில்லை. ஆனால், ப்ராம்ஹணவர்ணத்தில் மூன்று நாட்கள் மாதாவுக்குச் சுத்திகாரணங்கள். க்ஷத்ரிய வர்ணத்தில் நான்கு நாட்கள் மாதாவுக்குச் சுத்தி ஹேதுக்கள். வைச்ய வர்ணத்தில் ஐந்து நாட்கள் மாதாவுக்குச் சுத்தி ஹேதுக்கள். சூத்ர வர்ணத்தில் எட்டு நாட்கள் மாதாவுக்குச் சுத்தி ஹேதுக்கள். இவ்விதம் சுத்தி சொல்லப்பட்டது.

स्मृतिरत्ने–यावन्मासत्रयं तावत् त्र्यहाशौचं विधीयते । षाण्मासाभ्यन्तरं यावत् गर्भस्रावो भवेद्यदि । तदा माससमैस्तासां दिवसैः शुद्धिरिष्यते । अत ऊर्ध्वं स्वजात्युक्तमाशौचं तासु विद्यते इति ॥ षाण्मासाभ्यन्तरं यावत् - चतुर्थमासमारभ्येत्यर्थः । दीपिकायाम् – स्रावपाताव(प)प्रसवो(वा) गर्भनाशस्त्रिधा स्मृतः । मातुर्मासत्रये स्रावे त्रिरात्रमशुचिर्भवेत् ॥ चतुर्थादिषु मासेषु मासतुल्यमघं भवेत् । सप्तमादित्रिमासेषु सूतिकातुल्यता भवेत् इति । दशकेऽपि – मातुर्गर्भविपत्स्वघं त्रिदिवसं मासत्रयेऽतो यथा मासाहं त्रिषु सूतिकाविधिरतः स्नानं पितुस्सर्वदा । ज्ञातीनां पतनादिजातमरणे पित्रोर्दशाहं सदा इति ॥ मासत्रये - प्रथमे द्वितीये तृतीये वा मासि गर्भस्रावे मातुस्त्रिरात्रमघं स्यात् । अतः परं मासत्रये चतुर्थपञ्चमषष्ठेषु मासेषु यथामासाहं - माससमसङ्ख्याकान्यहोरात्राणि अघं भवति । अतः परं मासषट्कादूर्ध्वं मातुः सूतिकाविधिः । ब्राह्मण्या दशरात्रमघं भवति । सर्वदा - स्रावपातयोः पितुः स्नानान्तमघम्, ज्ञातीनां पतने स्नानान्तमघं इत्यर्थः ।

ஸ்ம்ருதிரத்னத்தில்:- மூன்று மாதம் முடியும் வரையில் கர்ப்ப ஸ்ராவத்தில் மூன்று நாளாசௌசம் விதிக்கப்படுகிறது. நாலாவது மாதம் முதற்கொண்டு, ஆறாவது மாதம் முடியும் வரையில் மாதங்களுக்குச் சமமான தினங்களால் சுத்தி. அதற்குமேல் அவரவர் வர்ணத்திற்குச் சொல்லப்பட்டுள்ள ஆசௌசம் மாதாவுக்குண்டு. தீபிகையில்:- ஸ்ராவம், பாதம், அ(ப)ப்ரஸவம் என்ற மூன்று விதமாயுள்ளது கர்ப்பநாசம். மூன்ற மாதங்களுள் உண்டாகும் ஸ்ராவத்தில் மாதாவுக்கு மூன்றுநாள் அசுத்தி. நாலாவது, ஐந்தாவது, ஆறாவது மாதங்களில் உண்டாகும் பாதத்திற்கு மாதக்கணக்குக்குச் சமமான தினங்கள் ஆசௌசம். ஏழாவது முதல் உள்ள

மூன்று மாதங்களில் உண்டாகும் அப்ரஸவத்தில் ஸூதிகைக்குச் சமமான ஆசௌசம். **தசகத்திலும்:-** ஒன்றாவது, இரண்டாவது, மூன்றாவது மாதத்தில் ஸ்ராவமேற்பட்டால் மாதாவுக்கு மூன்று நாள் அசுத்தி. அதற்குப் பிறகு 3-மாதங்களில் கர்ப்ப ஸ்ராவமானால் மாதத்திற்குச் சமமான தினங்கள் ஆசௌசம். ஆறாவது மாதத்திற்குப் பிறகு மாதாவுக்கு ஸூதிகைக்குப்போல் ஆசௌசம். ப்ராம்ஹணிக்குப் பத்துநாள் ஆசௌசம். ஸ்ராவத்திலும், பாதத்திலும் பிதாவுக்கு ஸ்நானம் வரையில் ஆசௌசம். ஜ்ஞாதிகளுக்குப் பதநத்தில் ஸ்நானம் வரையில் ஆசௌசம். சிசு பிறந்து உடனே மரித்தால் மாதா பிதாக்களுக்குப் பத்துநாள் ஆசௌசம்.

दीपिकायाम् – गर्भनाशादिसर्वेषु स्नानमेव पितुर्भवेत् । चतुर्थादि त्रिमासेषु ज्ञातीनामाप्लवो भवेत् ।। पित्रोश्च भ्रातृबन्धूनां दशाहं स्यात् सुतोदये इति ।। सङ्ग्रहेऽपि – त्र्यहं मासत्रये मातुर्गर्भस्रावे ततः परम् । मासतुल्यान्यहान्यूर्ध्वं षण्मासात् सूतिकाविधिः ।। स्रावाद्येव पितुःस्नानमन्येषां पतनादि तत् । गर्भनाशश्चतुर्मासे स्रावः पातस्ततो द्वयोः इति ।। स्रावादौ पितुरेव स्नानम्, नान्यस्य । अन्येषाम् - पितृव्यतिरिक्तनाम्, तत् - स्नानं पतनादि इत्यर्थः ।। वरदराजीय सङ्ग्रहेऽपि – पातात् (संपातात्) प्राक् पितुराप्लवस्त्रिदिवसं तस्मिन् कठोरस्य चेत् ज्ञातेरप्यथ सप्तमादिषु पितृज्ञात्योर्दशाहं भवेत् इति ।

தீபிகையில்:- ஸ்ராவம் முதலிய கர்ப்பநாச மெல்லாவற்றிலும் பிதாவுக்கு ஸ்நானமுண்டு. நாலாவது முதல் மூன்று மாதங்களில் ஜ்ஞாதிகளுக்கும் ஸ்நானமுண்டு. பிறகு ப்ரஸவத்தில் மாதா பிதாக்களுக்கும், ப்ராதாக்களுக்கும், பந்துக்களுக்கும் பத்துநாள் ஆசௌசம். **ஸங்க்ரஹத்திலும்:-** மூன்று மாதங்களுள் ஏற்படும் கர்ப்ப ஸ்ராவத்தில் மாதாவுக்கு மூன்று நாள் ஆசௌசம். பிறகு

மூன்று மாதங்களில் மாதக்கணக்கான நாட்கள் ஆசௌசம். ஆறாவது மாதத்திற்குப் பிறகு ஸூதிகையின் விதி, பத்துநாள் ஆசௌசம், ஸ்ராவம் முதல் எல்லாவற்றிலும் பிதாவுக்கு ஸ்நானம், ஜ்ஞாதிகளுக்குப் பதநம் முதல் ஸ்நானம். நான்கு மாதங்களிலுண்டாகும் கர்ப்பநாசம் ஸ்ராவம். ஐந்தாவது, ஆறாவது மாதங்களிலுண்டாவது பாதமெனப்படும். வரதராஜீய ஸங்க்ரஹத்திலும்:- பாதத்திற்குமுன் (ஸ்ராவத்தில்) பிதாவுக்கு ஸ்நானம், கடினமான பாதத்தில் பிதாவுக்கும், ஜ்ஞாதிக்கும் ஸ்நானமும், மூன்று நாள் அசுத்தியும், ஏழாவது முதல் பிதாவுக்கும் ஜ்ஞாதிகளுக்கும் பத்துநாள் ஆசௌசம்.

अत्र चन्द्रिकायां विशेषः – अचिरगर्भस्रावे मातुरेवाशौचम्, न पित्रादिसपिण्डानाम् । तथा च मरीचिः – स्रावे मातुस्त्रिरात्रं स्यात्सपिण्डाशौचवर्जनम् इति ॥ यत्तु सुमन्तुनोक्तम् – गर्भमासतुल्या दिवसा गर्भस्रंसने सद्यः शौचं च इति, अस्यार्थः – गर्भस्रंसने - चतुर्थे मासि गर्भस्रावे मातुश्चतूरात्रमाशौचम् । सपिण्डपुरुषस्य सद्यः शौचमिति । याज्ञवल्क्यश्च – मृते स्नानेन शुध्यन्ति गर्भस्रावे च गोत्रिणः इति ॥ वृद्धवसिष्ठोऽपि – गर्भस्रावे मासतुल्या दिवसाः स्त्रीणाम् । स्नानमात्रमेव पुरुषस्य । ईषत्कठिन गर्भस्रावे तु त्रिरात्रम् इति ॥ एतत्तु चतुर्थमास जातगर्भस्रा-विषयमिति व्यक्तम् । मासान्तरे ईषत्कठिनस्यैवासंभवात् । अस्य वचनस्यायं तात्पर्यार्थः – चतुर्थे मृदुतया ईषत्कठिनतया वा गर्भस्रावे मातुश्चतूरात्रमाशौचम् । सपिण्डपुरुषस्य मृदुतया स्रावे सद्यः शौचम् । ईषत्कठिनतया स्रावे त्रिरात्रमाशौचमिति । पुरुषग्रहणादत्र सपिण्डस्त्रीणां नाशौचम् ।

இதில், சந்த்ரிகையில் விசேஷம் சொல்லப்பட்டுள்ளது. கர்ப்பஸ்ராவத்தில் மாதாவுக்கே ஆசௌசம். பிதா முதலிய ஸபிண்டர்களுக்கில்லை.

அவ்விதமே, மரீசி:- ஸ்ராவத்தில் மாதாவுக்கு மூன்றுநாள் ஆசௌசம். ஸபிண்டர்களுக்கு ஆசௌசமில்லை. ஆனால், ஸுமந்து:- '' நாலாவது மாதத்தில் கர்ப்பஸ்ராவத்தில் மாதாவுக்கு நாலுநாள் ஆசௌசம், ஸபிண்டர்களுக்கு ஸத்யச்சௌசம் என்ற சொல்லிய வசநமும், யாக்ஞவல்க்யர்:- 'கோத்ரிகள், மரணத்திலும், கர்ப்ப ஸ்ராவத்திலும் ஸ்நானத்தால் சுத்தராகின்றனர்' என்று சொல்லியதும், வ்ருத்த வஸிஷ்டரும் - 'கர்ப்பஸ்ராவத்தில் மாதாவுக்கு மாஸத்திற்குச் சமமான நாட்கள் ஆசௌசம். புருஷனுக்கு ஸ்நாநம் மட்டில். கொஞ்சம் கடினமான கர்ப்பஸ்ராவத்தில் மூன்றுநாள் ஆசௌசம், என்று சொல்லியதும், நாலாவது மாஸத்திலுண்டாகிய கர்ப்பஸ்ராவத்தைப் பற்றியவை என்பது ஸ்பஷ்டம். வேறு மாஸத்தில் கொஞ்சம் கடினமான ஸ்ராவமென்பது ஸம்பவியாதாகையால். இந்த வசநத்திற்கு இது தாத்பர்யம்- 'நாலாவது மாதத்தில் ம்ருதுவாகவோ, கொஞ்சம் கடினமாகவோ ஏற்பட்ட கர்ப்பஸ்ராவத்தில் மாதாவுக்கு நாலுநாள் ஆசௌசம். ஸபிண்டனான புருஷனுக்கு ம்ருதுவான ஸ்ராவத்தில் ஸத்யச்சௌசம். கொஞ்சம் கடினமான ஸ்ராவத்தில் மூன்றுநாள் ஆசௌசம்'' என்பது. புருஷ சப்தத்தைச் சொல்லியதால் இதில் ஸபிண்ட ஸ்த்ரீகளுக்கு ஆசௌசமில்லை.

यत्तु मरीचिना सपिण्डस्त्रीपुंससाधारण्येन त्रिरात्रमुक्तम् – पाते मातुर्यथामासं पित्रादीनां दिनत्रयम् इति, तत् पञ्चमषष्ठमासविषयम्, मासान्तरे गर्भपातासम्भवात्। यत्तूक्तम् – सद्यः शौचं सपिण्डानां गर्भस्य पतने सति इति, तच्चतुर्थमासान्तर्गतमृदुरूप गर्भस्रावविषयम्। तत्रैव वृद्धवसिष्ठेन सपिण्डपुरुषस्य सद्यः शौचविधानात्। स्रावे पातशब्दो मातुर्जठराद्बहिर्निर्गमनगुणेन स्रावेण साम्याद्वर्तते, मुख्यार्थपरत्वे पूर्वोक्त वचनविरोधापत्तेः। एवं च चतुर्थे मृदुतया स्रावे सपिण्डानां

सद्यः शौचम् । ईषत्कठिनतया स्रावे त्रिरात्रमाशौचं सपिण्डपुरुषाणाम् । स्त्रीणां तु नास्ति । पञ्चमे षष्ठे च मासे स्त्रीपुंससाधारण्येन सपिण्डानां त्रिरात्रमाशौचम् इति चन्द्रिकायां निर्णीतम् ।

ஆனால், மரீசியினால்:- ஸபிண்டரான ஸ்த்ரீ புருஷர்கள் எல்லோருக்குமே த்ரிராத்ரம் சொல்லப்பட்டுள்ளதே 'பாதத்தில் மாதாவுக்கு மாதக் கணக்கின்படியும், பிதா முதலியவர்க்கு மூன்று நாளும் ஆசௌசம்' என்ற வசநத்தால் எனில் அது ஐந்தாவது ஆறாவது மாதங்களிலுண்டாகியதைப் பற்றியது. மற்ற மாதத்தில் பாதம் ஸம்பவிக்காதாகையால். ஆனால்:- 'கர்ப்பத்தின் பதநத்தில் ஸபிண்டர்களுக்கு ஸத்யச்சௌசம்' என்ற வசநமுள்ளதே எனில், அது நாலாவது மாதத்திற்குள் ஏற்பட்ட ம்ருது ரூபமான கர்ப்பஸ்ராவத்தைப் பற்றியதாகும். அந்த விஷயத்திலேயே வ்ருத்த வஸிஷ்டர், ஸபிண்ட புருஷனுக்கு ஸத்யச்சௌசத்தை விதித்திருப்பதால். ஸ்ராவத்தில் 'பாத' சப்தம், மாதாவின் வயிற்றிலிருந்து வெளிவரும் குணமுள்ள ஸ்ராவத்துடன் ஸமமாகியதால் இருக்கிறது. முக்யார்த்தத்தையே சொல்லுகிறதென்றால் முன் சொல்லிய வசநங்களுடன் விரோதம் நேரிடும். இவ்விதமிருப்பதால், நாலாவது மாதத்தில் ம்ருதுவான ஸ்ராவ விஷயத்தில் ஸபிண்டர்களுக்கு ஸத்யச்சௌசம். கொஞ்சம் கடினமான ஸ்ராவத்தில் மூன்றுநாள் ஆசௌசம் ஸபிண்ட புருஷர்களுக்கு. ஸபிண்ட ஸ்த்ரீகளுக்கு ஆசௌசமில்லை. ஐந்தாவது, ஆறாவது மாதங்களில் ஸ்த்ரீகள், புருஷர்கள் எல்லோருக்குமே ஸபிண்டர்களுக்கு மூன்று நாள் ஆசௌசம், என்று சந்த்ரிகையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

विज्ञानेश्वरीये तु – सद्यः शौचं सपिण्डानां गर्भस्य पतने सति इति सपिण्डानां सद्यः शौचविधानं मृदुगर्भपतनविषयम् ।

यत्पुनर्वसिष्ठवचनम् – ऊनद्विवार्षिके प्रेते गर्भपतने सपिण्डानां त्रिरात्रम् इति, तत् पञ्चमषष्ठयोः कठिनगर्भपतनविषयमिति । एतदेवाभिप्रेत्योक्तं शतके– पाते सद्यस्तु कठिने त्र्यहं पित्रादिषु स्मृतम् इति । पाते - द्रवात्मके ज्ञातीनां सद्यः स्नानम् । कठिन पाते त्र्यहमित्यर्थः ॥ स्मृतिरत्ने – स्रावे मातुस्त्रिरात्रं स्यात् सपिण्डाशौचवर्जनम् । पाते मातुर्यथामासं पित्रादीनां दिनत्रयम् इति ।

விக்ஞானேச்வரீயத்திலோவெனில்:- *'கர்ப்பத்தின் பதநத்தில் ஸபிண்டர்களுக்கு ஸத்யச்சௌசம்' என்று ஸபிண்டர்களுக்கு ஸத்யச்சௌசம் விதித்திருப்பது, ம்ருதுவான கர்ப்ப பதநத்தைப் பற்றியது. ஆனால்* **வஸிஷ்டர்:-** *'இரண்டு வயதிற்குட்பட்ட பாலனின் ம்ருதியிலும், கர்ப்பத்தின் பாதத்திலும் ஸபிண்டர்களுக்கு த்ரிராத்ரம், என்ற சொல்லியிருக்கின்றாரே எனில் அது ஐந்தாவது ஆறாவது மாதங்களில் ஏற்பட்ட கடினமான கர்ப்பபாத விஷயமாகும். இந்த அபிப்ராயத்துடனேயே சொல்லப்பட்டுள்ளது* **சதகத்தில்:-** *'த்ரவமான பாதத்தில் 'ஞாதிகளுக்கு ஸத்ய: ஸ்நானம், கடினமான பாதத்தில் மூன்றுநாள்' என்று.* **ஸ்ம்ருதிரத்னத்தில்:-** *ஸ்ராவத்தில் மாதாவுக்கு த்ரிராத்ரம் ஆசௌசம். ஸபிண்டர்களுக்கு ஆசௌசமில்லை. பாதத்தில் மாதாவுக்கு, மாதக் கணக்கான நாட்கள் ஆசௌசம். பிதா முதலியவர்க்கு மூன்றுநாள் ஆசௌசம்.*

स्मृत्यर्थसारे–चतुर्मासाभ्यन्तरे गर्भनाशः स्राव उच्यते । तत्र स्रावे आद्ये मासत्रये मातुस्त्रिरात्रमाशौचम् । चतुर्थे चतूरात्रम् । सगोत्रसपिण्डानां स्नानेन सद्यश्शुद्धिः । पञ्चमषष्ठयोर्गर्भनाशः पात उच्यते । पाते तु मातुर्गर्भमाससङ्ख्यासमदिनमाशौचम् । सपिण्डानां त्रिरात्रम् । सप्तममासप्रभृति प्रसव उच्यते । प्रसवे जनननिमित्तमाशौचं पूर्णं दशाहादिकं सर्वेषां यथावर्णं भवति । समानोदकानां त्रिरात्रम्

इति ।। षडशीतौ – त्रिदिनं त्रिषु मासेषु चतुर्थे तु चतुर्दिनम् । स्रावे तु मातुरेव स्यान्न ज्ञातीनां न वै पितुः ।। पञ्चमे पञ्च षष्ठे षड्दिवसाः पातसूतकम् । मातुरित्थमथान्येषां पितुश्च त्रिदिनं स्मृतम् इति ।।

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- *நான்கு மாதங்களுக்குள் உண்டாகும் கர்ப்பநாசம் ஸ்ராவமெனப்படும். அந்த ஸ்ராவத்தில் முதலான மூன்று மாதங்களில் மாதாவுக்கு மூன்றுநாளாசௌசம். நான்காவது மாதத்தில் நான்குநாள். ஸமாநோதகருக்கும் ஸபிண்டருக்கும் ஸ்நானத்தால் ஸத்யச்சுத்தி. ஐந்தாவது ஆறாவது மாதங்களிலுண்டாகும் கர்ப்பநாசம் 'பாத' மெனப்படும். பாதத்தில் மாதாவுக்குக் கர்ப்ப மாதங்களுக்குச் சமமான தினங்கள் ஆசௌசம். ஸபிண்டர்களுக்கு மூன்றுநாட்கள் ஆசௌசம். ஏழாவது மாதம் முதல் ப்ரஸவமெனப்படும். அதில் ஜநந நிமித்தமான ஆசௌசம் பூர்ணமாய்ப் பத்து நாட்கள் முதலியது எல்லா வர்ணத்தாருக்கும் உண்டு. ஸமாநோதகர்களுக்கு த்ரிராத்ரம்.* **ஷடசீதியில்:-** *மூன்று மாதங்களில் மூன்றுநாள். நான்காவது மாதத்தில் நான்குநாள். ஸ்ராவத்தில் மாதாவுக்கு மட்டில் ஆசௌசம். ஜ்ஞாதிகளுக்கோ, பிதாவுக்கோ ஆசௌசமில்லை. ஐந்தாவது மாத்தில் பாதத்தில் ஐந்துநாள். ஆறாவது மாதத்தில் ஆறுநாள். இது மாதாவுக்கு. ஜ்ஞாதிகளுக்கும், பிதாவுக்கும் மூன்றுநாள் ஆசௌசம்.*

स्मृत्यन्तरे – स्रावे चैव पितुः स्नानं सपिण्डानां न विद्यते । चतुर्थे तु सपिण्डानां शुद्धिः सद्यो जलाप्लवात् । पाते तेषां त्रिरात्रं स्यात् पितुश्च भ्रातुरेव हि । प्रसवे जननाशौचं सपिण्डानां तु विद्यते । सोदकानां तृतीयांशं बान्धवानां न चैव हि इति ।। यत्तु यमेनोक्तम् – अदन्तजाते तनये शिशौ गर्भच्युते तथा । सपिण्डानां तु सर्वेषामहोरात्रमशौचकम् इति, तत् परोक्षविषयम् ।

மற்றொரு ஸ்ம்ருதியில்:- *ஸ்ராவத்தில் பிதாவுக்கு ஸ்நானம். ஜ்ஞாதிகளுக்கில்லை. நாலாவது மாதத்தில்*

ஜ்ஞாதிகளுக்கு ஸ்நாநத்தால் சுத்தி. பாதத்தில் ஸபிண்டர்களுக்கும், பிதாவுக்கும், ப்ராதாவுக்கும் மூன்றுநாள். ப்ரஸவத்தில் ஸபிண்டர்களுக்கு ஜநநாசௌசம் பூர்ணமாயுண்டு. ஸமாநோதகர்களுக்கு மூன்றில் ஒரு பாகம் (மூன்றுநாள்) ஸகோத்ரர்களுக்கு ஆசௌசமில்லை. ஆனால், **யமன்:-** "பல் முளைப்பதற்குள் புருஷசிசு மரித்தாலும், கர்ப்பத்தி லிருந்து சிசு பிறந்தாலும் ஸபிண்டர்கள் எல்லோருக்கும் ஒரு நாள் ஆசௌசம்" என்று சொல்லியிருக்கின்றாரே எனில், அது பரோக்ஷ விஷயத்தைப் பற்றியதாம்.

सूतिकाशौचम्

सप्तममासप्रभृति सर्ववर्णस्त्रीणां स्वजात्युक्तमाशौचम् । अत ऊर्ध्वं प्रसूतौ तु दशाहं सूतकं भवेत् । क्षत्रियो द्वादशाहेन वैश्यः पञ्चदशेन तु ॥ शुध्येच्छूद्रस्तु मासेन वर्णाशौचमिदं स्मृतम् इति स्मरणात् । एतच्च मातापित्रादिसाधारणाशौचाभिप्रायम् । यत्तु प्रचेतसोक्तम् – सूतिका सर्ववर्णानां दशाहेन विशुध्यति । ऋतौ तु न पृथक् स्त्रीणां सर्ववर्णेष्वयं विधिः इति ॥ स्त्रीणां रजोदर्शने यत्त्रिरात्राशौचविधिः स सर्ववर्णेष्वविशिष्ट इत्यर्थः । अत्र सर्ववर्णानां सूतिका दशाहेन शुध्यतीत्येतत् प्रसवसमयासृङ्निः-सरणाप्रायत्यप्रयुक्तयुगत्रय परिहरणनिमित्तभूताशौचाभिप्रायम् । ऋतुमत्याशौचसाहचर्यात् । अत्र सर्वशब्दः शूद्रेतरवर्णेषु सङ्कोचनीयः । यदाह पारस्करः – द्विजातिः सूतिका या स्यात् सा दशाहेन शुद्ध्यति । त्रयोदशेऽह्नि संप्राप्ते शूद्रा शुध्यत्यसंशयः इति ।

ஸூதிகாசௌசம் :-

ஏழாவது மாதம் முதல் எல்லா வர்ண ஸ்த்ரீகளுக்கும், தன் ஜாதிக்குச் சொல்லப்பட்டுள்ள ஆசௌசம். "இதற்குமேல், ப்ரஸவத்தில் பத்துநாள் ஆசௌசமாகிறது. க்ஷத்ரியன் 12 நாட்களாலும் வைச்யன் 15 நாட்களாலும்,

சூத்ரன் ஒரு மாதத்தாலும் சுத்தனுவான். இது வர்ணாசௌசமென விதிக்கப்பட்டுள்ளது'' என்று ஸ்ம்ருதி இருப்பதால். இது மாதா பிதா முதலியவர்க்கு ஸாதாரணமான ஆசௌசத்தில் அபிப்ராயமுடையது. ஆனால், ப்ரசேதஸ்ஸினுல்:- ''நான்கு வர்ணத்திய ஸூதிகையும் பத்து நாட்களால் சுத்தையாவாள், ரஜோ விஷயத்தில் த்ரிராத்ராசௌச விதியும் எல்லா வர்ண ஸ்த்ரீகளுக்கும் பேதம் இல்லாதது'' என்று சொல்லப்பட்டுள்ளதேயெனில், அது ப்ரஸவ ஸமயத்திலுண்டாகிய ரக்த நிர்கமத்தாலுண்டாகிய அசுத்தி நிமித்தமான, மூன்று நுகத்தடி தூரம் விலக்க வேண்டியதற்கு நிமித்தமாயுள்ள ஆசௌசத்தைப் பற்றியது, ரஜஸ்வலா ஆசௌசத்துடன் சேர்ந்திருப்பதால். ஏனெனில், பாரஸ்கரர்:- மூன்று வர்ணத்திய ஸூதிகை எவளோ அவள் பத்து நாட்களால் சுத்தையாகிறாள். ஸூதிகையான சூத்ரீ 13-வது நாளில் சுத்தையாகிறாள், ஸம்சயமில்லை'' என்றார்.

संवर्तश्च – अजा गावो महिष्यश्च ब्राह्मण्यश्च प्रसूतिकाः । दशरात्रेण शुध्यन्ति भूमिष्ठं च नवोदकम् इति । दशाहात् परं सत्यपि सूतके दशाहे शुद्धभिधानं वाक्यश्रवण दर्शनादिनिषेधविषयम् । दशाहं दर्शनं वाकं सूतिकायास्त्यजेत्ततः इति स्मरणात् । दशाहात् परं सूतिकायाः कर्मानर्हत्वलक्षणमात्रमेव सूतकम् । न तु दशाहवदनिरीक्ष्यत्वादिलक्षणम् ॥ तथा पैठीनसिः– सूतिकां पुत्रजननीं विंशतिरात्रेण कर्माणि कारयेत्, मासेन स्त्रीजननीम् इति ।

ஸம்வர்த்தரும்:- '' ஆடுகள், மாடுகள், எருமைகள், ப்ராம்ஹண ஸ்த்ரீகள் இவர்கள் ப்ரஸவத்தில் பத்து நாட்களால் சுத்தராகின்றனர். பூமியில் புதிதாயுள்ள ஜலமும் அப்படியே'' என்றார். பத்து நாட்களுக்குப் பிறகு, பிறகும் ஸூதகமிருக்கப் பத்து நாட்களுக்குப் பிறகு சுத்தி

என்றது, ஸூதிகையின் வாக்யத்தைக் கேட்பது, ஸூதிகையைப் பார்ப்பது முதலியதின் நிஷேதத்தைப் பற்றிய விஷயம். 'பத்துநாள் வரையில், ஸூதிகையின் தர்சனத்தையும் வசநத்தையும் வர்ஜிக்கவும் என்ற ஸ்ம்ருதி இருப்பதால். பத்தாவது தினத்திற்குப் பிறகு, ஸூதிகைக்குக் கர்மாநர்ஹத்வ லக்ஷணமான ஸூதகமே. பத்துநாட்களிற்போல் தர்சநாநர்ஹத்வாதி ரூபாசௌசமல்ல. அவ்விதம், பைடீனஸி :- புருஷ ப்ரஜையைப் பெற்ற ஸூதிகையை இருபது நாட்களுக்குப் பிறகு கார்யங்களைச் செய்விக்கவும் ஸ்த்ரீ சிசுவைப் பெற்றவளை ஒருமாதத்திற்குப் பின் செய்விக்கவும்.

अत्र चन्द्रिकायाम् – कर्माण्यत्रादृष्टार्थानि दानादीनि विवक्षितानि । विंशतिरात्रेण गतेनेत्यर्थः । प्रसवदिनमारभ्य विंशतिदिनेष्वतीतेषु दानादिधर्मा भवन्तीत्यर्थः । एवं च सूतिकायां असृङ्निःसरणनिबन्धनमप्रायत्यं युगत्रय परिहरणादिहेतुभूतं द्विजातिषु दशरात्रपर्यन्तम् । अस्पृश्यत्वादिहेतुभूतं स्वजात्युक्त दशद्वादश पञ्चदशाहपर्यन्तम् । दानादिधर्मानधिकारलक्षणं तु द्विजातिषु पुत्रजनन्यां विंशतिरात्रपर्यन्तम् । स्त्रीजनन्यां मासपर्यन्तमित्यवगन्तव्यम् इति । विज्ञानेश्वरोऽपि – "माता शुध्येद् दशाहेन" इत्येतत् संव्यवहारयोग्यतामात्रम् । अदृष्टार्थेषु पुनः कर्मसु पैठीनसिना विशेष उक्तः - सूतिकां पुत्रजननीं विंशति रात्रेण कर्माणि कारयेन्मासेन स्त्रीजननीम् इति ।

சந்த்ரிகையில்:- "இதில் கர்மங்கள் என்றதால், தானம் முதலிய அத்ருஷ்டார்த்தமான கர்மங்கள் சொல்ல விரும்பப்பட்டவை. இருபது நாட்கள் சென்ற பிறகு என்பது பொருள். ப்ரஸவ தினம் முதல் இருபது நாட்கள் சென்ற பிறகு தானாதி தர்மங்கள் செய்யப்படலாம் என்று பொருள். இவ்விதமிருப்பதால், ஸூதிகையின் விஷயத்தில், மூன்று வர்ணத்திய ஸூதிகா விஷயத்திலும்,

ரக்தநிர்கமஹேதுகமான ஆசௌசம், மூன்று நுகத்தடி தூரம் தள்ளுவதற்கு ஹேதுவாயுள்ளது பத்துநாள் வரையில். தொடக்கூடாதென்பது முதலியதற்கு ஹேதுவாய் உள்ளது, அந்தந்த ஜாதிக்குச் சொல்லப்பட்டுள்ள 10,12,15-நாட்கள் வரையில். தானதர்மாதிகளில் அதிகாரமில்லாமை என்றது, மூன்று வர்ணங்களிலும், புத்ரனைப் பெற்றவளுக்கு இருபது நாள் வரையிலும், கன்யையைப் பெற்றவளுக்கு ஒரு மாத பர்யந்தமும் என்று அறியவும்'' என்றுள்ளது. ''**விக்ஞானேச்வரரும்:-** மாதா பத்து நாட்களால் சுத்தையாகிறாள் என்றது, வ்யவஹாரத்திற்கு மட்டில் யோக்யதையாகிருள் என்பது. அத்ருஷ்டார்த்தமான கர்மங்களிலோ, பைடீநஸியினுல் விசேஷம் சொல்லப்பட்டுள்ளது. புத்ரனைப் பெற்ற ஸூதிகையை இருபது நாட்களும், கன்யையைப் பெற்றவளை ஒரு மாதமும் கழிந்தபின் கார்யங்களைச் செய்விக்கவும்'' என்றார்.

वसिष्ठः – सूतकान्ते भवेन्नारी व्यवहारार्हतां गता । श्रौतस्मार्तादि कार्येषु स्त्रीप्रसूर्मासितः शुचिः ॥ तथा विंशतिरात्रेण योग्या पुंप्रसवा तु या इति ॥ स्मृत्यर्थसारेऽपि – सूतिका स्ववर्णाशौचे गते व्यवहारयोग्यैव । अदृष्टार्थेषु कर्मसु तु पुत्रप्रसूर्विंशतिरात्रेण, स्त्रीप्रसूर्मासेन शुध्यति । मासोऽप्यत्र सावनो ज्ञेयः इति । एवं च विज्ञानेश्वरीयादिषु प्रसवदिनमारभ्य विंशतिरात्रादिकं मातुराशौचं प्रतीयते । स्मृतिचन्द्रिकायां तु प्रसवदिनमारभ्येति कण्ठरवेणोक्तम् । आशौचशतककारेण तु सूतिकाया दशमदिनविहितस्नानानन्तरदिनमारभ्य विंशतिदिनानि सम्भूय मासमिति । एवं स्त्रीजनने चत्वारिंशद्दिनानीत्युक्तं शिष्टाचारानुसारेण । चत्वारिंशद्दिनानि स्युर्जनन्याः स्त्रीप्रसूतके । त्रिंशत्पुंप्रसवे ज्ञातेर्दशाह मुभयोरपि इति ॥ अयमेवार्थो दशकेऽपि प्रतिपादितः ।

வஸிஷ்டர்:- ஸூதகத்தின் முடிவில், ஸ்த்ரீ வ்யவஹாரத்திற்கு யோக்யையாவாள். ச்ரௌத ஸ்மார்த்தாதி கர்மங்களிலோ எனில், ஸ்த்ரீ சிசுவைப் பெற்றவள் ஒரு மாதத்தாலும், புருஷசிசுவைப் பெற்றவள் இருபது நாட்களாலும் யோக்யையாய் ஆகிறாள். **ஸ்ம்ருத்யர்த்தஸாரத்திலும்:-** ஸூதிகையானவள், தன் வர்ணத்திற்குரிய ஆசௌசம் சென்ற பிறகு, வ்யவஹாரத்திற்கு யோக்யையே. அத்ருஷ்டார்த்தமான கர்மங்களிலோ, புத்ரனைப் பெற்றவள் 20 நாட்களாலும், பெண்ணைப் பெற்றவள் ஒரு மாதத்தாலும் சுத்தையாகிறாள். இங்கு மாதமென்றதை ஸாவந மாதம் (30 நாட்கள்) என்று அறியவும். இவ்விதமிருப்பதால் விக்ஞாநேச்வரீயம் முதலியவைகளில், ப்ரஸவதினம் முதற்கொண்டு 20-நாள் முதலியது மாதாவின் ஆசௌசம் எனத் தெரிகிறது. ஸ்ம்ருதி சந்த்ரிகையிலோவெனில், 'ப்ரஸவதினம் முதற்கொண்டு' என்று சப்த மூலமாகவே சொல்லப்பட்டுள்ளது. ஆசௌச சதககாரரோ எனில், 'ஸூதிகைக்கு 10-வது நாளில் விதிக்கப்பட்ட ஸ்நானத்திற்கு மறுநாள் முதல் இருபதுநாள் சேர்ந்து ஒரு மாதம் என்றார். இவ்விதம் ஸ்தீரீ ப்ரஸவத்தில் 40-நாட்கள் எனப்பட்டது சிஷ்டாசாரத்தை அனுஸரித்து. 'கன்யா ப்ரஸவத்தில் மாதாவுக்கு 40-நாள். புருஷ ப்ரஸவத்தில் 30-நாள். இரண்டு ப்ரஸவத்திலும் ஜ்ஞாதிக்குப் பத்துநாள்' என்று, இந்த அர்த்தமே தசகத்திலும் சொல்லப் பட்டுள்ளது.

प्रसवाशौचम्

यत्तु चतुर्विंशतिमते उक्तम् – अधस्तान्नवमान्मासाच्छुद्धिः स्यात् प्रसवे सदा । मृते जीवेऽपि वा तस्मिन्नहोभिर्माससंख्यया इति, एतत् चन्द्रिकायां व्याकृतम् – अधस्तान्नवमान्मासात् - सप्तममासादारभ्येति शेषः । तदेतत् सूतिकाव्यतिरिक्त सपिण्डविषयम् । सूतिकादिसर्वसपिण्डविषयत्वे अत ऊर्ध्वं

स्वजात्युक्तमाशौचं तासु विद्यते इति पूर्वोक्तवचनविरोधापत्तेः ॥ एवं च यदुक्तं विष्णुना ब्राह्मणस्य सपिण्डानां जननमरणयोर्दशाहमाशौचम् । द्वादशाहं राजन्यस्य पञ्चदशाहं वैश्यस्य मासं शूद्रस्य इति, तदेतद्विष्णुवचनम् – नवमे दशमे वाऽपि प्रबलैः सूति मारुतैः । निस्सार्यते बाण इव यन्त्रच्छिद्रेण सज्वरः इति याज्ञवल्क्योक्त नवम दशममासप्रसवविषयं वेदितव्यम् इति ।

ப்ரஸவாசௌசம்:

சதுர்விம்சதிமதத்தில் :- 'ஒன்பதாவது மாதத்திற்கு முன் உண்டாகும் ப்ரஸவத்தில் சிசு இறந்தாலும், பிழைத்திருந்தாலும் மாதக் கணக்குக்குச் சரியான தினங்களால் சுத்தி' என்றுள்ளது. இது சந்த்ரிகையில் விவரிக்கப்பட்டுள்ளது. ''ஒன்பதாவது மாதத்திற்கு முன் என்பதில் 7-ஆவது மாதம் முதல் என்று சேர்க்கவும். இவ்விதம் சொல்லியது, ஸூதிகையைத் தவிர்த்த மற்ற ஞாதிகளைப் பற்றியது. ஸூதிகை முதலிய எல்லா ஸபிண்டர்களுக்கும் என்றால் முன் சொல்லிய வசநத்திற்கு விரோதம் நேரிடக்கூடும். இவ்விதமிருப்பதால், விஷ்ணுவால் சொல்லப்பட்டுள்ள 'ப்ராம்ஹணனுக்கு ஸபிண்டர்களின் ஜநநமரணங்களில் பத்துநாள் ஆசௌசம். க்ஷத்ரியனுக்குப் பன்னிரண்டுநாள், வைச்யனுக்குப் பதினைந்து நாள், சூத்ரனுக்கு ஒரு மாதம். என்ற வசநமும்,, யாக்ஞவல்க்யர் சொல்லியுள்ள- 'ஒன்பதாவது அல்லது பத்தாவது மாதத்தில் கடுமையான ப்ரஸவ வாயுக்களால் பாணம்போல் தாபத்துடன் கூடியதாய்க் கர்ப்பம் வெளியில் தள்ளப்படுகிறது' என்ற வசனப்படி, ஒன்பதாவது அல்லது பத்தாவது மாததிலுண்டாகிய ப்ரஸவத்தைப் பற்றியதென்பறு அறியப்படவேண்டும்'' என்று.

यत्तु चतुर्विंशतिमते – अधस्तान्नवमान्मासात् इति, अस्यार्थः सप्तममासादारभ्य नवमासादर्वाक् प्रसवे सति पित्रादीनां

माससंख्यया तैरहोभिः शुद्धिः । सूतिकाया दशरात्रम् । नवममासादारभ्य सपिण्डानां दशाहेन शुद्धिरिति । नवममासादारभ्य सपिण्डानां दशाहेन शुद्धिरिति । एवं च सप्तमे अष्टमे अपप्रसवरूपे गर्भनाशे सति पितृभ्रातृज्ञातीनां यथाक्रमं सप्ताहमष्टाहमाशौचं भवति । नवमे दशमे वा प्रसवे सति दशाहमाशौचमिति चन्द्रिकास्मृतिरत्नमाधवीयादौ व्यवस्थापितम् ।

சதுர்விம்சதிமத்திலுள்ள 'அதஸ்தாத் நவமாத் மாஸாத்' என்ற வசநத்திற்கோவெனில் இவ்விதம் அர்த்தம்- ' ஏழாவது மாதம் முதல், ஒன்பதாவது மாதத்திற்குமுன் ப்ரஸவமானல், பிதா முதலியவர்க்கு மாதக் கணக்கின் படியுள்ள தினங்களால் சுத்தி. ஸூதிகைக்குப் பத்துநாள் ஆசௌசம். ஒன்பதாவது மாதம் முதல் ஸபிண்டர்களுக்குப் பத்துநாள் ஆசௌசம்'' என்று. இவ்விதமிருப்பதால், ஏழாவது அல்லது எட்டாவது மாதத்தில் அபப்ரஸவ ரூபமான கர்ப்பநாசம் ஏற்பட்டால் பிதா, ப்ராதா, ஜ்ஞாதி இவர்களுக்கு முறையே, ஏழுநாள் ஆசௌசமும், எட்டு நாள் ஆசௌசமும் ஏற்படுகிறது. ஒன்பது அல்லது பத்தாவது மாதத்திலானல் பத்துநாள் ஆசௌசம் என்று சந்த்ரிகா, ஸ்ம்ருதி ரத்னம், மாதவீயம் முதலியதில் வ்யவஸ்தை செய்யப்பட்டுள்ளது.

अन्ये तु – अधस्तान्नवमान्मासात् इत्येतत् मातृपितृभ्रातृव्यतिरिक्तज्ञातिविषयम् । सप्तमे वाऽष्टमे वाऽपि नारीणां गर्भपातने । मातापित्रोर्दशाहं स्यात्सोदराणां तथैव च इति स्मरणात् इत्याहुः । अपरे तु – जातमृते मृतजाते वा सपिण्डानां दशाहम् इति हारीतस्मरणात् सप्तममासप्रभृति मृतजाते जातमृते वा सपिण्डानां जनननिमित्तं पूर्णमाशौचम् इति विज्ञानेश्वरेणाभिधानात्, सप्तमादिषु पितृज्ञात्योर्दशाहं भवेत् इति वरदराजीयेऽभिधानात्, मृतजातेऽपि वा जातमृते वा पतनात् परम् । ज्ञातीनां सूतकं पूर्णम् इति

हारीतशासनम् इति शतकेऽभिहितत्वाच्च सप्तमाष्टमयोरपि ज्ञातीनां पूर्णमाशौचम् इत्याहुः ।

சிலரோவெனில்:- 'ஒன்பதாவது மாதத்திற்கு முன்பு' என்ற வசநம் மாதா, பிதா, ப்ராதா இவர்களைத் தவிர்த்த மற்ற ஜ்ஞாதிகளைப் பற்றியது. 'ஏழாவது அல்லது எட்டாவது மாதத்தில் கர்ப்பபாதம் ஏற்பட்டால் மாதா, பிதா, ஸோதரன் இவர்களுக்குப் பத்துநாள் ஆசௌசம்' என்று ஸ்ம்ருதியிருப்பதால் என்கின்றனர். மற்றும் சிலரோவெனில்:- 'சிசு பிறந்து இறந்தாலும், இறந்து பிறந்தாலும் ஜ்ஞாதிகளுக்குப் பத்து நாள் ஆசௌசம்' என்ற ஹாரீத ஸ்ம்ருதியாலும், 'ஏழாவது மாதம் முதல் மரித்துப் பிறந்தாலும், பிறந்து மரித்தாலும் ஸபிண்டர்களுக்கு ஜநநாசௌசம் பூர்ணமாய் உண்டு' என்று விக்ஞாநேச்வரர் சொல்லியிருப்பதாலும், 'ஏழாவது முதலாகிய மாதங்களில் பிதாவுக்கும், ஜ்ஞாதிக்கும் பத்துநாள் ஆசௌசமாகும்' என்று வரதராஜீயத்தில் சொல்லப்பட்டிருப்பதாலும், 'இறந்து பிறந்தாலும், பிறந்து இறந்தாலும் பதநத்திற்குப் பிறகு (5,6- வது மாதங்களுக்குப் பிறகு)ஜ்ஞாதிகளுக்குப் பூர்ணாசௌசம்' என்று சதகத்தில் சொல்லப்பட்டிருப்பதாலும், ஏழாவது எட்டாவது மாதங்களில் பூர்ணாசௌசம் என்கின்றனர்.

अत्र व्यवस्थामाहुः – सन्निहितानां पितृभ्रातृरूपसपिण्डानां सप्तमाष्टमयोः पूर्णमाशौचम् । मातापित्रोर्दशाहं स्यात् सोदराणां तथैव च इति मनुना विशिष्य स्मरणात् । पितृभ्रातृ व्यतिरिक्त व्यवहितसपिण्डविषयं अधस्तान्नवमान्मासात् इति । नवममा-समारभ्य प्रसवनिमित्तदशाहादिसूतकं सर्वसपिण्डानामविशेषेण भवति । तत्र हि प्रसवो मुख्यः । तथा च श्रूयते – दशमे मासि सूतवे इति । उपनिषदि च - दश वा नव वा मासानन्तः शयित्वा यावद्वाऽथ जायते इति ।

இவ்விஷயத்தில் வ்யவஸ்தையைச் சொல்லுகின்றனர்- 'ஸந்நிஹிதர்களான பிதா, ப்ராதா போன்ற ஸபிண்டர்களுக்கு ஏழாவது எட்டாவது மாதங்களில் பூர்ணாசௌசம், 'மாதா பிதாக்களுக்கும், ஸ்ஹோதரர்களுக்கும் பத்துநாள் ஆசௌசம்' என்று மனு விசேஷித்துச் சொல்லியிருப்பதால். பிதா, ப்ராதா இவர்களைத் தவிர்த்த, வ்யவஹித ஸபிண்டரைப் பற்றியது- 'ஒன்பதாவது மாதத்திற்கு முன்பு' என்ற வசனம். ஒன்பதாவது மாதம் முதல், ப்ரஸவ நிமித்தமான பத்துநாள் ஆசௌசம் எல்லா ஸபிண்டர்களுக்கும் ஸமமாகவே ஏற்படுகிறது. அந்த ப்ரஸவத்திலன்றோ 'ப்ரஸவ சப்தம் முக்யமாகிறது. அவ்விதமே ச்ருதியுள்ளது- 'தசமே மாஸி ஸூதவே' என்று. உபநிஷத்திலும்- 'பத்து அல்லது ஒன்பது மாதம் கர்ப்பத்தினுள் வஸித்துப் பிறகு ஜநிக்கின்றது' என்று.

वर्णविशेषाशौचम्

तत्र यथावर्णमाशौचमाह दक्षः – शुद्ध्येद्विप्रो दशाहेन द्वादशाहेन भूमिपः । वैश्यः पञ्चदशाहेन शूद्रो मासेन शुद्ध्यति इति । याज्ञवल्क्यश्च – क्षत्रस्य द्वादशाहानि विशः पञ्चदशैव तु । त्रिंशद्दिनानि शूद्रस्य तदर्धं न्यायवर्तिनः इति । न्यायवर्तिनः - द्विजशुश्रूषादिनिरतस्य ॥ मनुरपि – अशुद्धा बान्धवाः सर्वे सूतकेऽपि तथैव च इति । बान्धवाः - सपिण्डाः । तथैव - दशाहमित्यर्थः । बोधायनोऽपि – सपिण्डेष्वादशाहमाशौचम् इति ॥ संवर्तः – जातस्यापि विधिर्दृष्ट एष एव मनीषिभिः । दशरात्रेण शुद्ध्येत वैश्वदेवविवर्जितः इति ।

வர்ண விசேஷாசௌசம்.

வர்ணங்களுக்கேற்றபடி ஆசௌசத்தைச் சொல்லுகிறார், தக்ஷர்:- ப்ராம்ஹணன் பத்து நாட்களாலும், க்ஷத்ரியன் 12-நாட்களாலும், வைச்யன் 15-நாட்களாலும்,

சூத்ரன் ஒரு மாதத்தாலும் சுத்தனாகிறான். **யாக்ஞவல்க்யரும்:-** க்ஷத்ரியனுக்குப் பன்னிரண்டு நாட்களும், வைச்யனுக்குப் பதினைந்து நாட்களும், சூத்ரனுக்கு முப்பது நாட்களும், ந்யாயவர்த்தியான சூத்ரனுக்குப் பதினைந்து நாட்களும் ஆசௌசம். ந்யாயவர்த்தீ= த்விஜர்களுக்கு சுச்ரூஷை முதலியதைச் செய்பவன். **மனுவும்:-** ஸபிண்டர்கள் ஜநநத்திலும் அசுத்தர்கள், அசுத்தி பத்துநாள் வரையில். **போதாயனரும்:-** ஸபிண்டர் விஷயத்தில் பத்து நாள் வரையில் ஆசௌசம். **ஸம்வர்த்தர்:-** ஜநநத்திலும் இதே விதி புத்திமான்களால் சொல்லப்பட்டுள்ளது. ஸபிண்டன் பத்து நாட்களால் சுத்தனாகிறான், வைச்வதேவ மனுஷ்டிக்காதவனாய்.

व्यासोऽपि – दशाहं शावमाशौचं सपिण्डेषु विधीयते । जननेऽप्येवमेव स्यान्निपुणां शुद्धिमिच्छताम् इति ।। स्मृत्यन्तरेऽपि – शावमाशौचं दशरात्रं जननेऽप्येवम् इति । एतद्दशरात्राशौचं ब्राह्मणविषयम् । सङ्ग्रहेऽपि – दशाहं द्वादशाहं च पक्षं मासमिति क्रमात् । ब्रह्मक्षत्रियविट्छूद्रवर्णानां पूर्णसूतकम् इति । मुख्यकर्तुरघं तावदिति वचनं शुभकर्मानर्हत्वपरम् । एकोद्दिष्टान्त एव स्यात् संस्कर्तुः शुद्धता त्वघात् इति वचनात् । स्मृत्यन्तरेषु तु – क्षत्रियादीनां दशाहादयोऽप्याशौचकल्पा दर्शिताः ।

வ்யாஸரும்:- ஸபிண்டர்கள் விஷயத்தில் பத்துநாள் சாவா சௌசம் விதிக்கப்படுகிறது. ஜநநத்திலுமிவ் விதமேயாகும் என்று சுத்தியை விரும்புகிறவர்களுக்கு. **மற்றொரு ஸ்ம்ருதியிலும்:-** சாவாசௌசம் பத்து நாள். ப்ரஸவத்திலுமிவ்விதம். இந்த தசராத்ராசௌசம் ப்ராம்ஹணனைப் பற்றியது. **ஸங்க்ரஹத்திலும்:-** 10-நாள், 12-நாள், ஒரு பக்ஷம், ஒரு மாதம், என்று முறையே ப்ராம்ஹண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரவர்ணங்களுக்குப் பூர்ணாசௌசம். 'முக்ய கர்த்தாவுக்கு ஸபிண்டீகரணம்

வரையிலாசௌசம்' என்ற வசநம், சுபகர்மங்களுக்கு அர்ஹனல்லாதவன் என்பதில் தாத்பர்யமுள்ளது. 'ஏகோத்திஷ்டத்தின் முடிவிலேயே ஸம்ஸ்கர்த்தாவுக்கு ஆசௌசத்தினின்று சுத்தி, என்ற வசனத்தால். மற்ற ஸ்ம்ருதியிலோ வெனில்:- க்ஷத்ரியர் முதலியவர்க்கும் பத்து நாள் முதலிய ஆசௌச கல்பங்கள் சொல்லப்பட்டுள்ளன.

यथा पराशरः – क्षत्रियस्तु दशाहेन स्वकर्मनिरतः शुचिः । तथैव द्वादशाहेन वैश्यश्शुद्धिमवाप्नुयात् इति ।। तथा शातातपः – एकादशाहाद्राजन्यो वैश्यो द्वादशभिस्तथा । शूद्रो विंशतिरात्रेण शुद्ध्यते मृतसूतके इति । वसिष्ठस्तु – पञ्चदशरात्रेण राजन्यो विंशतिरात्रेण वैश्यः इति । अङ्गिरास्त्वाह – सर्वेषामेव वर्णानां सूतके मृतके तता । दशाहाच्छुद्धिरथ वा इति शातातपोऽब्रवीत् इति । अत्र विज्ञानेश्वरः – एवमनेकोच्चावचाशौचकल्पाः स्मृतिषु दर्शिताः । तेषां लोकसमाचाराभावान्नातीव व्यवस्थादर्शन मुपयोगीति नात्र व्यवस्था प्रदर्श्यते इति ।

பராசரர்:- ஸ்வகர்மத்தில் தத்பரனாகிய க்ஷத்ரியன் பத்துநாட்களாலும், அவ்விதமான வைச்யன் பன்னிரண்டு நாட்களாலும், சுத்தியை அடைவான். அவ்விதமே, சாதாதபர்:- க்ஷத்ரியன் 11-நாட்களாலும், வைச்யன் 12-நாட்களாலும், சூத்ரன் 20-நாட்களாலும் ஜநநமரணாசௌசங்களில் சுத்தனாகிறான். வஸிஷ்டரோவெனில்:- 'க்ஷத்ரியன் 15-நாட்களாலும், வைச்யன் 20-நாட்களாலும் சுத்தனாகிறான்' என்றார். அங்கிரஸ்ஸோவெனில்:- அல்லது எல்லா வர்ணங்களுக்கும் ஜநநாசௌசத்திலும், மரணாசௌசத்திலும் பத்து நாட்களால் சுத்தி என்று சாதாதபர் சொன்னார்' என்றார். இதில் விஜ்ஞானேச்வரர்:- 'இவ்விதம் அநேக பேதங்களுள்ள ஆசௌச கல்பங்கள் ஸ்ம்ருதிகளில் காண்பிவிக்கப்பட்டுள்ளன. அவைகள் லோகாசாரத்தில் இல்லாமலிருப்பதால், அவ்விஷயத்தில் வ்யவஸ்தையைக் காண்பிவிப்பது அதிகமாய்

உபயோகார்ஹமல்லவென்று இவ்விடத்தில் வ்யவஸ்தை காண்பிவிக்கப்படவில்லை' என்றார்.

अनुलोमप्रतिलोमाशौचम्

यदा पुनर्ब्राह्मणादीनां क्षत्रियादयः सपिण्डा भवन्ति, तत्राह हारीतः – दशाहाच्छुध्यते विप्रो जन्महानिषु योनिषु । षड्भिस्त्रिभिरथैकेन क्षत्रविट्छूद्रयोनिषु । शूद्रविट्क्षत्रियाणां तु ब्राह्मणे संस्थिते सति । दशरात्रेण शुद्धिस्स्यादित्याह कमलोद्भवः इति । एतदविभक्तविषयम् । क्षत्रविट्छूद्रजातीनां यदि स्तो मृतसूतके । तेषां तु पैतृकाशौचं विभक्तानां तु मातृकम् इत्यापस्तम्बस्मरणात् । विष्णुरप्याह – क्षत्रियस्य विट्छूद्रेषु सपिण्डेषु षड्रात्र त्रिरात्राभ्यां वैश्यस्य शूद्रसपिण्डे षड्रात्रेण शुद्धिः । हीनवर्णानां तूत्कृष्टेषु सपिण्डेषु जातेषु मृतेषु वा तदाशौचव्यपगमे शुद्धिः इति ।

அனுலோம ப்ரதிலோமாசௌசம்.

ப்ராம்ஹணர் முதலியவர்க்கு க்ஷத்ரியர் முதலியவர்கள் ஸபிண்டர்களானால், அவ்விஷயத்தில் ஆசௌசத்தைச் சொல்லுகிறார் ஹாரீதர்:- 'ப்ராம்ஹணன், ஸவர்ணஸ்த்ரீயிடம் பிறந்த ஸபிண்டனின் ஜநநமரணங்களில் பத்து நாட்களால் சுத்தனாகிறான். க்ஷத்ரிய வைச்ய சூத்ர ஸ்த்ரீகளிடம் பிறந்த ஸபிண்டர்களின் ஜநநமரணங்களில் முறையே ஆறு, மூன்று, ஒரு தினங்களால் சுத்தனாகிறான். சூத்ரன், வைச்யன், க்ஷத்ரியன் இவர்களுக்கு ப்ராம்ஹணனின் ம்ருதியில் தசராத்ரத்தால் சுத்தி என்றார் ப்ரம்ஹா' என்று. இது விபாகமாகாதவரைப் பற்றியது. ''க்ஷத்ரிய வைச்ய சூத்ரஜாதீயர்களுக்கு ஜநந மரணங்கள் ஏற்பட்டால், அவர்களுக்குப் பிதாவின் ஆசௌசம். அவர்கள் விபக்கதர்களானால் மாதாவின் ஆசௌசம்'' என்று ஆபஸ்தம்ப

ஸ்ம்ருதியிருப்பதால். விஷ்ணுவும்:- "க்ஷத்ரியனுக்கு வைச்யரும், சூத்ரரும், ஸபிண்டர்களானால், முறையே ஆறு நாள், மூன்று, நாள் இவைகளால் சுத்தி. வைச்யனுக்குச் சூத்ரன் ஸபிண்டனானால் ஆறு நாட்களால் சுத்தி. கீழ் வர்ணத்தார்களுக்கு மேல் வர்ணத்தார்களான ஸபிண்டர்கள் பிறந்தாலும், இறந்தாலும் மேல் வர்ணத்தாரின் ஆசௌச நிவ்ருத்தியால் சுத்தி" என்று.

पराशरः – एकपिण्डास्तु दायादाः पृथग्दारनिकेतनाः । जन्मन्यपि विपत्तौ च तेषां तत्सूतकं भवेत् इति । एकपिण्डाः - उत्तमवर्णः उत्पादको येषां ते तथा, पृथग्दारनिकेतनाः - हीनवर्णाः स्त्रिया निकेतनान्युत्पत्तिस्थानानि येषां ते, दायादाः - पुत्राः, तत्सूतकं - उत्तमवर्णसंबन्ध्याशौचमित्यर्थः । बोधायनेनाविशेषेण दशाह इत्युक्तम् – क्षत्रविट्छूद्रजातीया ये स्युर्विप्रस्य बान्धवाः । तेषामाशौचे विप्रस्य दशाहाच्छुद्धिरिष्यते इति । पराशरेण तु विशेषेणोक्तम् – षड्रात्रं स्यात्त्रिरात्रं स्यादेकरात्रं क्रमेण तु इति । अनयोश्च पक्षयोरापदनापद्विषयत्वेन व्यवस्था ॥ सङ्करजानां शूद्रेष्वन्तर्भावात्तेषां शूद्रवदेवाशौचम् ॥ तथा मनुः – शूद्राणां तु सधर्माणः सर्वेऽपध्वंसजाः स्मृताः इति । ब्राह्मेऽपि – शौचाशौचं प्रकुर्वन्ति शूद्रवद्वर्णसङ्कराः इति ।

பராசரர்:- உத்தமவர்ணனை உத்பாதகனையுடையவர்களும், ஹீநவர்ண ஸ்த்ரீகளை உத்பத்தி ஸ்தானமாயுடையவருமான புத்ரர்கள் எவர்களோ, அவர்களுக்கு உத்தம வர்ணத்தைச் சேர்ந்த ஆசௌசம் விதிக்கப்படுகிறது. போதாயனர்:- விசேஷமின்றித் தசராத்ரம் என்கிறார்- "க்ஷத்ரிய வைச்ய சூத்ர ஜாதியர்கள் ப்ராம்ஹணனுக்கு ஸபிண்டர்களானால் அவர்களின் ஆசௌசத்தில் ப்ராம்ஹணனுக்குத் தசராத்ரத்தால் சுத்தி" என்று பராசரரோவெனில்:- விசேஷத்தைச் சொல்லுகிறார்:- 'ஆறு நாள், மூன்றுநாள், ஒரு நாள் என்று;

இவ்விரண்டு பக்ஷங்களுக்கும் ஆபத்காலம் அநாபத்காலம் இவைகளைப்பற்றி வ்யவஸ்தை செய்யவேண்டும். ஸங்கரஜாதர்கள் சூத்ரர்களுள் உட்பட்டவர்களானதால் அவர்களுக்குச் சூத்ரருக்குப் போல் ஆசௌசம். அவ்விதமே, **மனு:**- ஸங்கரஜாதீயர்களெல்லாரும் சூத்ரர்களுக்கு ஸமமான தர்மமுடையவர்களாவர். **ப்ராம்ஹத்திலும்:**- ஸங்கரஜாதீயர்கள், சூத்ரர்கள் போல் சுத்தி, ஆசௌசம் இவைகளை அநுஷ்டிக்கின்றனர்.

अनुलोमप्रतिलोमानामाशौचविशेषमाह आपस्तम्बः – सर्वेषामनुलोमाना माशौचं मातृवर्गवत् । पैतृकं प्रतिलोमाना माशौचं सद्भिरिष्यते इति । शूद्रप्रतिलोमानामाशौचाभाव एव । यदाह हारीतः – न शूद्रप्रतिलोमानामाशौचं वाऽस्ति किञ्चन इति । जाबालिः – मासं शूद्रस्य शेषाणां सदाशौचमिति स्थितिः । तथाऽपि मरणे तेषां स्नानमात्रं विधीयते इति ॥ विज्ञानेश्वरीये च – प्रतिलोमा धर्महीनाः इति ।

அநுலோம ப்ரதிலோமர்களுக்கு ஆசௌசத்தில் விசேஷத்தைச் சொல்லுகிறார் **ஆபஸ்தம்பர்:**- அநுலோம ஜாதீயர்கள் எல்லோருக்கும் மாத்ரு வர்க்கத்தில் போல் ஆசௌசம். ப்ரதிலோமர்களுக்கு ஆசௌசம் பித்ரு வர்க்கத்தைப்போல் என்று ஸாதுக்கள் சொல்லுகின்றனர். சூத்ரனால் உண்டாகிய ப்ரதிலோமர்களுக்கு ஆசௌசமே இல்லை. அதைச் சொல்லுகிறார் **ஹாரீதர்:**- சூத்ரனால் பிறந்த ப்ரதிலோமர்களுக்கு ஆசௌசம் கொஞ்சமும் இல்லை என்று. **ஜாபாலி:**- சூத்ரனுக்கு ஒரு மாதம் ஆசௌசம், மற்றவர்க்கு எப்பொழுதுமே ஆசௌசம் என்று வ்யவஸ்தை. ஆனாலும் மரணத்தில் அவர்களுக்கு ஸ்நாநம் மட்டும் விதிக்கப்படுகிறது. **விஜ்ஞாநேச்வரீயத்திலும்:**- ப்ரதிலோமர்கள் தர்மமற்றவர்கள்.

समानोदकाशौचम्

समानोदकाशौचमाह मनुः – जन्मन्येकोदकानां तु त्रिरात्राच्छुद्धिरिष्यते इति । पराशरः – दिनत्रयेण शुध्यन्ति ब्राह्मणाः प्रेतसूतके इति । ब्राह्मणाः समानोदका इति शेषः ॥ तथा च जाबालिः – दशाहेन सपिण्डानां शुद्धिः स्यात्तु त्रिरात्रतः । समानोदकानामपि गोत्रजानामहः स्मृतम् इति । देवलः – समानोदकानां त्र्यहं गोत्रजानामहः स्मृतम् इति । बृहस्पतिरपि – दशाहेन सपिण्डास्तु शुद्ध्यन्ति प्रेतसूतके । त्रिरात्रेण सकुल्यास्तु स्नात्वा शुद्ध्यन्ति गोत्रजाः इति । सकुल्याः - समानोदकाः । स्नानं तु मरणविषयम्, जन्मनि सगोत्रस्य स्नानाभावात् । सङ्ग्रहे – जाते च सोदके प्रेते त्र्यहं सद्यो व्रतादधः इति । उपनयनात् पूर्वं मरणे सद्यः शुद्धिरित्यर्थः ।

ஸமாநோதகாசௌசம்

மனு:- ஸமாநோதகர்களுக்குப் பிறப்பில் மூன்று நாட்களால் சுத்தி விதிக்கப்படுகிறது. **பராசரர்:-** ப்ராம்ஹணர்கள் சாவத்திலும், ஸூதகத்திலும் மூன்று நாட்களால் சுத்தராகின்றனர். 'ஸமாநோதகரான' என்று சேர்க்கவும். அவ்விதமே, **ஜாபாலி:-** ஸபிண்டர்களுக்குப் பத்து நாட்களாலும், ஸமாநோதகர்களுக்கு மூன்று நாட்களாலும், ஸகோத்ரர்களுக்கு ஒரு தினத்தாலும் சுத்தி. **தேவலர்:-** ஸமாநோதகர்களுக்கு மூன்று நாளும், கோத்ரத்தில் உண்டானவர்களுக்கு ஒரு நாளும் என்று விதிக்கப்பட்டுள்ளது. **ப்ருஹஸ்பதியும்:-** ஸபிண்டர்கள் மரண ஜநநாசௌசங்களில் தசராத்ரத்தாலும், ஸமாநோதகர்கள் த்ரிராத்ரத்தாலும், ஸகோத்ரர்கள் ஸ்நானத்தாலும் சுத்தராகின்றனர். ஸ்நானமோ மரண விஷயம். ஜநநத்தில் ஸ்நானமில்லாததால். **ஸங்க்ரஹத்தில்:-** ஸமாநோதகன் பிறந்தால் மூன்று நாள்

ஆசௌசம். 'உபநயனத்திற்கு முன் அவன் இறந்தால் ஸத்ய ச்செளசம்.

सजातीयसापिण्ड्यम्

सजातीयेषु सापिण्ड्यावधिमाहतुः शङ्खलिखितौ – सपिण्डता तु सर्वेषां गोत्रतः सप्तपौरुषी इति । यतः प्रभृति सन्तानविश्लेषः स कूटस्थः तत्सन्ताने तमादिं कृत्वा गणिताः पुत्रपौत्रादयः सप्तपुरुष-पर्यन्ताः सपिण्डाः । तेषां सर्वेषां कूटस्थसन्ततिजातानां गोत्रतः एकगोत्रलक्षणोपाधिसद्भावे सति सपिण्डता भवतीत्यर्थः । एवं च कूटस्थस्त्रीपुंससन्ततिजातानां दौहित्रपौत्राणां गोत्रभेदादन्योन्य मसपिण्डता मन्तव्या । माधवीये – लेपभाजश्चतुर्थाद्याः पित्राद्याः पिण्डभागिनः । पिण्डदः सप्तमस्तेषां सापिण्ड्यं सप्तपौरुषम् इति ।

ஸஜாதீய ஸாபிண்ட்யம்:-

ஸஜாதீயர்களுள் ஸபிண்டத் தன்மையின் முடிவைச் சொல்லுகின்றனர் சங்கலிகிதர்கள்:- "ஸபிண்டத் தன்மை எல்லாருக்கும் ஒரே கோத்ரமிருந்தால் ஏழு புருஷர்கள் வரையிலுள்ளது." எவன் முதற்கொண்டு வம்சம் பிரிகிறதோ, அவன் கூடஸ்தன். அவனது வம்சத்தில் அவனை முதல்வனாய் வைத்து எண்ணப்பட்டுள்ள புத்ரன் பௌத்ரன் முதலியவர்களாய் ஏழு புருஷர்கள் வரையிலுள்ளவர்கள் ஸபிண்டர்கள். கூடஸ்தனின் வம்சத்தில் பிறந்தவர்களுக்கு ஒரே கோத்ரமாயிருந்தால் ஸபிண்டத்வம் இருக்கிறது என்பது பொருள். இவ்விதமிருப்பதால், கூடஸ்தனுடைய பெண் ஸந்ததியில் பிறந்த தௌஹித்ரர்களுக்கும், பிள்ளையின் ஸந்ததியில் பிறந்த பௌத்ரர்களுக்கும் கோத்ர பேதம் இருப்பதால் பரஸ்பரம் அவர்களுக்கு ஸபிண்டத்வமில்லையென்று அறியவும். **மாதவீயத்தில்:-** *நான்காவதாயுள்ளவன் முதல் (மூவர்) லேபபாக்குகள் எனப்படுவர். பிதா முதல் உள்ளவர் (மூவர்) பிண்டபாக்குகள் எனப்படுவர்.*

இவர்களுக்கு ஏழாவதாயுள்ளவன் பிண்டதன் எனப்படுகிறான். இவ்விதம் ஸாபிண்ட்யம் ஏழுபுருஷர்கள் வரையுள்ளது.

स्मृत्यन्तरेऽपि – ऊर्ध्वं पञ्चसु पित्रादिष्वधः पुत्रादिपञ्चसु । स्मृतं सजातिसापिण्ड्यमेतत्सन्ततिजेष्वपि इति । अत्र दातृकूटस्थ व्यतिरेकेण पञ्चसु सापिण्ड्य स्मरणं वेदितव्यम् । ततश्च ताभ्यां सह सप्तपूरुषमित्यर्थः । बोधायनः – सपिण्डता त्वासप्तमात् इति । स्मृत्यन्तरे – सर्वेषामेव वर्णानां विज्ञेया सप्तपौरुषी । सपिण्डता ततः पश्चात् समानोदकधर्मता इति ॥ मनुरपि – सपिण्डता तु पुरुषे सप्तमे विनिवर्तते । समानोदकभावस्तु जन्मनाम्नोरवेदने इति । सप्तमे पुरुषे अतिक्रान्ते तदूर्ध्वं सपिण्डता निवर्तत इत्यर्थः । स्मृत्यन्तरेऽपि – समानोदकभावस्य निवृत्तिः स्यादवेदने इति ।

மற்றொரு ஸ்ம்ருதியில்:- *"பிதா முதல் மேலேயுள்ள ஐந்து பேர்களிலும், புத்ரன் முதல் கீழேயுள்ள ஐந்து பேர்களிடத்திலும், இவர்களின் ஸந்ததியில் உண்டாகியவர்களிடத்திலும் ஸாபிண்ட்யம் உண்டெனச் சொல்லப்பட்டுள்ளது" என்றுள்ளது. இதில் பிண்டதாதா, கூடஸ்தன் இருவரைத் தவிர்த்து ஐந்து பேர்களிடம் ஸாபிண்ட்யம் சொல்லப்பட்டது. ஆகையால் அவ்விருவரையும் சேர்த்து ஏழு புருஷர்களிடம் ஸாபிண்ட்யம் உள்ளது என்பது பொருள்.* **போதாயனர்:-** *ஏழாமவன் வரையில் ஸபிண்டதை உள்ளது.* **மற்றொரு ஸ்ம்ருதியில்:-** *எல்லா வர்ணங்களுக்கும் ஏழு புருஷர்கள்வரை ஸபிண்டதை என்பது அறியத்தக்கது. அதற்குப் பிறகு ஸமாநோதகதை ஏழு புருஷர்கள் வரையில் அறியத்தக்கது.* **மனுவும்:-** *ஸபிண்டத்வம் ஏழாவது புருஷனுக்குப் பிறகு நிவர்த்திக்கும். ஸமாநோதக பாவமோவெனில், பிறப்பும், பெயரும் தெரியாவிடில் நிவர்த்திக்கிறது.* **மற்றொரு ஸ்ம்ருதியில்:-** *ஸமாநோதகத் தன்மை ஜன்மம், நாமமிவை தெரியாவிடில்*

நிவர்த்திக்கும்.

व्यासः – समानोदकभावस्त्वनुवर्तेताऽऽचतुर्दशात्। जन्मनाम्नोः स्मृतेरेके तत्परं गोत्रमुच्यते इति। जन्म च नाम च जन्मनामनी। तयोः स्मरणं यावत् समानोदकभाव इत्येके मन्यन्ते। ततः परं निवर्तत इत्यर्थादुक्तम्। पारस्करः – आसप्तमात्सापिण्ड्य मादश-मात्समानोदकत्वम् इति॥ दीपिकायाम् – अष्टमात् प्राक् सपिण्डाः स्युर्द्विविधा अष्टमादयः। त्रयः समानोदकास्स्युस्ततोऽन्ये गोत्रजाः स्मृताः इति। इदं दशमपर्यन्तं समानोदकत्वस्मरणं विदेशस्थ विषयम्। आचतुर्दशात्समानोदकत्वस्मरणं सन्निहित देशवर्तिषु चतुर्दश-पुरुषादूर्ध्वमपि स्नेहोपलालनादिद्वारा जन्मनामवेदनेऽपि समानोदकत्वनिवृत्तिपरम्। जन्मनाम्नोरवेदने इति मनुवचनं सन्निहित देशवर्तिषु बन्धुत्वपरिपालनाद्यभावेन जन्मनामवेदनाभावे चतुर्दशपुरुषादर्वागपि समानोदकत्वनिवृत्तिपरम्॥ आसप्तमाद्दशमाद्वा समानग्रामवासे यावत्सम्बन्धमनुस्मरेयुः इति वसिष्ठस्मरणात्।

வ்யாஸர்:- ஸமாநோதக பாவம், 14-ஆவது புருஷன் வரையில் அனுவர்த்திக்கும். ஜந்ம நாமங்கள் தெரியும் வரையிலென்று சிலர். பிறகு நிவர்த்திக்கிறது. பிறகு ஸகோத்ரத்வம் சொல்லப்படுகிறது. **பாரஸ்கரர்:-** ஏழாவது புருஷன் வரையில் ஸாபிண்ட்யம். பத்தாவது புருஷன் வரையில் ஸமாநோதகபாவம். **தீபிகையில்:-** "8-ஆவது புருஷனுக்கு முன்னுள்ளவர்கள் ஸபிண்டர்களாவர். 8-ஆவது புருஷன் முதல் மூன்று புருஷர்கள் ஸமாநோதகர்கள். இவ்விதம் இரண்டுவிதமாவர். அதற்குப்பிறகு ஸகோத்ரர்களெனப்படுகிறார்கள்" என்றுள்ளது. பத்தாவது புருஷன் வரையில் ஸமாநோதகத்வம் சொல்லியது விதேசத்திலிருப்பவரைப் பற்றியது. 14-ஆவது புருஷன் வரையில் ஸமாநோதகத்வம்

சொல்லியது ஸமீப தேசத்திலுள்ளவர்களுள். 14-வது புருஷனுக்கு மேலும் ஸ்நேஹம் லாலனம், முதலியவைகளின் வழியாய் ஜன்ம, நாமங்கள் தெரிந்தாலும், ஸமாநோதகத்வம் நிவர்த்திக்கின்ற தென்பதில் தாத்பர்யமுள்ளது. 'பிறப்பும், பெயரும் தெரியாவிடில்', என்ற மனுவசநம், ஸமீப தேசத்தி லிருப்பவர்களிலும், பந்துத்வத்தைப் பரிபாலிப்பது முதலியதில்லாததால், பிறப்பு பெயர் இவை தெரியாவிடில், 14-ஆவது புருஷனுக்கு முன்பும் ஸமாநோதக பாவம் நிவர்த்திக்கின்றதென்பதில் தாத்பர்யமுடையது. ''7-ஆவது புருஷன் வரையிலோ, 10வது புருஷன் வரையிலோ ஒரே க்ராமத்தில் ஸம்பந்தமுள்ள வரையில் நினைக்கவேண்டும்'' என்று வஸிஷ்ட ஸ்ம்ருதியிருப்பதால்.

सगोत्रेषु व्यवस्था चन्द्रिकायां दर्शिता–

जन्मनाम्नोरस्मरणेन समानोदकभावो येषां निवृत्तः ते गोत्रजाः स्नात्वा शुध्यन्ति । येषां जन्मनाम्नोः स्मरणे सत्यपि चतुर्दश पुरुषातिक्रमात् सगोत्रत्वम्, तेषां न स्नानमात्राच्छुद्धिः । समानोद-कानां त्र्यहं गोत्रजानामहः स्मृतम् इति जाबालि वचनस्यैवंविध गोत्रजविषयत्वात् इति । सप्तपौरुषीसपिण्डता ब्राह्मणादि सर्ववर्णेषु समाना ।

ஸகோத்ர விஷயத்தில் முடிவு சொல்லப்பட்டுள்ளது, சந்த்ரிகையில்:- ''பிறப்பும் பெயரும் தெரியாததால் ஸமாநோதகபாவம் எவர்களுக்கு நிவர்த்தித்துள்ளதோ, அந்தக் கோத்ரஜர்கள் ஸ்நாநம் செய்வதால் சுத்தராகின்றனர். எவர்களுக்கு ஜன்ம நாமங்கள் தெரிந்திருக்கும் போதே 14-ஆவது புருஷனும் தாண்டியதால் ஸகோத்ரத்வமுள்ளதோ, அவர்களுக்கு ஸ்நானமாத்ரத்தால் சுத்தி இல்லை. ஒருநாளா சௌசமுண்டு. 'ஸமாநோதகர்களுக்கு மூன்று நாள்,

ஸகோத்ரர்களுக்கு ஒரு நாள் ஆசௌசம்' என்ற ஜாபாலி வசநம் இவ்விதமான ஸகோத்ரனைப் பற்றியதால்'' என்று. ஏழு தலைமுறை வரையில் ஸாபிண்ட்யம் என்றது ப்ராம்ஹணன் முதலான எல்லா வர்ணங்களுக்கும் ஸமானமாம்.

विजातीयसापिण्ड्यं कन्यासापिण्ड्यम् ।

विजातीयेषु त्रिपुरुषमेव सापिण्ड्यम् – यदाह पराशरः – सपिण्डता तु पुरुषे सप्तमे विनिवर्तते । सजातीयेषु वर्णेषु चतुर्थे भिन्नजातिषु इति ।। कूटस्थसजातीयेषु सपिण्डता सप्तमादूर्ध्वं विनिवर्तते । विजातीयेषु त्रिपुरुषादूर्ध्वं विनिवर्तत इत्यर्थः ।। तथा च शातातपः – पुत्राणामसपिण्डानामप्रत्तानां च योषिताम् । सपिण्डता तु निर्दिष्टा पितृपक्षे त्रिपूरुषम् इति । असपिण्डानां - विजातीयनाम्, अप्रत्तानां - अदत्तानामनूढानामित्यर्थः । स एव – यद्येकजाता बहवः पृथक् क्षेत्राः पृथग्जनाः । एकपिण्डाः पृथक् शौचाः पिण्डस्त्वावर्तते त्रिषु इति ।। एकजाताः - एकस्माद् ब्राह्मणादेर्जाताः, पृथक्क्षेत्राः - भिन्नजातीयासु स्त्रीषु जाताः, अत एव पृथग्जनाः, एकपिण्डाः - सपिण्डाः, पिण्डस्त्वावर्तते त्रिषु - तेषां त्रिपुरुषमेव सापिण्ड्यमित्यर्थः ।।

விஜாதீய ஸாபிண்ட்யமும், கன்யா ஸாபிண்ட்யமும்.

விஜாதீயர்கள் விஷயத்தில் மூன்று புருஷர் வரையிலேதான் ஸாபிண்ட்யம். பராசரர்:- ''ஸமாநஜாதீய வர்ணங்களில் ஸபிண்டத்வம் 7-ஆவது புருஷனிடத்தில் நிவர்த்திக்கின்றது. பின்னஜாதீயர்களிடத்தில் 4-ஆவது புருஷனிடத்தில் நிவர்த்திக்கின்றது'' கூடஸ்தனுக்கு ஸமான ஜாதீயர்களில் ஸபிண்டத்வம் ஏழாவது புருஷனுக்குப்பிறகு நிவர்த்திக்கின்றது. விஜாதீயர்களில் மூன்று புருஷர்களுக்குப்பிறகு நிவர்த்திக்கின்றதென்பது பொருள். அவ்விதமே, சாதாதபர்:- விஜாதீயர்களான

புருஷர்களுக்கும், விவாஹமாகாத பெண்களுக்கும் ஸாபிண்ட்யம் பித்ரு பக்ஷத்தில் மூன்று புருஷர்கள் வரையில் என்று சொல்லப்பட்டுள்ளது. சாதாதபரே:- ப்ராம்ஹணன் முதலிய ஒரு வர்ணத்தானிடமிருந்து, பின்ன வர்ணைகளான ஸ்த்ரீகளிடம் பிறந்தவர்களான தனி ஜநங்கள் ஸபிண்டர்கள், அவர்களுக்கு ஆசௌசம் தனி, ஸாபிண்ட்யமும் மூன்று புருஷர்கள் வரையில்தான்.

व्यासोऽपि – ये त्वेकजाता बहवो भिन्नयोनय एव च । भिन्नवर्णाश्च सापिण्ड्यं भवेत्तेषां त्रिपूरुषम् इति ।। वृद्धपराशरोऽपि – तावत्तत्सूतकं गोत्रे चतुर्थपुरुषेण तु इति । तत्सूतकं - भिन्नजातीयसन्तति विषयोक्तं सूतकम् । तावत् - यावत्त्रिपूरुषम् । चतुर्थपुरुषेण तु निवर्तत इत्यर्थः । यत्तु पराशरेण सजातीयेषु पञ्चमादिषु सापिण्ड्यनिवृत्तिपूर्वकमाशौचतारतम्यमुक्तम् – दायाद्विच्छेदमाप्नोति पञ्चमो वाऽऽत्मवंशजः । चतुर्थे दशरात्रं स्यात् षण्णिशाः पुंसि पञ्चमे ।। षष्ठे चतुरहाच्छुद्धिः सप्तमे तु दिनत्रयात् इति । आत्मवंशजः पञ्चमः, वा शब्दात् षष्ठः सप्तमो वा दायात् - पिण्डाद्विच्छेदमाप्नोति । पितृपक्षे कूटस्थमारभ्य गणनायां चतुर्थे दशरात्रमाशौचं पञ्चमे षड्रात्रमित्यादि । यदपि मनुनोक्तम् – त्रयाणामुदकं कार्यं त्रिषु पिण्डः प्रवर्तते । चतुर्थः पिण्डदातैषां पञ्चमो नोपपद्यते इति ।। यदपि गौतमेनोक्तम्– पिण्डनिवृत्तिः पञ्चमे सप्तमे वा इति । सापिण्ड्यं सप्तपूरुषमित्यादि स्मृत्यन्तरवचनस्यास्य च पराशरादिवचनस्य विकल्पो द्रष्टव्यः इति माधवीये ।। एतच्छिष्टाचार-विरुद्धत्वा द्युगान्तरविषयत्वेन योजनीयमिति स्मृतिरत्ने विज्ञानेश्वरीयादावभिहितम् ।

வ்யாஸரும்:- ஒருவனிடமிருந்து பல வர்ணமுள்ள பல ஸ்த்ரீகளிடம் பிறந்தவர்கள் எவர்களோ, அவர்களுக்கு ஸாபிண்ட்யம் மூன்று புருஷர் வரையில். வ்ருத்த

பராசரரும்:- பின்ன ஜாதீயரின் ஸந்ததி விஷயத்தில் சொல்லிய ஸூதகம் மூன்று புருஷர்கள் வரையில்தான். நாலாவது புருஷன் முதல் நிவர்த்திக்கின்றது. **பராசரரால்:-** ''ஸஜாதீயர்களில், ஐந்தாவது புருஷன் முதலியவர்களிடம் ஸாபிண்ட்யம் நிவர்த்திப்பது முதலாக ஆசௌசத்தில் தாரதம்யம் சொல்லப்பட்டுள்ளது- 'ஒரு வம்சத்தில் பிறந்த ஐந்தாமவனாவது தாயத்திலிருந்தும் விச்சேதத்தை அடைகிறான். நாலாமவனுக்குப் பத்து நாட்களால் சுத்தி. ஐந்தாமவனுக்கு ஆறு நாட்களால் சுத்தி. ஆறாமவனுக்கு நான்கு நாட்களால் சுத்தி. ஏழாமவனுக்கு மூன்று நாட்களால் சுத்தி'' தாயம்=பிண்டம். ஐந்தாமவன், ஆறாமவன், ஏழாமவனாவது பிண்டத்திலிருந்து விச்சேதத்தை அடைகிறான். பித்ருபக்ஷத்தில் கூடஸ்தனை ஆரம்பித்து எண்ணுகையில் நாலாமவனுக்குப் பத்து ராத்ரம் ஆசௌசம். ஐந்தாமவனுக்கு ஆறுநாளாசௌசம் என்பது முதலியது, என்று சொல்லப்பட்டதும், **மனுவால்:-** ''மூன்று பேர்களுக்கு உதகதானம் செய்ய வேண்டும். மூன்று பேர்களுக்குப் பிண்டம் கொடுக்கப்பட வேண்டும். நாலாமவன் இவர்களுக்குப் பிண்டம் கொடுப்பவன், ஐந்தாமவனில்லை'' என்று சொல்லப்பட்டதும். **கௌதமரால்:-** ''ஐந்தாவது புருஷனிடத்திலோ, ஏழாவது புருஷனிடத்திலோ பிண்ட நிவ்ருத்தி'' என்று சொல்லப்பட்டதும் ஆகிய இவைகளுக்கும் 'ஸாபிண்ட்யம் ஸப்த பூருஷம்' என்பது முதலாகிய மற்ற ஸ்ம்ருதி வசனங்களுக்கும் விகல்பம் அறியத்தக்கது என்று மாதவீயத்திலுள்ளது. இது சிஷ்டாசார விருத்தமாயிருப்பதால் யுகாந்தர விஷயமென்று சேர்க்கவேண்டுமென்று, ஸ்ம்ருதிரத்னம், விக்ஞானேச்வரீயம் முதலியதில் சொல்லப்பட்டு உள்ளது.

यत्तु याज्ञवल्क्येनोक्तम् – पञ्चमात् सप्तमादूर्ध्वं मातृतः पितृतस्तथा इति ॥ एतच्च कन्याविषये पञ्चमपर्यन्तं सापिण्ड्य प्रतिपादनं विवाहनिषेधार्थम् । आशौचविषये तु त्रिपूरुषमेव

कन्यासापिण्ड्यम्॥ तथा च वसिष्ठः – अप्रत्तानां तु स्त्रीणां सापिण्ड्यं त्रिपुरुषं विज्ञायते इति ॥ शङ्खश्च – पुत्राणामसवर्णानामप्रत्तानां च योषिताम्। सपिण्डता विनिर्दिष्टा पितृपक्षे त्रिपूरुषी इति ॥ अग्निस्मृतौ च – स्त्रीषु त्रिपूरुषं ज्ञेयं सपिण्डत्वं द्विजोत्तम इति ॥ ब्रह्मपुराणे च – सपिण्डता तु कन्यानां सवर्णानां त्रिपूरुषी । एकोदकास्ततश्चोर्ध्वं निर्दिष्टास्तु त्रिपूरुषाः इति ।

யாக்ஞவல்க்யர்:- *''மாதாவினிடமிருந்து ஐந்து புருஷனுக்குப் பிறகும், பிதாவினிடமிருந்து ஏழு புருஷனுக்குப் பிறகும் ஸாபிண்ட்ய நிவ்ருத்தி'' என்று சொல்லிய வசநத்தில் கன்யா விஷயத்தில் ஐந்தாமவன் வரையில் ஸாபிண்ட்யத்தைச் சொல்லியது விவாஹநிஷேதத்திற்காக, ஆசௌசவிஷயத்திலோ த்ரிபூருஷபர்யந்தமே கன்யா ஸாபிண்ட்யம், அவ்விதமே,* **வஸிஷ்டர்:-** *'விவாஹமாகாத ஸ்த்ரீகளுக்கு ஸாபிண்ட்யம் த்ரிபூருஷமெனத் தெரிகிறது' என்றார்.* **சங்கரும்:-** *''அஸவர்ணரான புத்ரர்களுக்கும், விவாஹம் ஆகாத ஸ்த்ரீகளுக்கும், பித்ரு பக்ஷத்தில் மூன்று புருஷ பர்யந்தம் ஸாபிண்ட்யம் சொல்லப்பட்டுள்ளது'' என்றார்.* **அக்னி ஸ்ம்ருதியிலும்:-** *ஓ ப்ராம்ஹணோத்தம! ஸ்த்ரீகள் விஷயத்தில் ஸாபிண்ட்யம் மூன்று புருஷர்கள் வரையில்.* **ப்ரம்ஹபுராணத்திலும்:-** *ஸவர்ணையான பெண்களுக்கு மூன்று புருஷர் வரையில் ஸாபிண்ட்யம். பிறகு மூன்று புருஷர்கள் ஸமாநோதகர்கள்.*

स्मृत्यर्थसारे – स्त्रीषु सापिण्ड्यं त्रिपूरुषमेव वा अप्रत्तासु इति । प्रत्तानां तु स्त्रीणां सप्तपुरुषमेव सापिण्ड्यम्। यदाह व्यासः – प्रत्तानां तु तथा स्त्रीणां सापिण्ड्यं सप्तपूरुषम् । नारीणां भर्तृसापिण्ड्यं प्राह देवः प्रजापतिः इति । स्मृत्यन्तरेऽपि – स्वगोत्रात् भ्रश्यते नारी विवाहात्सप्तमे पदे । एकत्वं सा गता भर्तुः पिण्डे गोत्रेऽथ सूतके इति ।

ஸ்ம்ருத்யர்த்தஸாரத்தில்:- விவாஹமாகாத ஸ்த்ரீகளுக்கு ஸாபிண்ட்யம் மூன்று புருஷர்கள் வரையில்தான். விவாஹிதைகளான ஸ்த்ரீகளுக்கோ ஏழு புருஷர்கள் வரையிலுமே ஸாபிண்ட்யம். அதைப்பற்றி, **வ்யாஸர்:-** 'விவாஹமாகிய ஸ்த்ரீகளுக்கு ஸாபிண்ட்யம் ஏழு புருஷர்கள் வரையில் விவாஹிதைகளான ஸ்த்ரீகளுக்கு பர்த்ருகுலத்தில் ஸாபிண்ட்யத்தைச் சொல்லுகிறுர் ப்ரஜாபதி என்றார். **மற்ருெரு ஸ்ம்ருதியிலும்:-** ஸ்த்ரீ, விவாஹத்தில் ஸப்த பதி ஆனவுடன் தனது கோத்ரத்தினின்றும் விலகுகிறாள். அவள், பிண்டத்திலும், கோத்ரத்திலும், ஸூதகத்திலும் பர்த்தாவின் ஐக்யத்தை அடைகிறாள்.

अप्रत्तस्त्रिया जन्मनि मरणे चाशौचव्यवस्था कृता शतके – आत्रिपूरुषमेवाघं कन्याया मृतिजन्मनोः । आसप्तपूरुषं पुंसः सापिण्ड्यं च तथा द्वयोः इति । कन्याया मृतिजन्मनोः सतोः यावत्त्रयः पुरुषा अनुक्रान्ता भवन्ति, तावदघं भवति । पुंसः पुरुषस्य मृतिजन्मनोरा सप्तपुरुषमघं भवति । उभयत्र आङ् अभिविधौ । ततश्चावधिभूतानां पुरुषाणां तत्तत्पुत्राणां चावधिमतां सर्वेषामघं भवति । तथा द्वयोः स्त्रीपुंसयोः कन्याविषये त्रिपूरुषं सापिण्ड्यम् । पुरुषविषये सप्तपूरुषमित्यर्थः । अत्र कूटस्थ स्थानीयत्वात् कूटस्थभ्रातुरप्याशौचं भवति ।। तथा स्मृत्यन्तरे– आत्मपुत्रपितृभ्रातृ-पितृव्याः स्त्रीप्रसूतके । दशरात्रेण शुद्ध्यन्ति नान्येषां सूतकं भवेत् इति ।। आत्मशब्देन जनक उच्यते । तेन पुत्रादयः प्रत्येक मभिसम्बद्ध्यन्ते ।

விவாஹமாகாக ஸத்ரீயின் ஜநநத்திலும், மரணத்திலும் ஆசௌசத்தின் வ்யவஸ்தை சொல்லப்பட்டுள்ளது **சதகத்தில்:-** கன்யகையின் மரண ஜநநங்களில் மூன்று புருஷர்கள் வரையிலுமே ஆசௌசம். புருஷனின் ம்ருதி ஜநநங்களில் ஏழு புருஷர்கள் வரையில். அவ்விருவர்களின்

ஸாபிண்ட்யமும் அப்படியே. இதில் கூடஸ்தனுக்கு ஸமாநனுதலால் கூடஸ்தனின் ப்ராதாவுக்கும் ஆசௌசம். **மற்றொரு ஸ்ம்ருதியில்:-** பெண்ணின் ஜநநத்தில், தகப்பன் அவனின் புத்ரன், பிதா, அவனின் ப்ராதா, பித்ருவ்யன், அவனின் புத்ரன் இவர்கள் 10 நாட்களால் சுத்தராகின்றனர்.

दीपिकायाम् – पुत्री पौत्री तथा भ्रात्री तथा सहजपुत्र्यपि । पितुः सहजपुत्री च पञ्चानां सूतिकाविधिः इति ।। सङ्ग्रहे च – कन्यकाजनने भ्रातृपितृतद्भ्रातृतत्सुताः । पितामहश्च तद्भ्राता शुध्यन्ति दशरात्रतः इति । सङ्ग्रहान्तरे च– पुंसि जाते सपिण्डानां स्त्रियां पित्रोः पितुः पितुः । सोदराणां पितृव्याणां तत्सुतानामघं भवेत् इति ।। सोदराणां भ्रातृणामित्यर्थः । सोदरशब्दो भिन्नोदरस्याप्युपलक्षकः । त्रिपुरुषान्तर्वर्तिभिन्नोदराणां सर्वेषामिदं सूतकं समानम् ।। तत्र विशेषः स्मर्यते – भिन्नोदरस्य भार्या तु स्त्रीप्रसूता भवेद्यदि । भ्रातुर्दशाहमाशौचं तत्पुत्रस्य न विद्यते इति ।। भिन्नोदरभ्रातृपत्न्याः पुत्र्यां जातायां भिन्नोदरभ्रातुरेवाघम्, न तु तत्पुत्रस्येत्यर्थः ।

தீபிகையில்:- புத்ரீ, பௌத்ரீ, பகிநீ, ப்ராதாவின் புத்ரீ, பித்ருவ்யனின் புத்ரீ என்ற இவ்வைந்து பேர்களுக்கும் ஜநநத்தில் பத்துநாளாசௌசம். **ஸங்க்ரஹத்திலும்:-** பெண் பிறந்தால், பெண்ணின் ப்ராதா, பிதா, பிதாவின் ப்ராதா, அவனின் புத்ரன், பெண்ணின் பிதாமஹன், அவனின் ப்ராதா என்ற இவர்கள் பத்து நாட்களால் சுத்தராவர். **மற்றொரு ஸங்க்ரஹத்திலும்:-** புருஷ ப்ரஜை பிறந்தால் ஸபிண்டர்கள் எல்லோருக்கும் ஆசௌசம். ஸ்த்ரீ ப்ரஜை பிறந்தால், மாதாபிதாக்கள், பிதாவின் பிதா, ஸோதரர்கள் (ப்ராதாக்கள்). பித்ருவ்யர்கள் என்ற இவர்களுக்கு மட்டில் ஆசௌசம். இதில் ஸோதர சப்தம் பின்னோதரரையும் சொல்லும். த்ரிபுருஷர்களுக்குள் உள்ள பின்னோதரர்கள் எல்லாருக்கும் இந்த ஆசௌசம் ஸமாநம். அதில் விசேஷம் சொல்லப்படுகிறது:- ''பின்னோதர ப்ராதாவின் பார்யை ஸ்த்ரீ ப்ரஜையை ப்ரஸவித்தால், பின்னோதர ப்ராதாவுக்கு

மட்டில் பத்து நாள் ஆசௌசம். அவனின் புத்ரனுக்கு ஆசௌசமில்லை.

यत्तूक्तमग्निस्मृतौ – पुत्रजन्मनि सपिण्डानां दशाहाच्छुद्धि रिष्यते । स्त्रीजन्मनि सपिण्डानां त्र्यहात्तच्छुद्धिरिष्यते इति, अत्र त्र्यहादित्यापद्विषयम् । त्रिपुरुषव्यतिरिक्त समानोदकविषयं वा । यतस्तत्रैवोक्तम् – त्र्यहादेकोदकानां एकाहं सूतके क्वचित् इति । एकाहमिति सगोत्रविषयम् । अत्र कन्यासपिण्डानां भ्रातृपितृपितामहानां तत्सुतानां पितामहभ्रातुश्च दशाहं सूतकम् । कन्यासोदकानां चतुर्थपञ्चमषष्ठानां त्र्यहं सूतकम् । सप्तमस्य एकाहमिति केचित् ॥ अन्ये तु – कन्यासपिण्डानां त्रिपुरुषान्तर्वर्तिनामेव दशाहं सूतकम् । सोदकानां नास्ति । त्र्यहादेकोदकानामित्येतत् पुंप्रसवविषयमित्याहुः । अत्र यथास्वदेशाचारं व्यवस्था ।

அக்னி ஸம்ருதியில்:- 'புருஷ ஜநநத்தில் ஸபிண்டர்களுக்குப் பத்து நாட்களால் சுத்தி. ஸ்த்ரீ ஜநநத்தில் மூன்று நாட்களால் சுத்தி'' என்றுள்ள வசநமோவெனில், மூன்று நாளென்பது ஆபத் விஷயத்தைப் பற்றியது, அல்லது த்ரி புருஷர்களைத் தவிர்த்த ஸமாநோதக விஷயம். ஏனெனில் அவ்விடத்திலேயே சொல்லப்பட்டுள்ளது. ''ஏகோதரர்களுக்கு மூன்று நாட்களால் சுத்தி, ஸகோத்ரனுக்கு ஒரு நாளாசௌசம்'' என்று. இவ்விஷயத்தில்:- கன்யா ஸபிண்டர்களான ப்ராதா, பிதா, பிதாமஹன், இவர்களின் புத்ரர்கள், பிதாமஹனின் ப்ராதா என்ற இவர்களுக்குப் பத்து நாளாசௌசம். கந்யாஸோதரர்களான நாலாமவன், ஐந்தாமவன், ஆறுமவன் இவர்களுக்கு மூன்று நாளாசௌசம். ஏழாமவனுக்கு ஒரு நாளாசௌசம்'' என்றனர் சிலர். மற்றவரோவெனில்:- ''கன்யா ஸபிண்டர்களான மூன்று புருஷர்களுக்குட்பட்டவருக்கே பத்துநாளாசௌசம். ஸோதரர்களுக்கு ஆசௌசமில்லை.

'த்ர்யஹாதேகோதகாநாம்' என்ற வசனம் புருஷ ஜநந விஷயம்'' என்கின்றனர். இவ்விஷயத்தில் தங்கள் தேசாசாரத்தை அனுஸரித்து வ்யவஸ்தையை அறியவும்.

जननाशौचद्वैविध्यम्

जननाशौचं द्विविधम्, अस्पृश्यत्वलक्षणं, धर्मानधिकारलक्षणं चेति। तत्रास्पृश्यत्वलक्षणं मातुरेव पूर्णमाशौचम्। पितुरपि स्नानात् पूर्वम्। नान्येषां सपिण्डानाम्। स्नानादूर्ध्वं पितुरप्यस्पृश्यत्वलक्षणं नास्ति। किन्तु धर्मानधिकारलक्षणमेव। तथा च पैठीनसिः – जनौ सपिण्डाः शुचयो मातापित्रोस्तु सूतकम्। सूतकं मातुरेव स्यादुपस्पृश्य पिता शुचिः इति ।। अस्यार्थश्चन्द्रिकायामुक्तः – सपिण्डस्य जनने पितृमातृव्यतिरिक्ताः सपिण्डाः शुचयः। सपिण्डजननिबन्धनाशौचे धर्मानधिकारलक्षणे विद्यमानेऽप्यघरूपाभावात् स्पर्शयोग्याः। तत्सद्भावात् मातापित्रोरस्पृश्यत्वलक्षणं सूतकं भवति। तत्सद्भावश्च मातापित्रोर्जायमानप्राणिपीडाहेतुत्वात्। तद्धेतुत्वं तज्जनकतया पितुः कथञ्चित् परंपरया, मातुर्गर्भान्निर्गमनानुकूले प्रेरणया साक्षात्, ततश्च गुरुतया स्नानमात्रानपनोद्यं सूतकं मातुरेव स्यान्न पितुः। स्नानमात्रेण पिता शुचिः। अघनाशात् स्पर्शयोग्यो भवति इति।

ஜநநாசௌசத்தின் இருவகை

ஜநநாசௌசம் இரு விதமாகின்றது. 'அஸ்ப்ருச்யத்வ லக்ஷண' மென்றும், 'தர்மாநதிகாரலக்ஷண' மென்றும். அவைகளுள், அஸ்ப்ருச்யத்வலக்ஷணம் என்ற ஆசௌசம் மாதாவுக்குப் பூர்ணமாயுண்டு. பிதாவுக்கும் ஸ்நாநத்திற்கு முன்பு உண்டு. மற்ற ஸபிண்டர்களுக்கில்லை. ஸ்நாநத்திற்குப் பிறகு பிதாவுக்கும் 'அஸ்ப்ருச்யத்வ லக்ஷணாசௌசம்' இல்லை. ஆனால் தர்மாநதிகார லக்ஷணாசௌசமே. அவ்விதமே, பைடீநஸி:- 'ஸபிண்ட ஜநநத்தில் ஸபிண்டர்கள் சுத்தர்கள். மாதா பிதாக்களுக்கே

ஸூதகம். ஸூதகம் மாதாவுக்கு மட்டில். ஸநானம் செய்த பிறகு பிதா சுத்தனாகிறான்' என்றார். இந்த வசனத்திற்கு அர்த்தம் சந்த்ரிகையில் சொல்லப்பட்டுள்ளது. 'ஸபிண்டன் பிறந்தால், மாதா பிதாக்கள் தவிர்த்த ஸபிண்டர்கள் சுத்தர்கள்- ஸபிண்ட ஜநந நிமித்தமான 'தர்மாநதிகார லக்ஷண'மான ஆசௌசமிருந்தாலும் பாபரூபாசௌசமில்லாததால் ஸ்பர்சயோக்யர்கள். அதிருப்பதால் மாதா பிதாக்களுக்கு அஸ்ப்ருச்யத்வலக்ஷண ஸூதகமுண்டு. பாப ரூபத்வமிருப்பது மாதா பிதாக்களுக்கு உண்டாகும் ப்ராணியின் பீடைக்குக் காரணமாவதால். அதற்கு ஹேதுவாயிருப்பது பிதாவுக்கு அந்த ப்ராணியை உண்டாக்கியதால் உள்ள பரம்பராஸம்பந்தத்தால். மாதாவுக்குக் கர்ப்பத்தினின்றும் வெளிவருவதற்கு ஸாக்ஷாத் அனுகூலமான ப்ரேரணத்தால். முந்தியதைவிட அதிகமானதால் ஸநானத்தால் மட்டில் போக்கக்கூடாத ஸூதகம் மாதாவுக்கே உள்ளது. பிதாவுக்கு இல்லை. ஸ்நானம் செய்வதாலேயே பிதா சுத்தனாகிறான். பாபம் நசிப்பதால் ஸ்பர்சத்திற்கு யோக்யனாகிறான்'' என்று.

तथा च स्मृत्यन्तरम्– जननेऽप्येतन्मातापित्रोर्मातुरेवास्पर्शनात्मकं नान्येषां ज्ञातीनाम् इति। मरणे सपिण्डानामस्पृश्यत्वं यथा जननेऽप्येतदस्पृश्यत्वं तथा मातापित्रोरेव भवति। नान्येषां सपिण्डानां जायमान प्राणिपीडाकर्तृत्वरहितानाम्। मातापित्रोर्मध्येऽपि स्नानमात्रानपनोद्यमस्पर्शनहेतुभूतमाशौचं मातुरेवेत्यर्थः। अङ्गिराः– प्राक् स्नानाज्जननेऽस्पृश्यः कर्महानिरशौचवत् इति। स्नानात् प्राक् पिता अस्पृश्यः। ऊर्ध्वं तु स्पृश्य एव। किन्तु कर्महानिस्तस्य शावविद्भवतीत्यर्थः। संवर्तः – सचेलं तु पितुः स्नानं जाते पुत्रे विधीयते। माता शुध्येद्दशाहेन स्नातस्य स्पर्शनं पितुः इति। न दोषावहमित्यर्थः। आदिपुराणेऽपि – सूतके तु मुखं दृष्ट्वा जातस्य जनकस्ततः। कृत्वा सचेलस्नानं तु स्पृश्यो भवति तत्क्षणात् इति।

அவ்விதமே, மற்றொரு ஸ்ம்ருதி:- '' ஜநநத்திலும் மாதா பிதாக்களுக்கு இந்த ஆசௌசமுண்டு. 'அஸ்ப்ருச்யத்வலக்ஷணா சௌசம்' மாதாவுக்கு மட்டில். மற்ற ஜ்ஞாதிகளுக்கில்லை' என்கிறது. இதன் பொருள்- '' மரணத்தில் ஸபிண்டர்களுக்கு அஸ்ப்ருச்யத்வம், எப்படியுள்ளதோ, அப்படி ஜநநத்திலும். இந்த அஸ்ப்ருச்யத்வம் மாதாபிதாக்களுக்கு மாத்திரம் உண்டாகிறது. மற்ற ஸபிண்டர்களுக்கு ஜநிக்கும் ப்ராணியின் பீடையில் கர்த்ருத்வம் இல்லாததால் உண்டாவதில்லை. மாதா பிதாக்களிருவரிலும், ஸ்நாநத்தால் மட்டில் போக்கமுடியாததும், அஸ்பர்சநஹேது பூதமுமான ஆசௌசம் மாதாவுக்கு மட்டில்'' என்பதாம். அங்கிரஸ்:- ஜநநத்தில் ஸ்நானத்திற்கு முன் பிதா அஸ்ப்ருச்யன். பிறகு ஸ்பர்சார்ஹனே. ஆனாலும், அவனுக்கு கர்மாநர்ஹ த்வம் சாவாசௌசத்திற்குப் போலவே உண்டு. ஸம்வர்த்தர்:- புத்ரன் பிறந்தால் பிதாவுக்கு ஸசேல ஸ்நானம் விதிக்கப்படுகிறது. மாதா பத்து நாட்களால் சுத்தையாவாள். ஸ்நானம் செய்த பிறகு பிதாவின் ஸ்பர்சம் தோஷாவஹமல்ல. ஆதிபுராணத்திலும்:- குழந்தை பிறந்தவுடன் பிதா சிசுவின் முகத்தைப் பார்த்துவிட்டு ஸசேல ஸ்நானம் செய்யவும். செய்தவுடன் அவன் ஸ்பர்ச யோக்யனாகிறான்.

अङ्गिराः – अङ्गिराः–सूतके सूतिकावर्जं संस्पर्शो न निषिध्यते । संस्पर्शे सूतिकायास्तु स्नानमेव विधीयते इति ॥ एतद्दशाहान्तःसूतिकास्पर्शे स्नानमात्रविधानमकामकृतविषयम् । बुद्धिपूर्वस्पर्शे तु स्नानमग्निस्पर्शनं घृतप्राशनं च कर्तव्यम्, पतितं सूतिकामन्त्यं शवं स्पृष्ट्वा च कामतः । स्नात्वा सचेलं स्पृष्ट्वाऽग्निं घृतं प्राश्य विशुध्यति इति स्मरणात् ॥ यत्तु बोधायनेनोक्तम् – जनने तावन्मातापित्रोर्दशाहमाशौचं मातुरित्येके इति । एतच्चन्द्रिकायां व्याख्यातम् – अस्पृश्यत्वलक्षणं मातापित्रोर्दशाहमाशौचमित्येतत्

पूर्वपक्षत्वेनोक्तमिति तावद्ग्रहणादवगम्यते । तेन मातुरित्येके इत्ययमेव सम्यक् पक्ष इति न पूर्वोक्तविरोधः इति । अखण्डादर्शे तु विवृतम् – युगपत् स्त्रीपुंसप्रसवे अस्पृश्यत्वलक्षणमाशौचं मातापित्रोः । अन्यतरप्रसवे मातुरेवास्पृश्यत्वलक்षणமாशौचम् । अथवा मातापित्रो-रिति पितुः संसर्गविषयं मातुरिति पितुरसंसर्गविषयम् इति ।

அங்கிரஸ்:- *''ஜநநாசௌசத்தில், ஸூதிகையைத் தவிர்த்த மற்றவரின் ஸ்பர்சம் நிஷேதிக்கப்படவில்லை. ஸூதிகையை ஸ்பர்சித்தால் ஸ்நானமே விதிக்கப் படுகிறது''* என்றார். இவ்விதம் பத்து நாட்களுக்குள் ஸ்நான விதியும் புத்திபூர்வமல்லாத ஸ்பர்ச விஷயம். புத்திபூர்வ ஸ்பர்சத்திலோ, ஸ்நானமும், அக்னி ஸ்பர்சமும், ஆஜ்ய ப்ராசனமும் செய்யப்படவேண்டும். *''பதிதன், ஸூதிகை, அந்த்யஜன், சவம் இவர்களைப் புத்திபூர்வமாய் ஸ்பர்சித்தால், ஸசேல ஸ்நானம், அக்னி ஸ்பர்சம், ஆஜ்ய ப்ராசனம் இவைகளைச் செய்தால் சுத்தனாவான்''* என்று ஸ்ம்ருதியிருப்பதால். **போதாயனர்:-** *''ஜநநத்தில் மாதா பிதாக்களுக்குப் பத்து நாளாசௌசம். மாதாவுக்கு மட்டில் என்று சிலர்''* என்று சொல்லியதோவெனில் இதற்குச் சந்த்ரிகையில் இவ்விதம் வ்யாக்யானம் செய்யப்பட்டு உள்ளது:- *''மாதா பிதாக்களுக்குப் பத்துநாளாசௌசமென்பது பூர்வ பக்ஷமாய்ச் சொல்லப்பட்டதென்பது 'தாவத்'' என்பதால் தோன்றுகிறது. ஆகையால் 'மாதாவுக்கே என்று சிலர்' என்பதே நல்ல பக்ஷம் என்பதால், முன் சொல்லியதோடு விரோதமில்லை''* என்று. அகண்டாதர்சத்திலோவெனில், இவ்விதம் விவரணம் செய்யப்பட்டுள்ளது:- *'' ஒரே ஸமயத்தில் ஸ்த்ரீ சிசு, புருஷ சிசு இரண்டும் பிறந்தால் ' அஸ்ப்ருச்யத்வ லக்ஷணாசௌசம்' மாதா பிதாக்கள் இருவருக்கும். ஏதாவதொன்று மட்டில் பிறந்தால், 'அஸ்ப்ருச்ய த்வலக்ஷணாசௌசம்' மாதாவுக்கு மட்டில். அல்லது 'மாதா பித்ரோ:' என்றது ஸம்பந்தப்பட்ட*

பிதாவின் விஷயத்தைப் பற்றியது. 'மாது ரித்யேகே' என்றது ஸம்பந்தப்படாத பித்ரு விஷயத்தைப் பற்றியது'' என்று.

तथा च वसिष्ठः – नाशौचं विद्यते पुंसः संसर्गं चेन्न गच्छति । रजस्तत्राशुचि ज्ञेयं तच्च पुंसि न विद्यते इति ॥ बृहस्पतिः – शावाशौचं तु सर्वेषां सूतकं मातुरेव च । स्नानं प्रकुर्यात्तु पिता स्पृश्यो भवति तत्क्षणात् । यस्तया सह संसर्गं प्रकुर्याच्छयनासनम् । बान्धवो वा परो वाऽपि स दशाहेन शुद्ध्यति इति । सुमन्तुः – मातुरेव सूतकं तां स्पृशतां च नेतरेषाम् इति । मातुः सूतिकां स्पृशतां च जनानामस्पृश्यत्वलक्षणं भवति । नेतरेषां - अस्पृशतां जनानां न भवतीत्यर्थः । अत्रिः – संपर्काज्जायते दोषः पारक्ये चैव जन्मनि । तद्वर्जनात् पितुरपि सद्यः शौचं विधीयते इति । पारक्ये - परसम्बन्धिनि जनने ।

வஸிஷ்டர்:- பிதாவுக்கு ஆசௌசமில்லை ஸம்பந்தப்படாவிடில். ரஜஸ் அசுத்தம் மாதாவினிட முள்ளது. அது பிதாவினிடமில்லை. **ப்ருஹஸ்பதி:-** சாவாசௌசம் ஸபிண்டர்களெல்லோருக்கும் உண்டு. ஸூதகாசௌசம் மாதாவுக்கு மட்டும். பிதா ஸ்நானம் செய்யவேண்டும். உடனே ஸ்பர்சார்ஹனுகிறுன். ஸூதிகையுடன் சயனம், உட்காருவது இவை முதலிய ஸம்பந்தத்தைச் செய்தவன் பந்துவானுலும், மற்றவனுலும் அவன் பத்து நாட்களால் சுத்தனுகிறுன். **ஸுமந்து:-** 'மாதாவுக்கே ஸூதகம், அவளைத் தொடுபவர்க்கும்; மற்றவர்க்கில்லை' என்றுர். 'மாதாவுக்கும், ஸூதிகையைத் தொடுகின்ற ஜநங்களுக்கும் 'அஸ்ப்ருச்யத்வலக்ஷணாசௌசம்'. மற்றவர்க்கு - தொடாத ஜநங்களுக்கு அது இல்லை என்பது பொருள். **அத்ரி:-** அன்ய ஸம்பந்தியான ஜநநத்திலும் ஸம்பர்க்கத்தால் ஆசௌசமுண்டாகிறது. ஸம்பர்க்கத்தை வர்ஜித்தால், பிதாவுக்கும் ஸத்யச்சுத்தி விதிக்கப்படுகிறது.

पराशरः –ब्राह्मणानां प्रसूतौ तु देहस्पर्शो विधीयते। सर्वेषां शावमाशौचं मातापित्रोस्तु सूतकम्। सूतकं मातुरेव स्यादुपस्पृश्य पिता शुचिः इति। अस्पृश्यत्वलक्षणं सूतकं मातापित्रोः। तत्रापि दशाहमस्पृश्यत्वं मातुरेव। पितुः स्नानपर्यन्तमेवेत्यर्थः। सूतक्या सह संसर्गकरणे तन्निमित्तमस्पृश्यत्वं दशाहमस्तीत्याह स एव – यदि पत्न्यां प्रसूतायां संपर्कं कुरुते द्विजः। सूतकं तु भवेत्तस्य यदि विप्रष्षडङ्गवित्। संपर्काज्जायते दोषो नान्यो दोषोऽस्ति वै द्विज। तस्मात् सर्वप्रयत्नेन संपर्कं वर्जयेद्बुधः॥ प्रसवे गृहमेधी तु न कुर्यात् संकरं यदि। दशाहाच्छुध्यते माता त्ववगाह्य पिता शुचिः इति॥ भर्तुः स्नानानन्तरं संसर्गनिमित्त एक एव दोषोऽस्पृश्यत्वापादको जायते। न तु जनन निमित्तको दोषोऽस्ति। तस्मात् संपर्कं वर्जयेत्। गृहस्थः सूतिकया सह यदि सहशयनासनभोजनादिकं न कुर्यात्, तदा स्नानेनैव स्पृश्यो भवति। माता तु दशाहेन शुद्धा भवतीत्यर्थः।

பராசரர்:- ''ப்ராம்ஹணர்களுக்கு, ப்ரஸூதி விஷயத்தில் தேஹஸ்பர்சம் விதிக்கப்படுகிறது. சாவாசௌசம் ஸபிண்டர்களெல்லோருக்கும். ஜநநாசௌசம் மாதாபிதாக்களுக்கு மட்டில். அவர்களிலும் ஸூதகம் மாதாவுக்கு மட்டில். பிதா ஸ்நானத்தால் சுத்தனாகிறான்'' என்றார். ''அஸ்ப்ருச்யத்வ லக்ஷணாசௌசம் மாதா பிதாக்களுக்கு மட்டில். அவர்களிலும் பத்துநாட்கள் வரையில் அஸ்ப்ருச்யத்வம் மாதாவுக்கு மட்டில். பிதாவுக்கு ஸ்நானம் செய்யும் வரையில்தான்'' என்பது பொருள். ஸூதிகையுடன் ஸம்பந்தம் செய்தால் அதனாலுண்டாகும் அஸ்ப்ருச்யத்வம் பத்து நாட்கள் வரையில் இருக்கின்றது என்கிறார் பராசரரே:- எந்த ப்ராம்ஹணன் பத்நீ ப்ரஸவித்திருக்கும் பொழுது ஸம்பந்தத்தைச் செய்கின்றானோ அவன் ஆறு அங்கங்களுடைய வேதத்தை அறிந்தவனாயினும், அவனுக்கு ஸூதகமுண்டாகிறது. ஸம்பந்தத்தால்

தோஷமுண்டாகிறது. ப்ராம்ஹணனிடத்தில் வேறு தோஷமில்லை. ஆகையால் எவ்விதத்தாலும் அறிந்தவன் ஸம்பந்தத்தை விடவேண்டும். ப்ரஸவத்தில் க்ருஹஸ்தன் ஸம்பந்தம் செய்யாவிடில், மாதா பத்து நாட்களால் சுத்தையாகிறாள். பிதா ஸ்நானத்திற்குப் பிறகே சுத்தனாகிறான்'' என்றார். ''ஜநகனுக்கு, ஸ்நானத்திற்குப் பிறகு ஸம்பந்த நிமித்தமான தோஷமொன்றே அஸ்ப்ருச்யத்வத்தைச் செய்வதாய் ஆகிறது. ஆகையால் ஸம்பந்தத்தை வர்ஜிக்கவேண்டும். க்ருஹஸ்தன் ஸூதிகையுடன் சேர்ந்து படுப்பது, உட்காருவது, புஜிப்பது முதலியதைச் செய்யாமலிருந்தால், அப்பொழுது ஸ்நானத்தாலேயே ஸ்பர்சார்ஹனாகிறான். மாதா பத்து நாட்ளால் சுத்தையாகிறாள்'' என்பது பொருள்.

मनुः – सूतकं मातुरेव स्यादुपस्पृश्य पिता शुचिः । निरस्य तु पुमान् शुक्रमुपस्पृश्यैव शुध्यति इति । उपस्पृश्य पिता शुचिरित्येतदुत्तरार्धेनोपपादयति । शुक्रं निरस्य - गर्भाधानं कृत्वेति यावत् । उपस्पृश्य - स्नात्वा पिता शुचिः, गर्भाधानं कृत्वा तदानीं स्नातस्य पितुरस्पृश्यत्वापादकं जननाशौचमिदानीन्तन स्नानादूर्ध्वं न भवतीत्यर्थः ।

மனு: ஆசௌசம் மாதாவுக்கு மட்டில். பிதா ஸ்நானம் செய்த பிறகு சுத்தனாகிறான். கர்ப்பாதானம் செய்த பிதா உடனே ஸ்நானம் செய்து சுத்தனாகிறான். பிதாவுக்கு ஜநநாசௌம், ஜநநத்திற்குப் பிறகு செய்யும் ஸ்நானத்திற்குப் பிறகு ஏற்படுவதில்லை என்பது பொருள்.

याज्ञवल्क्योऽपि – पित्रोस्तु सूतकं मातुस्तदसृग्दर्शनाद्ध्रुवम् । तदहर्न प्रदुष्येत पूर्वेषां जन्मकारणात् इति । अत्र विज्ञानेश्वरः - सूतकं - जनननिमित्तमस्पृश्यत्वलक्षणम्, पित्रोः - मातापित्रोरेव, न सर्वेषां सपिण्डानाम् । तच्चास्पृश्यत्वं मातुर्ध्रुवं - दशाहपर्यन्तं स्थिरमित्यर्थः । कुतः ? तदसृग्दर्शनात् - तस्याः सम्बन्धित्वेनासृजो दर्शनात् । पितुर्ध्रुवं

न भवति स्नानमात्रेणास्पृश्यत्वं न विद्यते। यस्मिन् दिने कुमारजननम्, तदहर्न दुष्येत। तन्निमित्तदानाद्यधिकारापहं न भवतीत्यर्थः। यस्मात्तस्मिन्नहनि पूर्वेषां पित्रादीनां पुत्ररूपेण जन्म उत्पत्तिः तस्मात्तदहर्न प्रदुष्येत इति। स्मृत्यर्थसारे – जनननिमित्त मस्पृश्यत्वं मातुरेव। पितुः स्नानानन्तरमस्पृश्यत्वं नास्ति। जनने सपिण्डाना-मस्पृश्यत्वं सर्वदा नास्त्येव इति। षडशीतौ – यावत्सूतकमस्पृश्या माता प्राक् स्नानतः पिता। अन्येषां तु सपिण्डानामस्पृश्यत्वं न सूतके इति।

யாக்ஞவல்க்யரும்:- *'பித்ரோஸ்து + காரணாத்' என்றார். இந்த ச்லோக வ்யாக்யானத்தில் விக்ஞானேச்வரர் - ''ஸூதகம்= ஜநந நிமித்தமாகிய அஸ்ப்ருச்யத்வ லக்ஷணமான ஆசௌசம், மாதா பிதாக்களுக்கு மட்டில். ஸபிண்டர்களெல்லோருக்கும் இல்லை. அந்த அஸ்ப்ருச்யத்வம் மாதாவுக்கு த்ருவம் - பத்து நாட்கள் வரையில் ஸ்திரமாயுள்ளது. ஏன்? ததஸ்ருக்தர்சநாத்= அவளைச் சேர்ந்ததான ரக்தம் காணப்படுவதால். பிதாவுக்கு ஆசௌசம் ஸ்திரமாய் ஆவதில்லை. ஸ்நானம் செய்வதாலேயே அஸ்ப்ருச்யத்வமில்லை. எந்தத் தினத்தில் குமாரஜநநமோ அந்தத் தினம் துஷ்டமாவதில்லை. குமார ஜநந நிமித்தமான தானம் முதலியதைத் தடுப்பதாக ஆவதில்லை என்று பொருள். எக்காரணத்தால், முன்னோராகிய பிதா முதலியவரின் பிறப்பு ஏற்பட்டதோ, அக்காரணத்தால் அந்தத் தினம் துஷ்டமாவதில்லை'' என்றார்.* **ஸ்ம்ருத்யர்த்த ஸாரத்தில்:-** *ஜநநநிமித்தமான அஸ்ப்ருச்யத்வம் மாதாவுக்கு மட்டில். பிதாவுக்கு ஸ்நாநத்திற்குப்பிறகு அஸ்ப்ருச்யத்வமில்லை. ஜநநத்தில் ஸபிண்டர்களுக்கு அஸ்ப்ருச்யத்வம் எப்பொழுதுமில்லை.* **ஷடசீதியில்:-** *ஸூதகமுள்ள (பத்து நாள்) வரையில் மாதா அஸ்ப்ருச்யை. ஸ்நாநத்திற்கு முன்பு பிதா அஸ்ப்ருச்யன். மற்ற ஸபிண்டர்களுக்கு ஜநநாசௌசத்தில் அஸ்ப்ருச்யத்வமென்பதில்லை.*

यत्तु सङ्ग्रहे – आन्तं शावेऽङ्गसंस्पर्शं त्यजेत् सूतौ चतुर्दिनम्। स्पर्शेऽनघस्य तु स्नानं कृच्छ्रोऽन्याशौचिनः स्मृतः इति प्रसवे चतुर्दिन मङ्गस्पर्शन वर्जनमुक्तम्, तत्स्नानानन्तरक्षणमारभ्य पितुः सर्वदा सर्व सपिण्डानामस्पृश्यत्व लक्षणाशौचाभावं प्रतिपाद-यन्तीभिः पूर्वोक्तसर्वस्मृतिभिर्विरुद्धत्वादुपेक्ष्यम् ॥ यच्चात्र स्मृत्यन्तरमुक्तम् – स्पृष्टस्पृष्टिं भाषणं च सहवासं च वर्जयेत् । अन्याशौचवतां पुंसां न स्पृशेच्च कदाचन ॥ न स्पृशेयुरनासन्नाः प्रेतस्यासन्नबान्धवान् । जन्मन्यपि विपत्तौ च यावच्चतुरहं भवेत् इति, तच्चाशौचिनामेवान्योन्यस्पर्शविषयं शब्दतः प्रतीयते । यथा वा विपत्तौ चतुरहादूर्ध्वमङ्गस्पर्शस्य कलौ निषिद्धत्वेन चतुरहमित्येतद्युगान्तर विषयत्वेन व्यवतिष्ठते, तथा जन्मन्यङ्ग-स्पर्शस्य विहितत्वेन जन्मनि चतुरहमित्येतदर्थान्तरपरमस्तु । कर्तृस्मरणरहित मेतादृशं वचनं प्रसिद्धसकलस्मृतिविरोधादप्रमाणं वा भवतु ।

ஸங்க்ரஹத்தில்:- *''சாவாசௌசத்தில் முடிவு வரையில் அங்கஸ்பர்சத்தை த்யஜிக்கவும். ஜநநா சௌசத்தில் நான்கு நாள் த்யஜிக்கவும். ஆசௌச மில்லாதவன் ஆசௌசியை ஸ்பர்சித்தால்ஸ்நாநம் செய்யவும். அன்யாசௌசமுள்ளவன் மற்றொரு ஆசௌச முள்ளவனை ஸ்பர்சித்தால் க்ருச்ரத்தை அனுஷ்டிக்கவும்'' என்ற வசநத்தால் ப்ரஸவாசௌசத்தில் நான்கு நாட்கள் அங்கஸ்பர்சவர்ஜநம் சொல்லப்பட்டுள்ளதே எனில், அது, ஸ்நாநத்திற்குப்பிறகுள்ள க்ஷணம் முதல் பிதாவுக்கும், எப்பொழுதும் ஸபிண்டர்களெல்லோருக்கும் அஸ்ப்ருச்யத்வரூபமான ஆசௌசத்தின் அபாவத்தை ப்ரதிபாதிக்கின்ற முன்சொல்லிய ஸ்ம்ருதிகளெல்லா வற்றுடனும் விரோதிப்பதால் உபேக்ஷிக்கத் தகுந்ததா கின்றது. தவிர, இவ்விஷயத்தில் மற்றொரு ஸம்ருதியில்:-*

'மற்றொரு ஆசௌசமுள்ள மனிதரின் ஸ்பருஷ்டஸ்ப்ருஷ்டி (தொட்டவனைத் தொடுதல்), ஸம்பாஷணம், ஸஹவாஸம், ஸ்பர்சம் இவைகளை வர்ஜிக்கவேண்டும். இறந்தவனின் ஸமீப பந்துக்களை வ்யவஹித பந்துக்கள் தொடக்கூடாது, ஜநநா சௌசத்திலும் மரணா சௌசத்திலும் நாலு நாள் முடியும் வரையில்'' என்றுள்ள வசநமும், ஆசௌசிகளுக்கே பரஸ்பர ஸ்பர்ச விஷயமென்று சப்தத்தால் தோன்றுகிறது. எப்படி, சாவா சௌசத்தில் நான்கு நாட்களுக்குப் பிறகு அங்க ஸ்பர்சம் கலியில் நிஷேதிக்கப்பட்டிருப்பதால், 'நாலுநாள் கூடா' தென்பது யுகாந்தர விஷயமென்று வ்யவஸ்தை செய்யப்படுகிறதோ, அப்படி, ஜநநா சௌசத்தில் அங்கஸ்பர்சம் விஹிதமாயிருப்பதால் 'ஜநநத்தில் நாலுநாள் கூடாது.' என்பது வேறு விஷயத்தைப்பற்றியதாய் இருக்கட்டும். கர்த்தா இன்னானென்று தெரியப்படாத இவ்வித வசநம், ப்ரஸித்த ஸகல ஸ்ம்ருதிகளுடன் விரோதிப்பதால் ப்ரமாணமில்லாதது என்றுவது ஆகலாம்.

यच्च संवर्तेनोक्तम् – सूतके तु यदा विप्रो ब्रह्मचारी विशेषतः । पिबेत् पानीयमज्ञानात् भुङ्क्ते वाऽथ स्पृशेत वा ।। पानीयपाने कुर्वीत पञ्चगव्यस्य प्राशनम् । त्रिरात्रोपोषणं भुक्तौ स्पृष्टौ स्नानेन शुध्यति इति, तत् सूतिकास्पर्शविषयम् । अस्नातपितृस्पर्शविषयं च । संस्पर्शे सूतिकायास्तु स्नानमेव विधीयते इत्यादिना तत्रैव स्नानविधानात् । न च संस्पर्शो न निषिद्ध्यते इत्येतच्चतुरहादूर्ध्वं सपिण्डानां स्पर्शनिषेधाभावपरमिति वाच्यम्, सूतिकाव्यतिरिक्त-स्पर्शे निषेधाभावमात्रस्य प्रतीतेः, चतुरहादूर्ध्वमित्यत्र विनिगमनाभावात्, स्पृश्यो भवति तत्क्षणात् इत्यादि स्मृति-विरोधापत्तेश्च ।

ஆனால் -ஸம்வர்த்தர்- ''ஸூதகத்தில் ப்ரம்ஹசாரியான ப்ராம்ஹணன் அறியாமையால்

ஜலபாநம் செய்தாலும், புஜித்தாலும், ஸ்பர்சித்தாலும், (ப்ராயச்சித்தமாக) ஜல பானத்தில் பஞ்சகவ்ய ப்ராசநத்தையும், போஜனத்தில் த்ரிராத்ரோபவாஸத்தையும், ஸ்பர்சத்தில் ஸ்நாநத்தையும் செய்தால் சுத்தனுகிறான்'' என்று சொல்லிய வசநமுள்ளதே எனில், அந்த வசனம் ஸூதிகையின் ஸ்பர்சத்தைப்பற்றியதும், ஸ்நாநம் செய்யாத பிதாவை ஸ்பர்சித்தைப்பற்றியதுமாம், 'ஸூதகத்தில், ஸூதிகையைத் தவிர்த்த மற்றவரின் ஸ்பர்சம் நிஷேதிக்கப்படவில்லை. ஸூதிகையைத் தொட்டால் ஸ்நாநமே விதிக்கப்படுகிறது' என்பது முதலான வசநத்தால், ஸூதிகாஸ்பர்சத்திலேயே ஸ்நானம் விதிக்கப்படுவதால். 'ஸ்பர்சம் நிஷேதிக்கப்படுவதில்லை' என்ற வசநம் நாலு நாட்களுக்குப்பிறகு ஸபிண்டர்களுக்கு ஸ்பர்ச நிஷேதமில்லை என்பதில் தாத்பர்யமுள்ளதென்றும் சொல்லக் கூடாது. ஸூதிகையைத் தவிர்த்தவரின் ஸ்பர்சத்தில் நிஷேதமில்லை' என்ற விஷயத்தில் ஸாதகமான யுக்தி இல்லாததுடன், 'ஸ்நாநத்திற்குப் பிறகு உடனே ஸ்பர்சார்ஹனுகிறான்' என்பது முதலிய ஸ்ம்ருதிகளுடன் விரோத மேற்பட நேரிடும்.

संस्पर्शे सूतिकायास्त्विति स्नानवचनं दशाहानन्तरमपि सूतिकास्पर्शे स्नानविधिपरमित्यभिप्रेत्य सङ्ग्रहकारेणोक्तम्– दशाहं दर्शनं वाक्यं सूतिकायास्त्यजेत्ततः । अघान्तं स्पर्शमेवेत्थं पितुस्तं यमलोद्भवे इति ।। दशाहं सूतिकाया दर्शनं वाक्यश्रवणं च वर्जयेत् । ततो दशाहानन्तरं यावत् सूतकं तावत् स्पर्शमेव त्यजेत् । न तु दर्शनादि । इत्थमघान्तं - स्वाशौचपर्यन्तम्, दशाहपर्यन्तमिति यावत् । यमलोद्भवे - अपत्यद्वयजनने । पितुः - जनकस्य, तं - स्पर्शं त्यजेत् । पितुः पुत्रजननोत्तरकालस्नानानन्तरमस्पृश्यत्व लक्षणाशौचाभावेऽपि यमलोद्भवे दशाहपर्यन्तं तदस्तीत्यर्थः ।

'ஸம்ஸ்பர்சே ஸூதிகாயாஸ்து' என்ற ஸ்நாநவிதி வசநம் பத்து நாட்களுக்குப் பிறகும் ஸூதிகாஸ்பர்சத்தில் ஸ்நாநத்தை விதிப்பதில் தாத்பர்யமுள்ளதென்று அபிப்ராயப்பட்டு சொல்லப்பட்டது, **ஸங்க்ரஹகாரரால்** :- ''பத்துநாட்கள் வரையில் ஸூதிகையின் தர்சநத்தையும், வார்த்தையைக் கேட்பதையும் வர்ஜிக்கவும். தசாஹத்திற்குப் பிறகு ஸூதகமுள்ள வரையில் ஸ்பர்சத்தை மட்டில் த்யஜிக்கவும், தர்சனம் முதலியதை த்யஜிக்கவேண்டியதில்லை. இரட்டைக் குழந்தைகள் பிறந்தால், பிதாவை ஆசௌசம் முடியும் வரையில் தொடக்கூடாது'' என்று. பிதாவுக்கு, சிசு ஜநநோத்தரகால ஸ்நாநத்திற்குப் பிறகு அஸ்ப்ருச்யத்வலக்ஷணா சௌசமில்லை யென்றிருந்தாலும், இரட்டைக் குழந்தைகள் பிறந்த விஷயத்தில் பத்து நாள் வரையில் அஸ்ப்ருச்யத்வ லக்ஷணாசௌசமுண்டு என்பது பொருள்.

सूतकं मातुरेव स्यान्मातापित्रोस्तु सूतकम् इति बोधायनवचनमेवं व्याकृतम् अखण्डादर्शे – युगपत् स्त्रीपुंसप्रसवे मातापित्रोरस्पृश्यत्व लक्षणं दशाहमाशौचम् इति ॥ एवं शिष्टाचारानुसारेण मातुर्दशाहानन्तरमपि यावदाशौचमस्पृश्यत्व-लक्षणमुक्तं सङ्ग्रहे – अघान्तं स्पर्शमेव इति । स्मृतिरत्ने तु – जनौ सपिण्डाः शुचयः इति पैठीनसिवचनं व्याख्यातम् – जन्मनि सर्वे सपिण्डाः स्पृश्याः । पिता स्नानेन स्पृश्यः । माता तु दशाहान्ते स्पृश्या भवति इति । माता शुद्ध्येद् दशाहेन स्नातस्य स्पर्शनं पितुः इति संवर्तवचनं चन्द्रिकायां विवृतम् – माता दशाहेन स्पर्शनादि योग्या भवतीत्यर्थः इति ।

'ஸூதகம் மாதுரேவ ஸ்யாத் மாதாபித்ரோஸ்து ஸூதகம்' என்ற போதாயன வசநம் மேல் வருமாறு வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளது, **அகண்டாதர்சத்தில் :-** ''ஒரே காலத்தில் ஸ்த்ரீ புருஷ சிசுக்கள் பிறந்தால், மாதா

பிதாக்களுக்கு அஸ்ப்ருச்யத்வலக்ஷணாசௌசம் பத்துநாட்கள்'' என்று இவ்விதம் சிஷ்டாசாரத்தை அனுஸரித்து, மாதாவுக்குப் பத்து நாட்களுக்குப் பிறகும் ஆசௌசமுள்ள வரையில் அஸ்ப்ருச்யத்வலக்ஷணா சௌசம் சொல்லப்பட்டது ஸங்க்ரஹத்தில் 'அகாந்தம் ஸ்பர்சமேவ' என்று. ஸ்ம்ருதிரத்னத்திலோ வெனில்:- 'ஜநௌ ஸபிண்டாச் சுசய:' என்ற பைடீநஸி வசநம் இவ்விதம் விவரிக்கப்பட்டுள்ளது.- ஜநநத்தில் ஸபிண்டர்களெல்லோரும் ஸ்பர்சிக்கத் தகுந்தவர்கள். பிதா ஸ்நாநத்தால் ஸ்பர்சார்ஹன். மாதாவோ பத்து நாட்களுக்குப் பிறகு ஸ்ப்ருச்யை''என்று. 'மாதா சுத்யேத் தசாஹேந ஸ்நாதஸ்ய ஸ்பர்சநம் பிது:' என்ற ஸம்வர்த்த வசநமும், சந்த்ரிகையில் வருமாறு விவரிக்கப் பட்டுள்ளது-''மாதா பத்து நாட்களால் ஸ்பர்சம் முதலியதில் யோக்யையாய் ஆகிறாள்'' என்று.

तत्रैव द्विजातेः सूतिका या स्यात् सा दशाहेन शुध्यति इति पारस्करवचनं व्याख्यातम् – अस्पृश्यत्वादिहेतुभूतं दशाह-पर्यन्तम्, दानादिधर्मानधिकारलक्षणं तु पुत्रजनन्यां विंशतिरात्र-पर्यन्तं स्त्रीजनन्यां मासपर्यन्तमेव इति । सूतकं मातुरेव स्यात् उपस्पृश्य पिता शुचिः । माता शुद्ध्येद् दशाहेन इति पराशरवचनं माधवीये व्याख्यातं - दशाहमस्पृश्यत्वं मातुः । पितुः स्नानपर्यन्तमेव । पित्रोस्तु सूतकं मातुस्तदसृग्दर्शनाद्ध्रुवं इति याज्ञवल्क्यवचनं व्याख्यातं विज्ञानेश्वरेण – सूतकं जनन-निमित्तमस्पृश्यत्वलक्षणं माता-पित्रोरेव । न सर्वेषां सपिण्डानाम् । तच्चास्पृश्यत्वं मातुर्दशाहपर्यन्तं स्थिरम् इति ।

சந்த்ரிகையிலேயே:- 'த்விஜாதே: ஸூதிகா யா ஸ்யாத் ஸாதசாஹேந சுத்யதி' என்ற பாரஸ்கர வசநம் வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது- ''அஸ்ப்ருச்யத்வம் முதலியதற்குக் காரணமான ஆசௌசம் பத்து நாட்கள்

வரையில். தானம் முதலிய தர்மங்களில் அதிகாரமில்லாமை என்ற ஆசௌசமோ, புத்ரனைப் பெற்றவள் விஷயத்தில் இருபது நாட்கள் வரையில், பெண்ணைப் பெற்றவள் விஷயத்தில் ஒரு மாதம் வரையிலுமே'' என்று. 'ஸூதகம் மாதுரேவஸ்யாத் உபஸ்ப்ருச்ய பிதா சுசி:, மாதா சுத்யேத் தசாஹேந' என்ற பராசர வசனம், மாதவீயத்தில் வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது- ''பத்து நாட்கள் வரையில் அஸ்ப்ருச்யத்வம் மாதாவுக்கு, பிதாவுக்கு ஸ்நானம் வரையிலேயே'' என்று. 'பித்ரோஸ்து ஸூதகம் மாது: ததஸ்ருக் தர்சநாத் த்ருவம்'என்ற யாக்ஞவல்க்ய வசநம் வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது விக்ஞாநேச்வரரால்- 'பிறப்பு நிமித்தமாய் அஸ்ப்ருச்யத்வ லக்ஷணமான ஆசௌசம் மாதாபிதாக்களுக்கு மட்டில். எல்லா ஸபிண்டர்களுக்குமில்லை. அந்த அஸ்ப்ருச்யத்வம் மாதாவுக்குப் பத்து நாட்கள் வரையில் ஸ்திரமாயுள்ளது'' என்று.

स्पष्टमेवाह व्यासः – सूतके तु सपिण्डानां संस्पर्शो नैव दुष्यति । स्पृश्याः स्युस्सर्वे एवैते स्नानान्माता दशाहतः इति । ब्राह्मेऽपि – ब्राह्मणी क्षत्रिया वैश्या प्रसूता दशभिर्दिनैः । दिनैः शूद्रा च संस्पृश्या त्रयोदशभिरेव च इति । यत्तु कैश्चिदुक्तम् – सूतके सूतिकावर्जं संस्पर्शो न निषिध्यते इति स्मरणात् दशाहात् परमपि सूतिकायाः स्पर्शो न कर्तव्य इति, तन्न । उक्तानेक स्मृत्यनुसारेणास्य वचनस्य दशाहाभ्यन्तरे सूतिकास्पर्श निषेधविषयत्वेनोपपत्तेः । अतः अघान्तं स्पर्शमिवेति शतकक्रद्वचनं देशाचारमूलमिति सिद्धम् ।

ஸ்பஷ்டமாகவே சொல்கிறார் வ்யாஸர்:- ஜநநாசௌசத்தில் ஸபிண்டர்களின் ஸ்பர்சம் நிஷித்தமாவதில்லை. இந்த ஸபிண்டர்கள் எல்லோரும் ஸ்நானத்தால் ஸ்பர்சார்ஹர்களாய் ஆகின்றனர். மாதா பத்து

நாட்களால் ஸ்பர்சார்ஹையாகிருள்'' என்று. ப்ராம்ஹத்திலும்:- ப்ராம்ஹண ஸ்த்ரீ, க்ஷத்ரிய ஸ்த்ரீ, வைச்ய ஸ்த்ரீ இவர்கள் ப்ரஸவத்தில் பத்து நாட்களால் ஸ்பர்ச யோக்யைகளாய் ஆகின்றனர். சூத்ர ஸ்த்ரீ பதின்மூன்று நாட்களால் ஸ்பர்சயோக்யையாய் ஆகிருள். சிலர் இவ்விதம் சொல்லுகின்றனர்:- 'ஜநநாசௌசத்தில் ஸூதிகையைத் தவிர்த்த மற்றவரின் ஸ்பர்சம் நிஷித்தமாவதில்லை, என்று ஸ்ம்ருதியிருப்பதால், பத்து நாட்களுக்குப் பிறகும் ஸூதிகையின் ஸ்பர்சம் செய்யத்தகாதது' என்று. அது இல்லை. சொல்லப்பட்ட அநேக ஸ்ம்ருதிகளை அனுஸரித்து இந்த வசநத்திற்குப் பத்து நாட்களுள்ஸூதிகாஸ்பர்சம் நிஷித்தம் என்று விஷயத்தைப்பற்றியதென்று உபபத்தி ஆகுமாதலால். ஆகையால் 'அகாந்தம் ஸ்பர்சமேவ' என்ற சதககாரரின் வசநம் தேசாசார மூலம் என்பது ஸித்தமாகிறது.

आशौचिनामन्योन्यस्पर्श निषेधः ।

आशौचिनामन्योन्यस्पर्शं निषेधति भृगुः – शावाशौचे समुत्पन्ने सूतके च द्विजातिभिः । अन्याशौचवतां स्पर्शो न कर्तव्यो द्विजन्मनाम् । आशौचेप्यन्यदाशौचं स्पृशेद्यदि च कामतः । चरेत् सान्तपनं कृच्छ्रं प्राजापत्यमकामतः । सूतके शावसंस्पर्शे मत्या कृच्छ्रद्वयं चरेत् । अमत्या कृच्छ्रमेकं स्यादित्युवाच बृहस्पतिः इति । स्मृत्यन्तरे तु – परस्याशौचिनः स्पर्शे शावाशौची कथं भवेत् । मत्या सान्तपनं कुर्यादमत्या तु तदर्धकम् । अस्थिसञ्चयनादर्वागेवं शुद्धिर्विधीयते । ऊर्ध्वं त्रिरात्रं विज्ञेयममत्या तु दिनं भवेत् इति ॥ शावाशौचे तु आशौचरहितेन यावदाशौचमाशौचिस्पर्शो न कर्तव्यः । मरणे यावदाशौचं तत्संस्पर्शो निषिध्यते इति स्मरणात् ।

ஆசௌசிகளுக்குப் பரஸ்பரம் ஸ்பர்ச நிஷேதம்.

ஆசௌசிகளுக்குப் பரஸ்பரம் ஸ்பர்சத்தை

நிஷேதிக்கின்றார் ப்ருகு:- சாவாசௌசம் அல்லது ஜநநாசௌசம் உண்டானால் த்விஜர்கள் அந்யாசௌசமுள்ள த்விஜர்களை ஸ்பர்சிக்கக் கூடாது. புத்திபூர்வமாய் ஆசௌசமுள்ளவன் மற்றொரு ஆசௌசியை ஸ்பர்சித்தால், ஸாந்தபன க்ருச்ரத்தை அனுஷ்டிக்கவும். அபுத்தி பூர்வமானால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அனுஷ்டிக்கவும். ஜநநாசௌசமுள்ளவன் சாவாசௌசியைப் புத்திபூர்வமாய் ஸ்பர்சித்தால் இரண்டு க்ருச்ரங்களையும், அபுத்திபூர்வமானால் ஒரு க்ருச்ரத்தையுமனுஷ்டிக்கவும் என்றார் ப்ருஹஸ்பதி. **மற்றொரு ஸ்ம்ருதியிலோவெனில்:-** சாவாசௌசமுள்ளவன் மற்றொரு ஆசௌசியை ஸ்பர்சித்தால் என்ன செய்வது? புத்தி பூர்வமானால் ஸாந்தபனமும், அபுத்திபூர்வமானால் ஸாந்தபநத்தில் பாதியும் அனுஷ்டிக்கவும். அஸ்தி ஸஞ்சயனத்திற்குமுன் இவ்விதம் சுத்தி விதிக்கப்படுகிறது. அஸ்திஸஞ்சயனத்திற்குப் பின்பு ஆனால் மூன்றுநாள் க்ருச்ரம் விதிக்கப்படுகிறது. அபுத்திபூர்வமானால் ஒருநாள் க்ருச்ரம் விதிக்கப்படுகிறது. சாவாசௌசத்தில் ஆசௌசமில்லாதவன், ஆசௌசம் முடியும் வரையில் ஆசௌசியை ஸ்பர்சிக்கக் கூடாது. 'சாவாசௌசத்தில் ஆசௌசம் முடியும் வரையில் ஆசௌசியின் ஸ்பர்சம் நிஷேதிக்கப்படுகிறது' என்று ஸ்ம்ருதியால்.

एकाशौचवतामपि चतुर्दिनपर्यन्तं परस्परस्पर्शं निषेधत्याश्वलायनः – अस्थ्नां सञ्चयनादर्वाक् तत्सपिण्डाः परस्परम् । न संस्पृशेयुरङ्गानि पुत्राश्च प्राग्दशाहतः ॥ अकृतेऽपि चतुर्थेऽह्नि सति सञ्चयने यदि । परस्परं सपिण्डाना मङ्गस्पर्शो विधीयते । सपिण्डाः पञ्चमाहादि स्पृशेयुस्तु परस्परम् । स्वाशौचकालाद्विज्ञेयं स्पर्शनं तु त्रिभागतः । दशाहादि त्रिभागेन कृते सञ्चयने क्रमात् । अङ्गस्पर्शनमिच्छन्ति वर्णानां तत्ववेदिनः । चतुर्थे पञ्चमे वाऽह्नि संस्पर्शः कथितो बुधैः इत्यादीनि

व्यासदेवलादिवचनानि युगान्तरविषयाणि । अस्थिसञ्चयनादूर्ध्व-मङ्गस्पर्शनमेव च इति कलियुगनिषिद्धधर्मेषु स्मरणात् ।

ஒரே ஆசௌசமுள்ளவர்களுக்கும், ஒருவர்க்கொருவர் ஸ்பர்சத்தை நான்கு நாட்கள் வரையில் நிஷேதிக்கின்றார் ஆச்வலாயனர் :— அஸ்தி ஸஞ்சயனத்திற்கு முன்பு, ஸபிண்டர்கள் பரஸ்பரம் அங்கங்களை ஸ்பர்சிக்கக்கூடாது. புத்ரர்கள் தசாஹத்திற்கு முன்பு ஸ்பர்சிக்கக்கூடாது. நாலாவது நாளில் ஸஞ்சயநம் செய்யப்படாவிடினும் ஸபிண்டர்கள் பரஸ்பரம் ஸ்பர்சித்துக்கொள்ளலாம். ஐந்தாவது நாள முதல் ஸபிண்டர்கள் ஒருவரையொருவர் ஸ்பர்சிக்கலாம். அவரவர் ஆசௌச காலத்தில் மூன்றிலொரு பாகத்திற்குப் பிறகு ஸ்பர்சிக்கலாம். எல்லாவர்ணங்களுக்கும், அவரவர்க்கு விஹிதமான பத்து நாள் முதலிய நாட்களின் மூன்றிலொரு பாகத்திற்குப் பிறகு, ஸஞ்சயநமாகியிருந்தால் அங்க ஸ்பர்சத்தை விரும்புகிறார்கள் தர்மக்ஞர்கள்,

यत्त्वङ्गिरसोक्तम् — नाशौचं सूतके प्रोक्तं सपिण्डानां क्रियावताम् इति, अस्यार्थः — क्रियावतां - जन्मदाख्यदेवता-प्रीत्यर्थं पूजादिक्रियावतां पित्रादिसपिण्डानां जन्मदाख्यदेवताया-गानुष्ठानसमये कर्माधिकारलक्षणमाशौचं नास्ति इति । तथा च व्यासः — सूतिकावासनिलया जन्मदा नाम देवताः । तासां यागनिमित्तं तु शुद्धिर्जन्मनि कीर्तिता । प्रथमे दिवसे षष्ठे दशमे चैव सर्वदा । रात्रिष्वेतेषु कुर्वीत पुत्रजन्मनि सूतके । षष्ठेऽह्नि यागं दानं च जन्मदानां तु कारयेत् इति ॥ पूजादानार्थं तेषु दिनेषु तत्समये शुद्धिरित्यर्थः ।

ஆனால், அங்கிரஸ் :— க்ரியாவான்களான ஸபிண்டர்களுக்கு ஸூதகத்தில் அசுத்தி இல்லை என்று

சொல்லியிருப்பதோவெனில், அதற்கு இவ்விதம் பொருள் :- க்ரியாவதாம் - ஜந்மதைகள் என்று பெயருள்ள தேவதைகளின் ப்ரீதிக்காகப் பூஜை முதலிய க்ரியைகளைச் செய்கின்ற பிதா முதலிய ஸபிண்டர்களுக்கு ஜந்மதைகள் என்னும் தேவதைகளின் யாகம் (பூஜை) செய்யும் ஸமயத்தில், கர்மாநதிகார லக்ஷணமான ஆசௌசமில்லை என்று. அவ்விதமே, **வ்யாஸர்** :- ஸூதிகையின் வாஸ க்ருஹத்தில் ஜந்மதைகள் என்ற தேவதைகள் இருக்கின்றனர். அவைகளின் யாகத்திற்காக ஜநநாசௌசத்தில் சுத்தி சொல்லப்பட்டுள்ளது. முதலாவது, ஆறுவது, பத்தாவது நாட்களில் ராத்ரியில் யாகத்தைச் செய்யவும். அப்பொழுது சுத்தி சொல்லப்பட்டுள்ளது. 6-ஆவது நாளில் அந்த ஜந்மதாதேவதைகளுக்க யாகம், தானம் இவைகளைச் செய்ய வேண்டும். பூஜைக்காகவும், தானத்திற்காகவும் அந்தத் தினங்களில் அந்த ஸமயத்தில் சுத்தி என்பது பொருள்.

मार्कण्डेयः— रक्षणीया तथा षष्ठ्यां निशायां तु विशेषतः । रात्रौ जागरणं कार्यं जन्मदानां तथा बलिः ॥ पुरुषाः शस्त्रहस्ताश्च तत्र गीतैश्च योषितः । रात्रौ जागरणं कुर्युर्दशम्यां चैव सूतके इति । बृहस्पतिः – जन्मतः पञ्चमं तारं याते चन्द्रे शिशुं पिता । भूषयेत् भूषणैः सर्वैः पञ्चायुधसमन्वितैः । विशेषात् कन्यकायाश्च कर्तव्यं मङ्गलं तथा । तत्र सायुधमाकल्पमायुः श्रीकान्तिदं शिशोः इति ॥ नारदश्च – जननात् सप्तमे चाह्नि मृत्युरायाति घातुकः । तद्दिने चैव रक्षेयं कर्तव्याऽऽयुर्विवृद्धये । सायाह्ने पूज्य विघ्नेशमपूपैश्च पृथग्विधैः इति ।

மார்க்கண்டேயர் :- ஜநநத்தில் ஆறுவது ராத்ரியில் விசேஷமாய் ஸூதிகையைக் காக்க வேண்டும். ஜாகரணம் செய்ய வேண்டும். ஜந்மதா தேவதைகளுக்குப் பலியிட வேண்டும். ஆயுத பாணிகளான புருஷர்களும், பாட்டுடன்

கூடிய ஸ்த்ரீகளும் ராத்ரியில் விழித்திருக்க வேண்டும். பத்தாவது ராத்ரியிலும் இப்படியே, ப்ருஹஸ்பதி :- சிசுவின் ஜன்ம நக்ஷத்ரத்திலிருந்து ஐந்தாவது நக்ஷத்ரத்தைச் சந்த்ரன் அடைந்திருக்கும்போது, பிதா சிசுவைப் பஞ்சாயுதங்களுடன் கூடிய ஆபரணங்களெல்லாவற்றாலும் அலங்கரிக்க வேண்டும். இந்த மங்களத்தை ஸ்த்ரீ சிசுவிற்கு அவச்யம் செய்ய வேண்டும். பஞ்சாயுதங்களுடன் கூடிய அலங்காரம், சிசுவிற்கு ஆயுள், ஸம்பத், காந்தி இவைகளைக் கொடுப்பதாகின்றது. நாரதரும் :- சிசு பிறந்த ஏழாவது நாளில் ஹிம்ஸிப்பவனான ம்ருத்யு வருகிறான். ஆகையால் அந்தத் தினத்தில், ஆயுர்வ்ருத்திக்காக இந்த ரக்ஷையைச் செய்ய வேண்டும். ஸாயங்காலத்தில் பல விதமான அப்பங்களால் விக்னேச்வரனைப் பூஜிக்க வேண்டும்.

मार्कण्डेयः — अग्न्यम्बुहीने च तथा निर्धूमे सूतिकागृहे । अदीपशस्त्रमुसले भूतिसर्षपवर्जिते । क्षणे प्रध्वंसिनी बालमपहन्त्यात्मसंभवम् । सा जातहारिणी नाम तद्रक्षेत् सूतिकागृहम् इति । प्रथमदिवसे जातकर्मादिनिमित्ता शुद्धिर्भवति । तथा च वृद्धयाज्ञवल्क्यः – कुमारजन्मदिवसे विप्रैः कार्यः प्रतिग्रहः । हिरण्यभूगवाश्वाजवासोधान्य धनादिषु । तत्र सर्वं प्रतिग्राह्यं कृतान्नं तु न भक्षयेत् । भक्षयित्वा तु तन्मोहात् द्विजश्चान्द्रायणं चरेत् इति ॥ इति प्रसवाशौचम् ।

மார்க்கண்டேயர் :- அக்நி, ஜலம், புகை, தீபம், ஆயுதம், உலக்கை, பஸ்மம், கடுகு இவைகள் இல்லாமலிருக்கும் ஸூதிகா க்ருஹத்தில், ப்ரத்வம்ஸிநீ என்றும், ஜாதஹாரிணீ என்றும் சொல்லப்படும் தேவதை சிசுவை ஸம்ஹரிப்பாள். ஆகையால் ஸூதிகாக்ருஹத்தை ரக்ஷிக்க வேண்டும். ப்ரதமதினத்தில் ஜநகனுக்கு ஜாதகர்மாதிகள் செய்வதற்காகச் சுத்தி உண்டாகிறது. அவ்விதமே, **வ்ருத்த யாஜ்ஞவல்க்யர்** :- புத்ரன் பிறந்த தினத்தில், ப்ராஹ்மணர்கள் ப்ரதிக்ரஹம் செய்யலாம்.

பொன், பூமி, பசு, குதிரை, ஆடு, வஸ்த்ரம், தான்யம், தனம் முதலியவைகளுள் எதையும் ப்ரதிக்ரஹிக்கலாம். பக்வான்னத்தைப் புஜிக்கக் கூடாது. அறியாமையால் அதைப் புஜித்தால் ப்ராஹ்மணன் சாந்த்ராயணம் அநுஷ்டிக்க வேண்டும்.

दशाहान्तर्गत शिशुमरणाशौचम्।

अन्तर्दशाहे जातमृतौ मृतजाते च सपिण्डानां सद्यः शौचमाह बृहद्विष्णुः – जाते मृते मृते जाते कुलस्य सद्यः शौचम् इति । शङ्खोऽपि – प्राङ्नामकरणात् सद्यः शौचम् इति ।। पारस्करः – जीवन् जातो यदि प्रेयात् सद्य एव विशुद्ध्यति इति । कात्यायनोऽपि – अनिर्वृत्ते दशाहे तु पञ्चत्वं यदि गच्छति । सद्य एव विशुद्धः स्यान्न प्रेतं नोदकक्रिया इति । न प्रेतं नैव सूतकमिति पाठान्तरम् । तदग्रे वक्ष्यते ।। मातापित्रोस्तु दशाहमुक्तं वरदराजीये – मृतजाते जातमरणे वा सर्वास्ववस्थासु मातापित्रोर्दशाहमाशौचम् इति ।।

பத்து நாட்களுக்குள்பட்ட சிசு மரணத்தில் ஆசௌசம்

பத்து நாட்களுள் பிறந்து இறந்தாலும், இறந்து பிறந்தாலும் ஸபிண்டர்களுக்கு ஸத்யச் சௌசத்தைச் சொல்லுகிறார் **ப்ரஹத்விஷ்ணு** :- சிசு பிறந்து இறந்தாலும், இறந்து பிறந்தாலும் ஸபிண்ட குலத்திற்கு ஸத்யச் சௌசம். **சங்கரும்** :- நாமகரணத்திற்கு முன்பு (சிசு இறந்தால்) ஸத்யச் சௌசம். **பாரஸ்கரர்** :- பிழைத்துப் பிறந்த சிசு மரித்தால் ஸத்யச் சுத்தி. **காத்யாயனரும்** :- பத்து நாட்கள் முடிவதற்குள் சிசு மரித்தால் ஸத்யச் சௌசமே, ஆசௌசமில்லை. உதக க்ரியையும் இல்லை. 'ந ப்ரேதம் நைவ ஸூதகம்' என்றுமொரு பாடமுண்டு. அதுமேல் சொல்லப்படும். மாதா பிதாக்களுக்கோவெனில் பத்து நாள் ஆசௌசம் சொல்லப்பட்டுள்ளது. **வரதராஜீயத்தில்** :- இறந்து பிறந்தாலும், பிறந்து மரணமானாலும் எல்லா

அவஸ்தைகளிலும் மாதா பிதாக்களுக்குப் பத்துநாள் ஆசௌசம்.

तथा च बृहस्पतिः – जातमात्रे मृते वापि दशाहात् पितरौ शुची । कृते नाम्नि सनाभीनां दशरात्रमघं भवेत् । भिन्नोदराणां भ्रातॄणां जातदन्ते मृते त्वघम् । दशाहं कृतचौले तु दत्तादीनां विधीयते इति । पैङ्गोऽपि – जात उभयोः कृते नाम्नि सोदरभ्रातॄणाम् इति । पितृव्यतिरिक्तज्ञातीनां सद्यः शौचविधानं शिशुमरण-निमित्तस्याशौचस्य स्नानाच्छुद्धिप्रतिपादनपरम् । न प्रसव-निमित्तस्य । तत्तु दशाहमस्ति । तथा च बृहन्मनुः – दशाहाभ्यन्तरे बाले प्रमीते तस्य बान्धवैः । शावाशौचं न कर्तव्यं सूत्याशौचं विधीयते इति । बान्धवैः सपिण्डैः शावाशौचं न कर्तव्यं पितृवद्दीर्घकालं न कर्तव्यम् । किन्तु, सद्य एव । सूत्याशौचं तु दशाहं विधीयत इत्यर्थः ।

அவ்விதமே **ப்ருஹஸ்பதி** :– பிறந்தவுடன் சிசு மரித்தாலும், மாதா பிதாக்கள் பத்து நாட்களால் சுத்தராகின்றனர். நாமகரணத்திற்குப் பிறகு சிசு மரித்தால் ஜ்ஞாதிகளுக்குப் பத்து நாள் ஆசௌசம் உண்டு. பின்னோதர ப்ராதாக்களுக்குப் பல் முளைத்த பிறகு சிசு இறந்தால் ஆசௌசம். சௌளமான பிறகு பாலன் மரித்தால் தத்தன் முதலியவர்க்கு 10-நாள் ஆசௌசம் விதிக்கப்படுகிறது. **பைங்கரும்** :- பிறந்தவுடன் இறந்தால் மாதா பிதாக்களுக்கும், நாமகரணத்திற்குப் பிறகு இறந்தால் ஸஹோதர ப்ராதாக்களுக்கும் ஆசௌசம். பிதாவைத் தவிர்த்த ஜ்ஞாதிகளுக்கு ஸத்யச் சௌசமென்றது சிசுமரண நிமித்தமான ஆசௌசத்திற்கு ஸ்நாநத்தால் சுத்தி என்பதைச் சொல்வதில் தாத்பர்யமுள்ளதல்ல. ப்ரஸவநிமித்தா சௌசத்திற்குச் சுத்தியென்று சொல்வதில் தாத்பர்ய முள்ளதல்ல. ப்ரஸவ நிமித்தாசௌசமோ பத்து நாட்களுமுள்ளது. அவ்விதமே, **ப்ருஹன்மனு** :- பத்து

நாட்களுள் பாலன் மரித்தால் ஜ்ஞாதிகள் சாவாசௌசம் அநுஷ்டிக்க வேண்டியதில்லை. ஸத்யா சௌசமே விதிக்கப்படுகிறது. ஸபிண்டர்கள் சாவாசௌசமநுஷ்டிக்க வேண்டாம் - பிதாவைப் போல் தீர்க்ககாலம் அநுஷ்டிக்க வேண்டாம். ஆனால் ஸத்யச் சௌசமே. ப்ரஸவாசௌசம் மட்டில் பத்துநாள் விதிக்கப்படுகிறது என்று பொருள்.

विज्ञानेश्वरोऽपि – मृतजनने जातमृतौ च सपिण्डानां जननिमित्तमाशौचं पूर्णम् । जातमृते मृतजाते वा सपिण्डानां दशाहम् इति हारीतस्मरणात् इति ।। पारस्करोऽपि – अन्तः सूतके चेदोत्थानादाशौचं सूतकवत् इति । ओत्थानात् - आ सूतिकाया उत्थानात्, दशाहमिति यावत् । सूतकवदिति शिशूपरति-निमित्तोदकदानवर्जमित्यर्थः । आपस्तम्बोऽपि – अन्तः सूतके चोत्थानादाशौचं सूतकवन्मृते तस्मिन्नेव बाले तु सद्यः शौचं नात्रोदकम् इति । अस्यार्थः - यस्मिन् जाते सूतकं प्रवृत्तम्, तत्सूतक मध्ये तस्मिन्नेव बाले मृते मातापित्रोः सूतक-वदोत्थानादाशौचं सपिण्डानां जननिमित्तमोत्थानान्मरण-निमित्तं पित्रादीनाम्, न प्रेतायोदकदान मित्यर्थः ।। व्याघ्रोऽपि – अन्तर्दशाहे जातस्य मरणं यदि सम्भवेत् । सद्यः शौचं सपिण्डानां सूतकं तु प्रवर्तते । गर्भे यदि विपत्तिः स्याद्दशाहं सूतकं भवेत् । मृतके स्नानतः शुद्धिः सपिण्डानां तु सर्वशः इति ।

விஜ்ஞானேச்வரரும் :- இறந்து பிறந்தாலும், பிறந்து இறந்தாலும் ஸபிண்டர்களுக்கு ஜனன நிமித்தாசௌசம் பூர்ணமாய் உண்டு. இவ்விதமே ஹாரீதஸ்ம்ருதி யிருப்பதால். **பாரஸ்கரரும்** :- ஸூதகமத்யத்தில் சிசு ம்ருதியானால் பத்து நாள் வரையில் ஆசௌசம். ஸூதகவத் - சிசும்ருதி நிமித்தமான உதகதானமில்லை என்று பொருள். **ஆபஸ்தம்பரும்** :- எந்தச் சிசு பிறந்ததால் ஆசௌசம் ப்ரவர்த்தித்ததோ, அந்த ஜநநாசௌசமத்யத்தில் அதே சிசு

இறந்தால் மாதா பிதாக்களுக்கு ஸூதகம்போல் பத்துநாள் வரையில் ம்ருதா சௌசம். ம்ருதி நிமித்தா சௌசமல்லை, ஜனன நிமித்தமுள்ளதே. ஸபிண்டர்களுக்கு ஸத்யச் சௌசம், உதகதானமில்லை. வ்யாக்ரரும் :- ஜநநா சௌசமத்தியில் பிறந்த சிசு மரித்தால் ஸபிண்டர்களுக்கு ஸத்யச் சௌசம், ஜநநாசௌசமுள்ளதே. கர்ப்பத்தில் சிசு மரித்தாலும் பத்து நாள் ஜநநாசௌசமுண்டு. ம்ருதாசௌசத்திற்கு ஸ்நானத்தால் சுத்தி எல்லா ஸபிண்டர்களுக்கும்.

अत्र विज्ञानेश्वरः – एवमादि वचन पर्यालोचनया जनन निमित्ताशौच सङ्कोचो नास्तीत्यवगम्यते इति । नन्वेवं दशाहं जनननिमित्ताशौचस्य सत्त्वे मरणनिमित्ताशौचस्य निषेधे कोऽतिशयः? उच्यते। सद्यश्शौचे तु तावत् स्यादाशौचं संस्थितस्य तु। यावत् स्नानं न कुर्वन्ति इति शिशूपरमनिमित्तं तत्कालस्नान-मेकोऽतिशयः। दशाहपर्यन्तमस्पृश्यत्वाभावोऽपरः। तारतम्यं च स्मर्यते – सूतकात् द्विगुणं शावं शावाद्द्विगुण-मार्तवम्। आर्तवाद्विगुणं सूतिस्ततोऽपि शवदाहकः इति ॥ किञ्च, सपिण्डानां जनननिमित्ताशौचवन्मरणनिमित्तस्यापि दशाहाभ्युप-गमे दशमदिनमृतौ तदूर्ध्वमप्याशौचप्रसङ्गः। तथा हि – अनिर्दशाहे जनने पश्चात्स्यान्मरणं यदि। प्रेतमुद्दिश्य कर्तव्यं तत्राशौचं स्वबन्धुभिः इति अङ्गिरःस्मरणेन जन्मदिनादूर्ध्वं द्वितीयादिदिने शिशुमरणे दशाहादूर्ध्वमपि प्राप्तस्य मरणाशौचस्य अन्तर्दशाहे जातस्य शिशोर्निष्क्रामणं यदि। सूतकेनैव शुद्धिः स्यात् पित्रोः शातातपोऽब्रवीत् इति, दशाहाभ्यन्तरे बालः कदाचिन्म्रियते यदि। शावाशौचं न कर्तव्यं सूत्याशौचेन शुद्ध्यति। दशाहान्तर्गते बाले शुद्धिः स्याज्जन्मना सह। अन्तर्दशाहोपरतस्या सूतिकाहोभिरेवा-शौचम् इति व्याघ्र यमशङ्खस्मृत्यन्तर वचनैर्यद्यपि बाधः सिद्ध्यति,

तथाऽपि – 'तच्चेदन्तः पुनरापतेत्तच्छेषेण शुद्ध्येरन् रात्रिशेषे द्वाभ्यां प्रभाते तिसृभिः इति गौतमस्मरणात् सूतकान्तिमदिने शिशुमृतौ तत्परं द्व्यहमाशौचम्, प्रभातमरणे त्र्यहम्, पित्रोरिव पूर्णाघित्वे सपिण्डानामपि प्रसज्येत । तस्माज्जनननिमित्त-पूर्णाशौचस्य मरणनिमित्तस्य सद्यः शौचस्य च महान् फलभेदः ।

இதில் விஜ்ஞாநேச்வரர் :- இது முதலிய வசனங்களின் ஆலோசனையினுல் ஜனன நிமித்தமான ஆசௌசத்திற்கு ஸங்கோசமில்லை என அறியப்படுகிறது என்ருர். இவ்விதம் பத்து நாள் வரையில் ஜனன நிமித்தமான ஆசௌசமிருக்கும்போது, மரண நிமித்தாசௌசமில்லையென்று நிஷேதிப்பதில் விசேஷமென்ன? சொல்லப்படுகிறது – "ஸத்யச் சௌசம் என்று சொல்லியவிடத்தில் இறந்தவனின் விஷயமான ஆசௌசம் ஸ்நானம் செய்யும் வரையிலுண்டு'' என்ற வசனத்தால், சிசு மரண நிமித்தமாகத் தத்காலத்தில் ஸ்நானமென்பது ஒரு விசேஷம். பத்துநாள் வரையில் அஸ்ப்ருச்யத்வமில்லை என்பது மற்ருெரு விசேஷம். இரண்டு ஆசௌசங்களுக்கும் தாரதம்யம் சொல்லப்படுகிறது. ஜநநாசௌசத்தைவிட இரண்டு மடங்குள்ளது சாவாசௌசம். சாவத்தை விட இரண்டு மடங்குள்ளது ஆர்த்தவம். அதை விட இரண்டு மடங்குள்ளது ப்ரஸவம். அதைவிட இரண்டு மடங்கு அசுத்தன் சவதாஹகன் என்று. தவிர, ஸபிண்டர்களுக்கு ஜநந நிமித்தாசௌசம்போல் மரண நிமித்தாசௌசமும் பத்துநாள் என்று ஒப்பினுல், பத்தாவது நாளில் சிசுவின் ம்ருதி ஏற்பட்டால் அதற்குப் பிறகும் ஆசௌசம் ப்ரஸக்தமாகும். அவ்விதமே - ஜநநாசௌசம் பத்து நாள் முடிவதற்குள் சிசுவின் ம்ருதியாலுல் மரணத்தை உத்தேசித்துப் பந்துக்கள் ஆசௌசம் அனுஷ்டிக்க வேண்டும் என்றுள்ள அங்கிரஸ் ஸ்ம்ருதியினுல், ஜன்ம தினத்திற்குமேல் இரண்டாவது முதலிய தினத்தில் சிசு

மரணமானால் பத்து நாட்களுக்குப் பிறகும் ப்ராப்தமாகும் மரணாசௌசத்திற்கு, பிறந்த சிசு பத்து நாட்களுக்குள் மரித்தால், மாதா பிதாக்களுக்கு ஜனனாசௌசத்துடனேயே சுத்தி என்று சாதாதபர் சொன்னார்' என்றும், 'சிசு பிறந்த பத்து நாட்களுக்குள் இறந்தால் சாவாசௌசம் அனுஷ்டிக்க வேண்டாம், ஜனனாசௌசத்தாலேயே சுத்தி' என்றும், பத்து நாட்களுக்குட்பட்ட பாலன் மரித்தால் ஜனனாசௌத்துடனே சுத்தி என்றும், 'பத்து நாட்களுக்குள் இறந்த சிசுவின் விஷயத்தில் ஜனனாசௌச தினங்கள் வரையிலேயே ஆசௌசம்' என்றுமுள்ள வ்யாக்ர-யம-சங்க-வசனங்களாலும், ஸ்ம்ருத்யந்தர வசனத்தாலும் பாதம் ஸித்திக்கின்றதுதான். ஆனாலும், 'தத்சேதந்த: + திஸ்ருபி:'' என்று கௌதம ஸ்ம்ருதியால் ஜனனாசௌசத்தின் கடைசி தினத்தில் சிசு மரித்தால் அதற்குப் பிறகு, இரண்டு நாட்களாசௌசமும், விடியற் காலத்திலானால், மூன்று நாட்கள் ஆசௌசமும், மாதா பிதாக்களுக்குப் போல் பூர்ணாசௌசிகளென்றால் ஸபிண்டர்களுக்கும் ப்ரஸக்தமாகும். ஆகையால் ஜனன நிமித்தமான பூர்ணாசௌசத்திற்கும், மரண நிமித்தமான ஸத்யச் சௌசத்திற்கும் பலனில் பேதம் பெரியது.

अत एव सङ्ग्रहे – सूतकान्तस्तु जातस्य मृतौ शिष्टाह मिष्यते। पितुस्तु द्व्यहमन्त्याहे तत् प्रभाते त्र्यहं भवेत् इति । अयमर्थः – सूतकमध्ये जातस्य मृतौ सपिण्डानां जननिमित्तमघं शिष्टाहं भवति। मरणनिमित्तं तु सद्यः। जात उभयोरिति स्मरणात् जातशिशुमृतौ पित्रोः सदा पूर्णाघित्वेऽपि सूतकेनैव शुद्धिः स्यात् पित्रोः शातातपोऽब्रवीत् इति वचनबलात् सूतकशेषेणैव मरणाशौचस्यापि निवृत्तिः । सूतकान्तिमदिने तु तन्मृतौ तत्परं पितुर्द्व्यहमाशौचम् । प्रभाते - अरुणोदयकाले त्र्यहम् । यद्यपि मातुरप्येवम्, तथापि, तस्या दशाहात् परमपि सूतकस्य सत्त्वात् पितृमात्रस्य द्व्यहत्र्यहविधानम् । अत्र तुशब्दो ज्ञातीनां

द्व्यहत्र्यहविनिवर्तकः । पितृग्रहणात् भ्रातृव्युदासः । कृते नाम्नि सोदराणाम् इति । दशाहात् परमेव भ्रातुर्मरणाशौचविधानात् इति ।

ஸங்க்ரஹத்தில் :- 'ஸூதகாந்தஸ்து + பவேத்' என்றுள்ளது. இந்த ச்லோகத்தின் பொருள் இவ்விதம் - ''ஜனனா சௌச மத்தியில் பிறந்த சிசு மரித்தால் ஸபிண்டர்களுக்கு ஜநந நிமித்தா சௌசம் பாக்கியுள்ள நாட்கள் வரையுண்டு. சிசு மரண நிமித்தா சௌசத்திற்கு ஸத்யச் சுத்தி. 'ஜாத உபயோ:' என்ற ஸ்ம்ருதி வசனத்தால் பிறந்த சிசுவின் ம்ருதியின் மாதாபிதாக்களுக்கு எப்பொழுதும் பூர்ண சௌசமானாலும், 'ஸூதகேனைவ + அப்ரவீத்' என்ற வசனத்தின் பலத்தால் ஜநநாசௌச சேஷத்துடனேயே மரண சௌசத்திற்கும் நிவ்ருத்தி. ஜநநத்தின் 10வது தினத்தில் சிசு மரித்தாலோ அதற்குப் பிறகு பிதாவுக்கு இரண்டு நாட்களா சௌசம். விடியற்காலத்தில் அருணோதயத்திலானால் மூன்று நாட்கள் ஆசௌசம். மாதாவுக்கும் இவ்விதமேதான் ஆசௌசம். ஆனாலும், 10 நாட்களுக்குப் பிறகும் அவளுக்கு ஸூதகமிருப்பதால், பிதாவுக்கு மட்டில் இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் என்று விதிக்கப்பட்டது. இங்கு 'பிதுஸ்து' என்பதிலுள்ள 'து' சப்தம் ஜ்ஞாதிகளுக்கு இரண்டு நாட்கள் மூன்று நாட்கள் என்பதை நிவர்த்திக்கின்றது. பித்ரு சப்தத்தை க்ரஹித்ததால் ப்ராதாக்களுக்கு நிவ்ருத்தி. 'நாமகரணத்திற்குப் பிறகு ஸஹோதரர்களுக்கு' என்ற வசனத்தால், பத்து நாட்களுக்குப் பிறகே ப்ராதாவுக்கு மரணசௌசம் விதிக்கப்பட்டிருப்பதால்' என்று (ஸங்க்ரஹ வசனத்தின் பொருள்).

यत्तु सोदराणामपि दशाहाशौचमुक्तं व्याघ्रेण – बाले मृते सपिण्डानां सद्यः शौचं विधीयते । दशाहेनैव दम्पत्योः सोदराणां तथैव च इति, तद्दशाहानन्तरबालमरणविषयम् । चन्द्रिकायां तु – दशाहेनेति जन्मदिनमृतबालविषयम् इति ।। जन्मदिनादूर्ध्वं मृतबालविषयेऽपि व्याघ्रः – अन्तर्दशाहे जातस्य शिशोर्निष्क्रमणं

यदि । सूतकेनैव शुद्धिः स्यात् पित्रोः शातातपोऽब्रवीत् इति ॥ पित्रोरिति सोदरभ्रातॄणामुपलक्षणार्थम् ॥ यत्तु पैङ्गवचनम् – जात उभयोः कृते नाम्नि सोदरभ्रातॄणां च इति । तत्र कृते नाम्नीति नामकरणदिनस्य दशमस्योपलक्षणार्थम् । एवं चायमर्थः - जाते शिशौ जन्मदिने प्रेते मातापित्रोः सोदरभ्रातॄणां च दशाहमाशौचम् । कृते नाम्नि नामकरणदिने दशमे मृते सति पूर्वोक्तानामेवाहोरात्र माशौचम् इति ।

ஆனால், ஸஹோதரர்களுக்கும் பத்து நாட்கள் ஆசௌசம் சொல்லப்பட்டுள்ளதே வ்யாக்ரரால் :- 'பாலன் மரித்தால் ஸபிண்டர்களுக்கு ஸத்யச் சௌம். மாதாபிதாக்களுக்கும், ஸஹோதரர்களுக்கும் பத்து நாட்கள் ஆசௌசம்' என்ற வசனத்தால் எனில், அந்த வசனம் பத்து நாட்களுக்கு மேல்பட்ட பாலனின் மரணத்தைப் பற்றியது. சந்த்ரிகையிலோவெனில்:- 'தசாஹேன' என்பது ஜனன தினத்தில் மரித்த பாலனைப் பற்றியது' என்று. ஜநநத்திற்குப் பிறகு இறந்த பாலன் விஷயத்திலும், வ்யாக்ரர்:- 'பத்து நாட்களுள் பிறந்த சிசு இறந்தால் மாதா பிதாக்களுக்கு ஜநநாசௌசத்தாலேயே சுத்தி என்றார் சாதாதபர்' என்றார். இங்கு 'பித்ரோ:' என்றது ஸஹோதர ப்ராதாக்களுக்கும் உபலக்ஷணமாகும். பைங்கர்:- ' பிறந்த சிசு மரித்தால் மாதா பிதாக்களுக்கு ஆசௌசம், நாமகரணமான பிறகு மரித்தால் ஸஹோதரப்ராதாக்களுக்கும்' என்றாரே எனில், அதில் 'க்ருதே நாம்நி' என்றது நாமகரணதினமான பத்தாவது தினத்திற்கும் உபலக்ஷணமாகும். இவ்விதம் இருப்பதால் பலிதமான அர்த்தம் இதுவாகும்- 'பிறந்த சிசு பிறந்த தினத்திலேயே மரித்தால் மாதா பிதாக்களுக்கும், ஸோதரப்ராதாக்களுக்கும் பத்து நாட்கள் ஆசௌசம். நாமகரணமான பிறகு நாமகரண தினமாகிய 10-ஆவது நாளில் மரித்தால் முன் சொல்லியவர்களுக்கே ஒரு நாள் ஆசௌசம்'' என்று.

तथा च शङ्खः – दशमान्तर्गते बाले शुद्धिः स्याज्जन्मना सह इति । अयमर्थः दशमान्तः - दशाहमध्ये, बाले गते - प्रेते जन्माशौचशुध्या सह मातापित्रोः सोदरभ्रातॄणां च शुद्धिः स्यात् इति । ओत्थानादाशौचमिति वदन्नापस्तम्बोऽपि, 'अन्तः सूतके दशमदिनेऽपि शिशुमरणे तद्दिन एवाशौचम्, न पुनरहःशेषे द्वाभ्यां प्रभाते त्र्यहमित्यादिको विशेषोऽत्रेति दर्शयति । एवं च जन्मदिने शिशुमरणे पित्रोः सोदरभ्रातॄणां च मरणनिमित्तमाशौचं दशाहम् । द्वितीयादिदिनेषु दशमदिनेऽपि मरणे शिष्टाहमेवा-शौचम् । प्रसवाशौ चेनैव सर्वदा शुद्धिरिति चन्द्रिकोक्तनिष्कर्षः । स्मृतिरत्नमाधवीयादावपि भ्रातॄणां व्याघ्र वचनानुसारेणाशौच-मुक्तम् । यथादेशाचारमत्र व्यवस्था ।

அவ்விதமே, சங்கர்:- 'தசமாந்த: +ஸஹ' என்றார். இதன் பொருள்-''பத்து நாட்களுள் பாலன், கதே - இறந்தால், ஜநநாசௌசசுத்தியுடனேயே மாதா பிதாக்களுக்கும் ஸஹோதர ப்ராதாக்களுக்கும் சுத்தி உண்டாகின்றது'' என்று. 'ஓத்தாநாதாசௌசம்' என்று சொல்லும் ஆபஸ்தம்பரும், ஜநநாசௌசமத்தியில் 10-ஆவது தினத்தில் சிசு மரித்தாலும் அன்று மட்டில் ஆசௌசம். 'பத்தாவது நாளிலானால் 2-நாட்கள், விடியற்காலத்திலானால் மூன்று நாட்கள்' என்பது முதலிய விசேஷம் இல்லை இங்கு என்று தெரிவிக்கின்றார். இவ்விதமிருப்பதால், பிறந்த தினத்தில் சிசு மரித்தால், மாதா பிதாக்களுக்கும், ஸஹோதர ப்ராதாக்களுக்கும் மரண நிமித்மான ஆசௌசம் 10-நாட்கள். இரண்டாவது முதலிய தினங்களில் மரித்தாலும், பத்தாவது தினத்தில் மரித்தாலும் பாக்கியுள்ள தினம் வரையிலேயே ஆசௌசம். ப்ரஸவாசௌசத்தினாலேயே எப்பொழுதும் சுத்தி என்பது சந்த்ரிகையில் சொல்லப்பட்டுள்ள நிர்ணயம். ஸ்ம்ருதிரத்னம், மாதவீயம் முதலியவைகளிலும் ப்ராதாக்களுக்கு வ்யாக்ரவசனத்தை அனுஸரித்து

ஆசௌசம் சொல்லப்பட்டுள்ளது. தேசாசாரத்தை அநுஸரித்து இவ்விஷயத்தில் வ்யவஸ்தையை அறியவும்.

अत्र विज्ञानेश्वरः – यत्तु बृहन्मनुवचनम् – जीवन् जातो यदि ततो मृतः सूतक एव तु। सूतकं सकलं मातुः पित्रादीनां दिनत्रयम्, इति, यच्च बृहत् प्रचेतोवचनम् – मुहूर्तं जीवितो बालः पञ्चत्वं यदि गच्छति। मातुः शुद्धिर्दशाहेन सद्यः शौचास्तु गोत्रिणः इति, तत्र इयं व्यवस्था – जननानन्तरं नाभिवर्धनात् प्राङ्मृतौ पित्रादीनां जननिमित्तमाशौचं दिनत्रयम्। सद्यः शौचं त्वग्निहोत्राद्यर्थम्, अग्निहोत्राद्यर्थं स्नानोपस्पर्शनात्तत्कालं शौचम् इति शङ्खवचनात्। नाभिवर्धनोत्तरकालं तु शिशुप्रयाणे जननिमित्तमाशौचं संपूर्णं सपिण्डानाम्, यावन्न च्छिद्यते नालं तावन्नाप्नोति किल्बिषम्। छिन्ने नाले ततः पश्चात् सूतकं तु विधीयते इति जैमिनिस्मरणात् इति।

ஆகையால், இவ்விதம் மரணாசௌசம் ஸபிண்டர்களுக்கு. ஸத்ய:, அப்போதே. மாதா பிதாக்களுக்குப் பத்து நாட்கள், ஜநநாசௌசம் எல்லோருக்கும் பத்து நாட்கள் என்று நிலைத்தது. இதில், விஜ்ஞாநேச்வரர்:- "ஜீவனுடன் பிறந்து, பிறகு ஸூதகமத்தியிலேயே சிசு மரித்தால் மாதாவுக்குப் பூர்ணாசௌசமும், பிதா முதலியவர்களுக்கு மூன்று நாட்கள்" என்ற ப்ருஹந்மநு வசநமும், "ஒரு முஹூர்த்தம் ஜீவித்திருந்து பாலன் இறந்தால், மாதாவுக்குப் பத்து நாட்களால் சுத்தி, ஸபிண்டர்களுக்கு ஸத்யச்சுத்தி" என்ற ப்ருஹத்ப்ரசேதோ வசநமும் உள்ளதே எனில், அதில் மேல் வருமாறு நிர்ணயம். அதாவது- "ஜநநத்திற்குப் பிறகு நாபிநாளச் சேதத்திற்கு முன் பாலன் மரித்தால் பிதா முதலியவர்களுக்கு ஜநநநிமித்தமான ஆசௌசம் மூன்று நாட்கள், ஸத்யச் சௌசமோவெனில், அக்னிஹோத்ரம் முதலியதற்காக. "அக்நிஹோத்ரம் முதலியதற்காக

ஸ்நாஞசமனங்களால் தத்காலத்தில் சுத்தி'' என்று சங்கவசனத்தால். நாளச் சேதத்திற்குப் பிறகு சிசு ம்ருதியாஞல் ஜநநநிமித்தமான ஆசௌசம் ஸம்பூர்ணம் ஸபிண்டர்களுக்கு. நாளச்சேதம் செய்யப்படாத வரையில் ஆசௌசம் வருவதில்லை. நாளம் சேதிக்கப்பட்ட பிறகே ஸூதகம் விதிக்கப்படுகிறது என்று ஜைமிநிஸ்ம்ருதியால்'' என்பது.

